# உங்களுக்கான பிரசங்கக் குறிப்புகள்

**ஜே.சி. சோட்**

**World Evangelism Publications**

Winona / Singapore / New Delhi / Cape Town / Madurai

Sermon Outlines (Tamil)
@ Copyright 2010
KIRUBAIYULLA VARTHAI®

First Printing : 2010

Copies : 1000

Translation & Layout : Kingsly Rajah

Proof Reading : Antony Rajah

Publisher : P.C. Philemon Rajah M.Th.,
(Director - J.C. School of Evangelism)

For Copies : J.C. School of Evangelism

45/C/1, Church Lane, Coronation Street
Arasaradi, Madurai - 625 016
Phone : 0452 - 2607026, Cell : 92442 14421
Website : www.graciousword.org
Email : pcpr@graciousword.org

# உங்களுக்கான பிரசங்கக் குறிப்புகள்

## அறிமுகம்

நீங்கள் ஒரு பிரசங்கியாராயிருந்து, ஏதாவது குறிப்புகளை தேடுகிறவனால், உங்களுக்குத் தேவையான புத்தகம் இதுவே ! தற்காலிக சூழ்நிலைகளையும், பிரச்சனைகளையும் சந்திக்கும்படி இவை அநேக தலைப்புகளில் உள்ளன.

நீங்கள் வாசித்துள்ள வேறு எந்த பிரசங்கக் குறிப்புகள் புத்தகத்துடன் இது ஒத்துப்போகுமானால் (ஒரே மாதிரி இருக்குமானால்) அது தற்செயலானதே. எந்த ஒரு வாக்கியம் அல்லது வார்த்தையும் கூட நீங்கள் காணும் இந்தப் புத்தகத்தின் உபயோகத்திற்கென்று வேறு யாருடைய புத்தகத்திலிருந்தும் தெரிந்தே எடுத்து பயன்படுத்தப் படவில்லை. ஆனாலும் கருத்துக்களும், எண்ணங்களும் அநேக காஞ்சியங்களில் இருந்து எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரசங்கக் குறிப்பு புத்தகத்தின் முழு நன்மையையும் பெறும்படி, இதை உங்களுடைய வேதாகமத்துடன் கூட பயன்படுத்துங்கள். இதை உங்களுடைய தாக்கிக் கொண்டு, உங்களுக்காகவே வரிசைப்படுத்திக் கொண்டு, நேர்மையாக மற்றவர்க்கு பிரசங்கியுங்கள்; அப்பொழுது நீங்கள் அதிக மகிழ்ச்சியடைவீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த காரணத்திற்காகத்தான் நான் இவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**J.C. Choate**

*This Book Dedicated to*

# "EMPOWER EVANGELISM"



*In Loving Memory of*

**Bro. J.C. CHOATE**

(Founder - World Evangelism, USA)

Who served the lord for 59 Years Through his Simplicity and Dynamic Faith for New Testament Teachings



*And also in Memory of*

**Bro. A.G. PACKIYANATHAN**

**&**

**Sis. JAMILA KANAKAMBARAM**

Both as Husband & Wife Served the lord for 25 Years and who taught me the Truth, and made me Ordinary Servand of lord Jesus Christ.



# பதிப்பாசிரியரிடமிருந்து...

பிரியமானவர்களே !

இந்த மாபெரும் பொக்கிஷமாகிய ''உங்களுக்கான பிரசங்கக் குறிப்புகள்'' ஏட்டை உங்களுக்கு அறிமுகம் செய்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். இதன் ஆசிரியர் J.C. CHOATE (World Evangelism, USA) அவர்கள், கடந்த 59 ஆண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் நற்செய்தி பணி செய்தவர். இறை மகன் இயேசுவின் இணை பணியாளரான இவர், நம்மைவிட்டு கடந்து சென்றாலும், அவரது துணைவியாரான Betty Choate அவர்களும் சுவிஷேசகர்களான Jerry & Paula Bates அவர்களும் இப்புத்தகங்கள் வெளிவர மிகவும் உதவியாயிருந்தனர்.

நான், என்னுடைய 26 ஆண்டுகால முழுநேர ஆண்டவருடைய சேவையில், மிகக் குறைவானவர்களேயே சொந்தமாக தங்களுடைய தேவ செய்தியை ஆயத்தம் செய்து பேசுவதை பார்த்திருக்கிறேன். ஆனாலும், பிறரின் செய்தியை அப்படியே பயன்படுத்துவோரின் ஆதங்கம் என்னவெனில், எங்களுக்கு செய்தியை ஆயத்தம் செய்ய ஒரு உபகரணமிருந்தால் (Tool) நன்றாயிருக்கும் என்பதே. இந்த பிரசங்கக் குறிப்புகள் புத்தகத்தின் மூலம், நீங்கள் இதன் தலைப்பு, உபதலைப்பு மற்றும் வசனங்களை பயன்படுத்தி குறிப்புகளை மட்டும் எடுத்துக்கொண்டு நீங்களே உங்களது பாணியில் சொந்தமாக செய்தியை தயார் செய்யலாம். எனவே இதை வாசித்து, வசனங்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்த்து, பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் செய்திகளை ஆயத்தம் செய்யுங்கள்.

தேவ ஜனங்களுக்கு, தேவ வசனத்தை மட்டும் கலப்பில்லாமல் போதிக்க விரும்புவோருக்கு இப்புத்தகம் ஒரு பொக்கிஷம். வேத அறிவை வளப்படுத்த விரும்புவோருக்கு இது ஒரு தகவல் களஞ்சியம். ஆகையால் இதைப் படித்து, பயன்படுத்தி மற்றவர்கட்கும் அறிமுகம் செய்யுங்கள்.

அன்பானவர்களே ! இறைமகன் இயேசு உங்களுக்குத் தரும் பாரத்தின்படி, மனவிருப்பத்துடன் இதைப் போன்ற இன்னொரு புத்தகம் வெளிவர நன்கொடைகளை தாராளமாய் அனுப்பி, உதாரத்துமாய் தாங்க அன்புடன் வேண்டுகிறேன்.!

World Evangelismகாக
வெளியீட்டாளர்,
உங்கள் அன்பு சகோதரன்

**P.C. பிலேமோன் ராஜா**

# புத்தகத்தின் உள்ளே.....


ஆராதிப்பதற்கான மனோநிலைகள்........................................ 1

ஏன் சிலர் ஆராதனைக்காக கூடுகிறார்கள்.................................... 3

இயேசு கண்ணீர் விட்டார்........................................................ 5

கர்த்தருடைய பந்தி.....................................................................6

வாரத்தின் முதல் நாள்.................................................................7

மூன்று விதமான ஆராதனை.........................................................9

ஆக்கினைத் தீர்ப்பில்லை...............................................................10

நான் என்ன கடன்பட்டுள்ளேன்.....................................................12

சபையின் தெய்வீக மற்றும் மனிதப் பகுதிகள்..................................14

தேவனுடைய கட்டளைகளை தள்ளிவிடுதல்......................................15

சபையினுடைய வேலை..................................................................17

சத்தியத்தின் மீது அன்பு...............................................................18

என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்...................................20

எனக்கு வல்லமை இருந்தால்.........................................................24

கிறிஸ்தவம் - நேற்றும் இன்றும்....................................................27

நடனமாடுதல் என்னும் பாவம்........................................................29

மூப்பர்களின் தகுதியாம்சங்களும் பணியும்.....................................32

கிறிஸ்துவுக்காக தீர்மானித்தல்.......................................................36

இயேசுவை பிரபல்யப்படுத்துதல்....................................................38

மனுஷன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?...............40

நான் ஏன் கிறிஸ்துமஸ் பண்டிகையை அனுசரிக்கக் கூடாது........................42

பெந்தகோஸ்தே நாளில் நடந்த சில சம்பவங்கள்........................................45

## உங்களுக்கான பிரசங்கக் குறிப்புகள்


அன்பின் நான்கு வடிவங்கள்........................................47

நான் ஏன் ஈஸ்டர் கொண்டாடுவதில்லை?........................52

நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவரா?........................54

விதைப்புக்கும் அறுப்புக்குமான பிரமானம்........................56

ஒருவன் இன்றைக்கு கிறிஸ்தவனாக இருக்க இயலுமா?..........58

திருமறை கூறும் மனமாற்றம்........................................60

சபையில் உலக ரீதியான காரியங்கள்................................62

நான் எதைப் பிரசங்கிப்பது?........................................64

தேவனுடைய சுவிசேஷத் திட்டம்....................................66

சத்தியமாவது என்ன?..................................................69

யார் கிறிஸ்தவன்?......................................................71

வீடு.........................................................................72

ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்துதல்..............................74

புதிய ஏற்பாடு ஜெபம்................................................76

கிறிஸ்துவின் இரத்தம்................................................79

கிறிஸ்தவனாகுதல்......................................................81

கிறிஸ்தவ ஜீவியம்......................................................84

ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவியம்..........................................86

ஆளுகை அமைப்பும் ஒத்துழைப்பும்................................88

நமது இருதயங்களை கடினப்படுத்துதல்............................90

இயேசு தான் பார்க்க விரும்புகிறதைக் காண்கிறாரா?...........93

தேவனுக்கு உடன் வேலையாட்கள்..................................95

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்.........98


## கிருபையுள்ள வார்த்தை

தீமை....101

நன்மை....102

நம்முடைய சிறந்த முன்மாதிரி....103

தேவனைக் கட்டுப்படுத்துதல்....104

சபையை உறுதியாக்குவது எது?....107

நீங்கள் சபையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?....109

வாழ்க்கைக்கான சட்டங்கள்....112

சபை இரண்டாங்கெட்ட நிலைமைக்கு செல்லாமல் வைப்பது எவ்வாறு?....114

மற்றவர்களைவிட நீங்கள் விஷேசித்து செய்கிறது என்ன?....115

இயேசு என்ன செய்வார்? நான் என்ன செய்யும்படி இயேசு விரும்புவார்?....117

இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன?....119

தெய்வீக அழைப்பு....121

நாம் சாகும்வரை இங்கே அமர்ந்திருப்பது என்ன?....123

திருமுழுக்கினால் செய்ய முடியாத காரியங்கள்....125

# ஆராதிப்பதற்கான மனோநிலைகள்
## Attitudes Towards Worship

### அறிமுகம்

1. ஆராதனை என்பது வாழ்வின் ஒரு பகுதி
2. ஆனாலும், அதைப்பற்றிய வித்தியாசமான மனோநிலைகள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
3. உண்மையான ஆராதனை சரியான மனோநிலையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

### விவாதம்

**அ) வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆராதனைக்கான மனோநிலைகள்.**

1) சமாரியப் பெண் “எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்”. (யோ 4:20)

   அ) பாரம்பரியத்தைப் பின்பற்றும் மனோநிலை.

   ஆ) உண்மையான ஆராதனையைப் பற்றி இயேசு விளக்கினார். (யோ 4:23, 24)

   இ) தேவனை சரியான வழியிலே ஆராதனை செய்யும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

2) நீங்கள் விரும்பும்படி தேவனை ஆராதிக்கும் மனோநிலை (மாற்கு 7:7; மத் 15:9)

   அ) இது ஒரு வீணான ஆராதனை

   ஆ) கிருகையுள்ளவார்த்தை வெளியீடு “மனுஷருடைய கற்பணைகளை உபதேசங்களாய் போதித்து”.

   இ) உண்மையான ஆராதனை என்பது வேதாகமம் போதிக்கும் படியானது. மூடநம்பிக்கையின் மனோநிலை (அப் 17:22-30)

3) அ) அத்தேனே மனிதர்கள் அறியாமையினால் ஆராதித்தனர் (அப் 17:23)

   ஆ) அப்படிப்பட்ட ஆராதனைக்காக பவுல் அவர்களை கடிந்து கொண்டார். (அப் 17:30)

4) ஐக்கியப்படுகின்ற மனோநிலை (அப் 2:42)

   அ) ஆண்டவருடைய ஜனங்கள் இப்படிபட்டவர்களாய் ஆராதிக்க வேண்டும்.

   ஆ) புரிந்துகொள்ளுதலோடு செய்யப்படும் ஆராதனை (1 கொரி 14:14,15)

5) வாரத்தின் முதல் நாளிலே ஒன்று கூட வேண்டும் என்ற மனோநிலை (அப் 20 : 7)

## ஆ) தற்காலத்தில் ஆராதனையைப் பற்றிய மனோநிலை

1) ஆராதனையை மாய்மாலமான மனோநிலையுடன் செய்தல்

2) யதார்த்த (அல்லது) லேசான மனோநிலை

3) ஆராதனையில் உலகப்பிரகாரமான மனோநிலை (1 யோ 2:15-17)

4) ஆராதனையில் கிறிஸ்தவ மனோநிலை (யோ 4:24)

## *இறுதியாக*

1) கர்த்தருடைய ஆராதனையில் நீங்கள் எந்தவிதமான மனோநிலையை வெளிப்படுத்துகிறீர்கள்?

   அ) ஆண்டவரை பிரியப்படுத்தும்படி ஆராதனை செய்கிறீர்களா?

   ஆ) தேவனை நீங்கள் வீணாக (அல்லது) அறியாமையினால் ஆராதிக்கிறீர்களா?

2) நமக்கு நாமே யோசித்து பார்க்க வேண்டும்.

3) ஆராதனைக்கான நம்முடைய மனோநிலையை தரம் உயர்த்துவோம்.

# ஏன் சிலர் ஆராதிக்க கூடுகிறார்கள்

## Why Some Assemble To Worship

### அறிமுகம் :

1) ஆராதனை என்னும் பாடத்தைப் பற்றி சிந்திக்க இன்னொரு வழி உண்டு.

2) ஜனங்கள் ஏன் ஆராதிக்க கூடுகிறார்கள் என்பதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

3) இப்பாடத்தை ஜெபத்துடன் படிக்க நாம் விரும்புகிறோம்.

4) நாம் படிக்கும்போதே, ஆராதிப்பதற்கான காரணங்களை ஆராய்வோமா?

### விவாதம் :

**அ) மனிதர்கள் காணவேண்டும் என்பதற்காக சிலர் ஆராதனையில் பங்கு பெறுகின்றனர்.**

1) சுய நீதி உடைய மனோநிலை

2) மனிதர் காண வேண்டும் என்பதற்காகவே காரியங்களை செய்யும் மனிதர்களை கிறிஸ்து கடிந்துகொள்கிறார். (மத் 6:1-12)

3) படம் காண்பிப்பதற்காக செய்யப்படும் ஒன்று அல்ல, ஆராதனை.

**ஆ) தாங்கள் வேறு எங்கேயும் போக வேண்டியதில்லை என்பதினால் சிலர் ஆராதனையில் பங்குபெறுவர்.**

1) எங்கேயாவது போவது

2) இப்படிப்பட்ட ஆராதனைக்கு நல்ல பலன் இல்லை.

**இ) சிலர் புறணி பேசவும் கேட்கவும் ஆராதனையில் பங்குபெறுவர்**

1) இங்கே தவறான நோக்கம் உள்ளடக்கியுள்ளது.

2) நாவு கட்டுப்படுத்தப்பட வேண்டும். (யாக் : 3)

3) ஆராதனை என்பது பயப்பட வேண்டிய இடமேயல்லாமல், புறணி பேசும் இடமல்ல.

**ஈ) மற்றவர்களை பார்க்க வேண்டும் என்பதற்காக சிலர் ஆராதனையில் பங்குபெறுவர்.**

1) அப்படியே போகிறவழியில் பங்கு பெறுவது.

2) ஏதோ பார்வைக்கான பொருட்காட்சி இடமல்ல ஆண்டவரின் ஆராதனை

**உ) தங்களுடைய சொந்த உபதேசத்தையே பின்பற்றும்படி சிலர் ஆராதனையில் பங்கு பெறுவர் (மத் 15:9)**

1) மனிதனால் உருவாக்கப்பட்ட உபதேசம் பாவமானது (ரோ 16:17,18).

2) ஒரு வீணான ஆராதனை (மாற்கு 7:7)

3) தேவனுடைய திருவசனத்தின்படி செய்கிறவர்களாய் இருங்கள் (யாக் 1:22; மத் 7:21).

4) கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். (1பேதுரு 2:21)

**ஊ) சிலர் உண்மையிலேயே தேவனை ஆராதிக்கும்படி ஆராதனையில் பங்குபெறுவர் (யோ 4:24)**

1) விசுவாசத்தில் வளரும்படி ஒன்று கூடுவர்.

2) ஒருவரை ஒருவர் ஊக்குவிக்கும்படி ஒன்றுகூட வேண்டும்.

3) ஒரு முன்மாதிரியை நிலைநிறுத்தும்படி ஆராதிக்க வேண்டும் (மத் 5 :16)

4) தேவனை துதிக்கும்படி ஒன்று கூட வேண்டும் (கொலே 3:17).

## இறுதியாக

1) நீங்கள் ஏதோ ஒரு உலகப்பிரகாரமான காரணத்திற்காக ஆராதனைக்கு கூடுகிறீர்களா, அல்லது ஆவிக்குரிய காரணத்திற்காகவா?

இதைக் குறித்து உங்களை நீங்களே கேள்வி கேட்டுக்கொண்டு, சரியான நோக்கத்திற்காக ஆராதனைக்கு கூடுகிறீர்கள் என்பதை உறுதி செய்யுங்கள்.

# இயேசு கண்ணீர் விட்டார் (யோ 11:35)

## Jesus Wept

### அறிமுகம் :

வேதாகமத்தில் உள்ள சிறிய வசனமான இயேசு கண்ணீர்விட்டார் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இயேசு பொங்கி பொங்கி அழுதார் (Moffat), இயேசு கண்ணீர் வடித்தார் (Good Speed), இயேசு தாமே அழுது கொண்டிருந்தார் (Basic English), இயேசுவின் கண்களில் கண்ணீர் வழிந்தது (Living Bible), என்று பல்வேறு மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன.

### விவாதம் :

**அ) அழுகை என்பது பெலவீனத்தின் அடையாளமாக இருக்க அவசியமில்லை. அழுகை என்பது பல்வேறு காரியங்களை வலியுறுத்துகின்றது. அவை....**

1) அந்த நபர் ஆழ்ந்த உணர்ச்சிகளை உணரக்கூடியவர்.

2) அவர் பாடுபடுகின்றார் அல்லது வருத்தப்படுகின்றார் எனலாம்.

3) மேலும் அவர் தனிப்பட்ட அக்கறை மற்றும் நேர்மையான அனுதாபம் கொண்டுள்ளார்.

**ஆ) மற்ற தருணங்களிலும் இயேசு ஆழ்ந்த கரிசனையைக் காட்டியுள்ளார்.**

1) ஒரு தனிநபருக்காக இயேசு அழுதார். (யோ11:1-46)

2) இயேசு ஒரு பட்டணத்திற்காக அழுதார் (மத் 23:37; லூக் 13: 34; யோவா 19:41-48).

3) இயேசு ஒரு தேசத்திற்காக அழுதார் (லூக் 7:31-35; யோ 1;11)

4) இயேசு முழு உலகைப் பற்றியும் கரிசனைப்படுகின்றார். (மத் 26 : 36 -46, லூக் 23:46;1 பேதுரு 2:21; 3:14 - 18).

### இறுதியாக :

நம்முடைய நடத்தையின் மூலம், இயேசுவானவர் அசைக்கப் பட்டு ஆழமாக பண்படமுடியும். அவரை மறுபடியும் சிலுவையில் அறையும் குற்றஉணர்வை பெறாதபடி இருப்போம். (எடி 6.6)

# கர்த்தருடைய பந்தி (அப் 20:7 ; 2:42)

## The Lord's Supper

### அறிமுகம் :

1) அநேகர் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகின்றனர்.

2) சிலர் தகுதியற்ற நிலையில் கர்த்தருடைய பந்தியை புசித்து குடிக்கின்றனர்.

3) நாம் ஆராதனையில் நம்முடைய இருதயத்தை வைக்க வேண்டும்.

4) கர்த்தருடைய பந்தியைப் பற்றி நாம் படிப்போம்.

### விவாதம் : பங்குபெறும் முறைமை

**அ) நினைவு கூறும் படியாக (1 கொரி 11:24,25)**

1) கிறிஸ்துவினுடைய அன்பு (யோ 3:16)

2) கிறிஸ்துவினுடைய மரணம் (மத் 27)

3) நம்முடைய மீட்பின் விலை (எபே 1:7)

4) கிறிஸ்து நம்முடைய முன்மாதிரி (1 பேதுரு 2: 21 )

**ஆ) சுயத்தை சோதித்துப் பார்க்க வேண்டும். (I கொரி 11:28)**

1) நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் (கலா 3:26)

2) நாம் விசுவாசத்தில் இருந்தால் (ரோ 10: 17)

3) நாம் குற்ற உணர்வுடையவர்களானால் (I கொரி 11:27)

4) நாம் கிறிஸ்துவை நேசித்தால் (யோ 14:23)

**இ) தகுதியுடன் அனுசரிக்க வேண்டும். (I கொரி 11:27,29)**

1) விசுவாசத்தை காண்பிக்கும் பொருட்டு (யாக் 1:22)

2) மற்றவர்களுக்கு உதவும்படி (மத் 5:16)

3) மற்றவர்களை எச்சரிக்கும்படி.

**ஈ) கிறிஸ்துவுடன் ஐக்கியமாதல் (Communion) என்பது இருதயத்தின் எண்ணமாக இருக்க வேண்டும். (I கொரி 10 : 15 - 17, 11 : 29)**

1) பெலத்திற்காக

2) தியானத்திற்காக (மத் 26: 26-28).

**உ) சமாதானம் மற்றும் ஐக்கியத்துடன் கீழ்படிய வேண்டும். ( I கொரி 10 :17)**

1) விசுவாச உறுதியுடன் (அப் 2:42)

2) பொறுமையுடன்

## இறுதியாக

1) தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும்.

2) நினைவுடனும், கட்டளையின் படியும் ஆராதிக்க வேண்டும்.

3) உண்மையான ஆராதனையானது ஒரு தனிநபரையும் அவரை சுற்றியுள்ளவர்களையும் பெலப்படுத்துகிறது.

# வாரத்தின் முதல் நாள்

## First Day of The Week

## அறிமுகம் :

1) வாரத்தின் முதல் நாள் என்பது மிகவும் முக்கியமானது (அப் 20:7)

2) வேதாகமம் கர்த்தருடைய நாளைப் பற்றி கூறுகின்றது. (வெளி 1:10)

3) பழைய பிரமாணத்துடன் சேர்த்து ஓய்வு நாளும் நடைமுறையில் இருந்து அகற்றப்பட்டது. (கொலே 2:14)

4) வாரத்தின் முதல் நாள் தான் கர்த்தருடைய நாள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## விவாதம் : வாரத்தின் முதல் நாளின் முக்கியத்துவம்

**அ) ஆண்டவருடைய உயிர்தெழுதல் வாரத்தின் முதல் நாளிலே நடைபெற்றது. (மாற்கு 16:9)**

1. கிறிஸ்து வெற்றி பெற்றவராய் கல்லறையில் இருந்து எழுந்தார்.
2. அவர் கல்லறையில் இருந்து எழுந்து, எல்லோருக்கும் நம்பிக்கையைக் கொடுத்தார்.
3. தேவனை ஆராதிக்க ஒரு புதிய நாள்

**ஆ) சபை, வாரத்தின் முதல் நாளில் தான் ஸ்தாபிக்கப்பட்டது. (அப் 2)**

1) அது பெந்தெகொஸ்தே என்னும் நாள் (அப் 2:1-4)

2) இந்த முக்கியத்துவம் நிறைந்த நாளில் பேதுரு, முதல் சுவிஷேச பிரசங்கத்தை போதித்தார்.

3) முதல் கூட்ட மக்கள், அங்கத்தினர்களாக இந்த நாளிலே சபையில் சேர்க்கப்பட்டனர். (அப் 2:47)

4) அதில் இருந்து சபை விரிவாக்கம் அடைந்தது.

5) இப்படியாக, சபையைக் கட்டுவேன் என்ற தன்னுடைய வாக்குத்தத்தை ஆண்டவர் நிறைவேற்றினார்.

**இ) சீஷர்கள் வாரத்தின் முதல் நாளிலே ஒன்று கூடினார்கள் (அப்20:7)**

1) ஆண்டவர், ஆராதிக்கும்படி விரும்புகிறார் (யோ4:23, 24)

2) சீஷர்கள் ஆண்டவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்தனர்.

3) அவர்கள் வாரத்தின் முதல் நாளை அங்கீகரித்தனர்.

4) ஆகையால் சீஷர்கள் வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்கு ஒன்று கூடியதற்கான வேதாகம ஆதாரம் (முன்மாதிரி) நமக்கு உண்டு.

**ஈ) வாரத்தின் முதல் நாளிலே தன்னுடைய சீஷர்களுடன் சேர்ந்து, ஆண்டவரும் ஒன்று கூடுகிறார். (மத் 18:20)**

1) நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்தால், அவர் நம்முடன் இருப்பார்.

2) ஆராதிக்க ஒன்று கூடுவோம்; ஆண்டவரை சேவிப்போம்.

**உ) வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்போம் (யோ 4:24)**

1) உண்மையாக ஆராதிப்பவர்களை தேவன் விரும்புகிறார். (யோ 4:23)

2) தேவனை மகிமைப்படுத்தும்படி எல்லாவற்றையும் செய்யுங்கள் (கொலே 3:17)

3) ஆராதனை என்பது இருதயத்திலிருந்து செய்யப்படுவதாயும், தேவனுடைய கட்டளைகளின் படியும் இருக்க வேண்டும் (1கொரி 14:14,15; 1யோ 5:14)

**ஊ) வாரத்தின் முதல் நாளிலே, கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும் (அப் 2:42; 20:7)**

1) இது கிறிஸ்துவை நினைவு கூரும் படி பங்குபெறப்பட வேண்டும் (மத் 26 : 26; 28)

2) கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதில், நமக்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும் (1 கொரி 11:23-27)

3) தேவனை ஆராதிக்கும்படி பங்குபெற வேண்டும் (யோ 4:24)

## இறுதியாக

1. அநேக காரணங்களுக்காய் வாரத்தின் முதல் நாள் என்பது முக்கியமானது.
2. எல்லாவற்றிற்கும் மேல், அது கர்த்தருடைய நாள்.

# மூன்று விதமான ஆராதனை

## Three Kinds of Worship

## அறிமுகம்

1. அநேகர் தேவனை ஆராதிக்கின்றனர்.
2. ஒரே ஒரு முறைதான் ஏற்றுக்கொள்ளப்படும் (யோ 4:24)

## விவாதம்

**அ) உண்மையுடன் ஆவி (யோ 4:24)**

1) பாடல் (1கொரி 14:14,15)

2) ஜெபம் (1தெச 5:17; மத் 6:9-13)

3) வசன ஆராய்ச்சி (2 தீமோ 2:15)

4) கர்த்தருடைய பந்தி (அப் 20:7)

5) காணிக்கை கொடுத்தார் ( 1 கொரி 16:2)

**ஆ) ஆவியில்லாத உண்மையுடன் (1 கொரி 14:14,15 யோ17:17;4:24)**

1) பாடல் - வார்த்தை ஜாலம் (கொலே 3:16)

2) ஜெபம் - விசுவாசக் குறைவு (எபி 11:6; 1யோ 5:14)

3) வேத வசனப் படிப்பு - மனதை திசைமாற்றும்படி(யோ8:32)

4) கர்த்தருடைய பந்தி - தீய செயல்களுடன் (அப் 2:42)

5) கொடுத்தல் - உற்சாகமில்லாமல் (2 கொரி 9:7)

**இ) உண்மையில்லாத ஆவியுடன் (மத் 15:9; யோ 17:17)**

1) பாடுதல் - இசைக்கருவியுடன் (ரோ 10:17; எபே 5:19)

2) ஜெபம் - தேவன் பாவிகளுக்கு செவிகொடுக்கிறார் என்று அநேகர் போதிக்கின்றனர் (யோ 9:31)

3) வசன ஆராய்ச்சி - மனித கொள்கைகள் (2தீமோ 3:16,17).

4) கர்த்தருடைய பந்தி - வருடத்திற்கு ஒரு முறை அல்லது விருப்பம்போல் (அப் 20:7)

5) கொடுத்தல் (1கொரி 16:2) தங்களுக்கு விருப்பமான நாளில் எல்லாம்.

## இறுதியாக

1) தேவனை ஆராதிக்க என்று ஒரு நாள் உண்டு (அப் 20:7)

2) ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும்.

3) உண்மையான ஆராதனையே ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனை.

# ஆக்கினைத்தீர்ப்பில்லை (ரோ 8:1)

# No Condemnation

## அறிமுகம்

1) வேதாகமத்தின் ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, ஒரு எளிமையான பாடம் இது

2) இந்த வசனப்பகுதி எதைப் போதிக்கின்றது, எதைப் போதிக்க வில்லை என பார்ப்பதே நமது நோக்கம்.

## விவாதம்

**அ) ஆனபடியால் ஆக்கினைத்தீர்ப்பில்லை**

1) இது தேவனுடைய வாக்குத்தத்தம்

2) ஆனால், அநேகர், இத்துடன் இருந்துவிட விரும்புகின்றனர்.

3) அதாவது, ஒருமுறை இரட்சிக்கப்பட்டுவிட்டால் பின்பு எப்படி நடந்தாலும் இரட்சிப்பு உறுதிதான் என்று போதிக்கின்றனர்.

4) ஆனாலும் இதற்கு மேலும் சில உண்டு.

ஆ) "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து'

1) ஆகையால், ஒருவர் நீதிமானாயிருக்க கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்.

2) ஆனால், ஒருவர் எவ்வாறு கிறிஸ்துவுக்குள் செல்ல முடியும் (ரோ 6:3)?

3) ஆனாலும், ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருப்பது மட்டும் போதாது.

4) இன்னும் சில இருக்கின்றது.

இ) "மாம்சத்தின்படி நடவாமல்"

1) ஒருவர் உலகத்தின் பாதையில் நடந்து இரட்சிப்பை நிறைவேற்ற முடியாது.

2) மாம்ச நடவடிக்கைகள் ஒருவரை தண்டனைக்கு உட்படுத்தும்.

3) ஆனால் உலகக் காரியங்களில் இருந்து விலகியிருப்பது மட்டுமே போதாது.

4) சிந்திக்க வேண்டிய இன்னொரு காரியமும் உண்டு.

ஈ) ஆவியின் படி நடந்து

ஆகையால் "ஆக்கினைத்தீர்ப்பில்லை" என்ற வாக்குத்தத்தத்தை ஒருவர் அனுபவிக்க வேண்டுமானால்.

அ) கிறிஸ்துவுக்குள் இருந்து.

ஆ) பாவ நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்து

இ) ஆண்டவருக்கு உண்மையாயிருக்க வேண்டும் (விசுவாசமாய்)

2) ஆகையால், இவ்வசனம் முழுவதும் இசைந்து பொருள்படுகிறது.

# நான் என்ன கடன்பட்டுள்ளேன்

## What I Owe (ரோ 1:4)

### அறிமுகம்

1) உண்மையைப் போன்று தோன்றாத உண்மை - நான் ஒன்றும் கடன் படவில்லை, எல்லாருக்கும் கடன்பட்டிருக்கிறேன் (ரோ 13:8)

2) எல்லா மனிதர்களும் சார்ந்திருப்பவர்கள் தான் - யாருடைய உதவியும் இல்லாத சுதந்தரவாளிகளல்ல

3) ஞானமுள்ளவர்கள் ஒரு உயர்ந்த வல்லமையின் தேவையை உணர்ந்து கொள்வார்கள்

### விவாதம்

**அ) நான் தேவனுக்கு என்ன கடன்பட்டுள்ளேன்? (யாக் 1:27)**

1) தேவன் என்னைப் படைத்தார்

2) என்னிடத்தில் உள்ளவைகளையெல்லாம் அவரே தருகிறார்.

3) என் வாழ்க்கை அவருக்கு கடன்பட்டுள்ளது.

4) நான் அவருக்கு நன்றி சொல்ல கடன்பட்டுள்ளேன்.

5) நான் அவரை எப்பொழுதும் துதிக்க வேண்டும்.

**ஆ) நான் கிறிஸ்துவுக்கு என்ன கடன்பட்டுள்ளேன்?**

1) எனக்கு பதிலாக அவர் மரித்தார்.

2) அவர் என்னை இரட்சித்தார்.

3) என்னுடைய நேர்மையினால் அவருக்கு கடமைப்பட்டுள்ளேன்.

**இ) நான் சபைக்கு என்ன கடன்பட்டுள்ளேன்?**

1) கிறிஸ்து அதற்காக தன் இரத்தத்தை சிந்தினார்.

2) அதில் ஒரு அங்கமாக இருக்க நான் நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

3) அதில் அங்கத்தினராய் வேலை செய்ய கடன்பட்டுள்ளேன்.

4) சபை தன் வேலையை செய்ய, நான் உதவ கடன்பட்டுள்ளேன்.

**ஈ) நான் என் பெற்றோருக்கு என்ன கடன்பட்டுள்ளேன்? (கொலே3:20)**

1) நான் அவர்களுக்கு மரியாதை கொடுக்க கடன்பட்டுள்ளேன்.

2) நான் அவர்களுக்கு கீழ்படிய கடன்பட்டுள்ளேன்

உ) நான் என் குடும்பத்திற்கு என்ன கடன்பட்டுள்ளேன் (1தீமோ 5:8)

1) அவர்களுக்கு உணவு, உடை மற்றும் உறைவிடம் கொடுக்க கடன்பட்டுள்ளேன்.

2) அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் பயிற்சியளிக்கக் கடன்பட்டுள்ளேன்.

3) கிறிஸ்தவ கல்வியை அவர்களுக்கு கொடுக்க நான் கடன்பட்டுள்ளேன்.

ஊ) நான் என் அரசாங்கத்திற்கு என்ன கடன்பட்டுள்ளேன்? (ரோ 13)

1) ஒரு நல்ல பிரஜையாக இருக்க கடன்பட்டுள்ளேன்.

2) சமாதானத்தை (அமைதியை) காத்துக்கொள்ள கடன்பட்டுள்ளேன்.

எ) நான் என்னுடன் இருப்பவர்களுக்கு என்ன கடன்பட்டுள்ளேன்? (யாக் 2:8)

1) சுவிஷேசத்தை அவர்களுக்கு அறிவிக்க கடன்பட்டுள்ளேன்.

2) என் அயலகத்தாரை நேசிக்க கடன்பட்டுள்ளேன்.

ஏ) எனக்கு நானே என்ன கடன்பட்டுள்ளேன்?

1) நேர்மையாக இருக்க கடன்பட்டுள்ளேன்.

2) என் ஆத்துமாவை காப்பாற்ற (இரட்சிக்க) கடன்பட்டுள்ளேன்.

## இறுதியாக

1) நீங்கள் என்ன கடன்பட்டுள்ளீர்கள்?

2) ஆனாலும் முழுமையாக நாம் செலுத்த முடியாத சில கடன்களும் உண்டு.

# சபையின் தெய்வீக மற்றும் மனித பகுதிகள்
## The DIVINE AND HUMAN SIDES OF THE CHURCH
(மத் 16:18)

## அறிமுகம்

1) சபைக்கு தெய்வீக மற்றும் மனிதப் பகுதிகள் உண்டு.
2) இதை புரிந்துகொள்ளுதல் என்பது, சந்தேகமில்லாமல் ஒருவரை சபையைப் பற்றி உயர்வாக எண்ண வைக்கும்.
3) நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், சபையின் தெய்வீகப் பகுதி துல்லியமும் சிறப்புமானது என்றும், மனிதப் பகுதி தவறுவதற்கு வாய்ப்புடையது என்றும் அறிய வேண்டும்.

## விவாதம்

### அ) சபையின் தெய்வீகப் பகுதி

1) சபையானது தேவனுடைய மனதிலே உற்பத்தியானது. (எபே1:3-6)
2) தேவனுடைய தீர்க்கதரிசிகள் சபையின் ஸ்தாபிதத்தைக் குறித்து முன்னுரைத்தனர். (ஏசாயா 2:2,3; தாணி 2:44).
3) ஆண்டவர், தன்னுடைய சபையைக் கட்டுவேன் என்று வாக்குப் பண்ணினார் (மத் 16:18).
4) சபையானது வல்லமையுடன் வந்தது. (மாற்கு 9:1;அப்2:1-4)
5) சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டது. (அப் 20:28).
6) கிறிஸ்துவே சபைக்கு தலையானவர் (கொலே 1:18).
7) கிறிஸ்துவே சரீரத்தின் இரட்சகராயிருக்கிறார். (எபே 5:23).
8) சபையானது தெய்வீக சட்டங்களினால் ஆளப்படுகின்றது (யாக் 1:25).

### ஆ) சபையின் மனிதப் பகுதி

1) சபையானது மனிதர்களை உள்ளடக்கியதாக உள்ளது (அப்2:47)
2) சுவிஷேசத்திற்குக்கீழ்படிந்தமக்களால்உருவானதேபிராந்தியங்களில் உள்ள சபை (1 கொரி 15:1-4)

3) ஒவ்வொரு பராந்திய சபையிலும் மூப்பர்கள் இருக்க வேண்டும் (பலி 1:1)

4) ஒவ்வொரு பராந்திய சயையிலும் உதவிக்காரர்கள் இருக்க வேண்டும் (தீமோ 3:812)

5) ஒரு பரசங்கியார் குயவன் கையில் உள்ள பாத்திரத்தைப் போல இருக்க வேண்டும்.

## இறுதியாக

1) நாம் பார்த்தவைகளில் உள்ள, தெய்வீக காரியங்களை மாற்ற வேண்டும் என சிலர், எப்பொழுதும் முயல்கின்றனர்; அதே போல் சிலர், மனிதப் பகுதியில் உள்ளவைகள் மட்டும் துல்லியமாக இருக்க வேண்டும் என சிலர் விரும்புகின்றனர்.

2) இங்கே தெய்வீகப் பகுதியை நாம் இன்னும் முன்னேற்ற முடியாது; மேலும் மனிதப் பகுதியானது துல்லியத்தை நோக்கி செல்ல வேண்டும்.

3) மனிதப் பகுதியினால், ஏன் சில அங்கத்தினர்கள் விழுந்து போகின்றனர் என்றும், அல்லது கள்ளப்போதையானது உட்புகுந்துவிடுகிறது என்றும் நம்மால் உணர முடிகிறது.

4) ஆகையால் நாம் உணர வேண்டியது, சபை என்று வரும்போது ஒரு தெய்வீகப் பகுதியும் ஒரு மனிதப் பகுதியும் உண்டு.

# தேவனுடைய கட்டளைகளை தள்ளிவிடுதல்

## Laying aside the Commandments of God

## வசனப் பகுதி

நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்து வருகிறீர்கள் என்றார் (மாற்கு 7:8)

| தள்ளி விடப்பட்ட வேதாகம காரியங்கள் | அதற்கு மாற்றாக மனிதன் செய்பவை |
|---|---|
| 1) ஞானஸ்நானம் (மாற்கு 16:16) | 1) விசுவாசம் மட்டும் போதும் |
| 2) மூழ்குதல் (கொலே 2:12) | 2) தெளித்தலும், ஊற்றுதலும் |

| | |
|---|---|
| 3) வாழ்வின் இறுதிவரை உண்மையாய் இருக்க வேண்டும் | 3) ஒரு முறை (வெளி 2:10) இரட்சிக்கப்பட்டுவிட்டால் விழவாய்ப்பில்லை |
| 4) வசனம் (யாக் 1: 22 ) | 4) மனித கொள்ளைகள், உபதேசங்கள் |
| 5) சுவிஷேசம் ( ரோ 1: 16 ) | 5) சுய போதனை, யூகங்கள் |
| 6) உண்மையான ஆராதனை (யோ 4: 24 ) | 6) விருப்பமானபடி ஆராதிக்கலாம் |
| 7) கீழ்படிதல் (மத் 7: 21) | 7) கிருபை மட்டும் போதும் |
| 8) ஒரே வழி (யோ 14:6) | 8) அநேக வழி |
| 9) வசனத்தை பிரசங்கி (2 தீமோ 4:2 ) | 9) வேறொரு சுவிஷேசம் |
| 10) கிறிஸ்துவின் நாமம் (1 பேதுரு 4: 16) | 10) உலகப் பிரகாரமான பிரிவினைப் பெயர்கள் |
| 11) ஒரே அஸ்திபாரம் (1 கொரி 3:11) | 11) பணம், மணல், போன்ற அஸ்திபாரங்கள் |
| 12) தெய்வீகத் தன்மை (தீத்து 2: 11, 12) | 12) உலகத்தன்மை |
| 13) வேத ஆராய்ச்சி (2 தீமோ 2: 15) | 13) கட்டுக் கதைகள், சுயசரிதை, புத்தக எடுத்துக்காட்டுகள் போன்றவை |
| 14) ஜெபம் ( 1தெச 5:17) | 14) தொலைக்காட்சி, வேலை போன்றவற்றில் மட்டும் நேரம் செலவழிப்பது |
| 15) கொடுக்க வேண்டும் ( 1 கொரி 16 : 2) | 15) காரணங்களைக் கூறி கொடுக்காமல் இருப்பது. |
| 16) திக்கற்றவர்கட்கு உதவ வேண்டும் (யாக் 1:27) | 16) பொழுது போக்குக் காரியங்களில் செலவழிப்பது |
| 17) தேவன் முக்கியம் (மத் 6: 33) | 17) உலகப் பொருட்கள், புது விஷயங்கள் |
| 18) கிறிஸ்து (லூக் 9: 23) | 18) மனைவி, வேலை போன்றவை |

ஆம்! அநேகர் உலக மற்றும் தன்னலமான காரணங்கட்காக வாழ்வின் முக்கிய காரியங்களை தள்ளிவிட்டனர். நீங்கள், உங்கள் சொந்த விருப்பங்களை

நிறைவேற்ற தேவ சித்தத்துடன் மோத விரும்புகிறீர்களா? காலத்தையும், நித்தியத்தையும் கருதி யோசித்துப் பாருங்கள் !

## சபையினுடைய வேலை (எபே 3 : 21)

## Work of the Church

### அறிமுகம்

1) சபையானது அதனுடைய வேலையை செய்யும்படியாக ஆண்டவர் தன்னுடைய சபையை ஸ்தாபத்தார்.

2) சபையானது, ஆண்டவரையும் அவருடைய சித்தத்தையும் பரதிபலிக்கின்றது.

3) ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னுடைய பங்கான வேலையை செய்ய வேண்டும்.

### விவாதம்

சபையினுடைய வேலை 3 காரியங்களைக் கொண்டது.

அ) சபை ஆராதனை செய்ய வேண்டும் !

1) ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஒன்று கூட வேண்டும் (அப் 20 : 7).

2) தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் (யோ 4:24) .

3) எழுதப்பட்டவைகளின் படி உண்மையாய் இருக்க வேண்டும் (வெளி 22 : 18,19) .

ஆ) சபையானது சுவிஷேசத்தை பரசங்கிக்க வேண்டும்.

1) புறப்பட்டுப் போ என்று கிறிஸ்து நமக்கு கட்டளை கொடுத்துள்ளார் (மத் 28 : 18:20).

2) கிறிஸ்துவின் சுவிஷேசத்தைப் பரசங்கிக்க வேண்டும் .

3) சத்தியம் மட்டுமே நம்மை இரட்சிக்கும் (யோ 8 : 32).

இ) தேவையில் இருப்பவர்களைப் பற்றி சபை அக்கறைப் பட வேண்டும் !

1) நாம், ஏழைகளுக்கு உதவ வேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார்.

2) உண்மையான சுத்த பக்தியுள்ளவர்களாய் நாம் இருக்க விரும்பனால், அநாதைகள் மற்றும் விதவைகளை சந்தித்து உதவ வேண்டும் (யாக் 1: 27).

## இறுதியாக

1) இந்த வேலைகள் வேறு எந்த நிறுவனம் அல்லது அமைப்புகள் மூலம் செய்யப்பட முடியாது .

2) ஆண்டவர் மகிமைப்பட வேண்டுமெனில், இவை அனைத்தும் சபையின் மூலமாய், சபையின் அங்கத்தினர்களால் செய்யப்பட வேண்டும் .

3) உலகம் முழுவதிலும் மிகச் சிறந்த வேலை இதுவே.

4) சபை இவைகளை செய்ய தவறினால், ஆண்டவர் வேறு யாரிடமும் இவற்றை எதிர்பார்க்க முடியாது.

# சத்தியத்தின் மீது அன்பு

## Love For Truth

## அறிமுகம்

1) உலகம் முழுவதிலும் சத்தியமே மிகவும் விலையேறப் பெற்ற தாகும் .

அ) வெளிச்சத்திற்கு ஒப்பாக அது பேசப்பட்டுள்ளது (சங் 119 : 105).

ஆ) ஆண்டவருடைய வசனமே சத்தியம் (யோ 17 :17).

இ) சத்தியம் உங்களுக்கு எப்படி உள்ளது ?.

## விவாதம்

**அ) எல்லோரும் தேவனுடைய சத்தியத்தை நேசிக்க வேண்டும்.**

1) சத்தியத்தை நேசித்தால், அது தேவனை நேசிப்பதாகும்.

2) சத்தியத்தை நேசித்தல், தேவனுடைய அனைத்தையும் நேசிப்பதாகும்.

3) சத்தியத்தை நேசிப்பது என்பது அதற்குக் கீழ்படிவதாகும்.

**ஆ) எல்லாரும் சத்தியத்தை நேசிப்பதில்லை**

1) உலக மக்கள் அநேக வேளைகளில் சத்தியத்தை நேசிப்பதில்லை.

அ) உலகத்தில் உள்ள இன்பங்களின் மேல் அன்பு கூறுகிறார்கள்.

ஆ) தன்னலமாக, இன்றைய தினத்தைப் பற்றி மட்டுமே யோசிக்கின்றனர் (யாக் 4: 13,14)

2) அநேக மதப் பற்றுடையோர் சத்தியத்தை நேசிப்பதில்லை

அ) உண்மையும், நேர்மையுமாய் தவறானவற்றில் இருப்பார்கள்.

ஆ) அவர்கள் ஏற்கனவே ஏற்றுக் கொண்டவைகளுடன் சத்தியமானது முரண்பட்டால், அதன்மேல் வெறுப் படைவார்கள்

3) மனிதனுடையகற்பனைகளையும், உபதேசங்களையும்பின்பற்றுவார்கள் (மத் 15:9) **தவறு செய்யும் கிறிஸ்தவர்கள் சத்தியத்தை நேசிக்க மாட்டார்கள்.**

அ) இவர்கள் தங்கள் ஆதி அன்பை தொலைத்திருப்பார்கள் (வெளி 3)

ஆ) இவர்களுடைய அன்பு மங்கி அல்லது தனிந்து போயிருக்கும் (மத் 24 : 12)

இ) ஆண்டவரை புறக்கணிப்பார்கள்.

4) தங்களை விசுவாசமுள்ள உண்மையான கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் சிலரும், சத்தியத்தை நேசிப்பதில்லை.

அ) தங்கள் கடமைகளை புறக்கணிக்கிறார்கள் (எப 2:3).

ஆ) ஆராதனையில் பங்குபெற தவறுகின்றனர் (எப 10: 25).

இ) தேவனுக்குக் கொடுப்பதில் கஞ்சத்தனம் செய்கிறார்கள் (2 கொரி 9).

ஈ) கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதரர்களை நேசிப்பதில்லை.

உ) வேதாகம சத்தியங்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல தவறுகின்றனர் (மாற்கு 16:15,16).

ஊ) தேவனுடைய சித்தத்தின் படி செய்பவர்கள் மற்றும் சத்தியத்தைப் போதிப்பவர்களை வெறுக்கின்றனர்

இ) சத்தியத்தை நேசிப்பவர்கள் அதை வெளிப்படுத்துவார்கள்.

1) அப்படிப்பட்ட மக்கள் அதற்கு கீழ்படிவார்கள் (மத் 7 : 21; யாக் 1:22; வெளி 22:14).

2) மற்றவர்களிடம் சத்தியத்தை நிலை நிறுத்துவர் (2 தீமோ 3: 16, 17)

3) மற்றவர்கள் சத்தியத்தை விரும்ப அதற்கு கீழ்படியும் படி வழி நடத்துவார்கள்.

ஈ) சத்தியத்தை நேசிப்பவர்களுக்கான வெகுமதிகள்

1) அவர்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள்.

2) கிறிஸ்தவர்களாய் இவ்வாழ்வில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

3) மற்ற அநேகளை கிறிஸ்துவுக்குள் வழிநடத்துவர்.

4) நித்திய வெகுமதி பெறுவர் (வெளி 22 : 14).

## இறுதியாக

1) ஆம், ஒரு நபர் சத்தியத்தை நேசித்தால், அதற்குக் கீழ்படிவார்.

அ) ஒரு பாவி கிறிஸ்தவராய் மாறுவார் (மாற்கு 16 : 16).

ஆ) தவறு செய்யும் கிறிஸ்தவர் தேவனிடம் திரும்புவார்.

இ) சத்தியத்தை நேசிக்கும் கிறிஸ்தவர் நாளுக்கு நாள் சிறப்பாக வாழ முற்படுவார் (1 கொரி 15 : 58)

2) நீங்கள் சத்தியத்தை நேசிக்கிறீர்களா?

# என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் (அப் 3:6)

## Such As I Have Give I Thee

## அறிமுகம்

1) ஜனங்களிடம் மற்றவர்களுக்கு கொடுக்கும் படி உலகப் பொருட்கள் எப்பொழுதும் இருக்காது.

2) சில காரியங்கள் மிக முக்கயமானவை அதாவது வாழ்வின் மாம்ச மற்றும் பொருள் சம்பந்தப்பட்ட காரியங்களை விட அவை முக்கியமானவை

3) நம்மிடத்தில் எவ்வாறு வைத்துக்கொள்ள விரும்புகிறோமோ, நாம் கொடுக்கவும் விருப்பமாய் இருக்க வேண்டும்

## விவாதம்

**ஆ) சப்பானியாய் பிறந்த மனிதனைப் பற்றிய சம்பவம் (அப் 3: 1-11)**

1) பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்

அ) ஜெபவேளையிலே...

ஆ) அது ஒன்பதாம் மணி நேரமாயிருந்தது.

2) அலங்கார வாசல் எனப்பட்ட தேவாலயத்தின் வாசலண்டையிலே சப்பாணியாய் பிறந்த ஒரு மனிதனை சந்தித்தனர்.

அ) தாயின் வயிற்றிலிருந்தே சப்பாணியாய் பிறந்த மனிதன் .

ஆ) அவன் தினந்தோறும் தேவாலய வாசலுக்கு கொண்டுவரப்பட்டான்.

இ) ஆலயத்துக்குள் நுழைபவர்களிடம் அவன் பிச்கைக் கேட்பான்.

3) இந்த சப்பாணியான மனிதன் பேதுருவையும் யோவானையும் சந்தித்தான்.

அ) பேதுருவும் யோவானும் ஆலயத்துக்குள் நுழைய முற்பட்டார்கள்.

ஆ) அப்பொழுது அந்த சப்பாணியான மனிதன் அவர்களிடம் பிச்சைக் கேட்டான்.

4) பேதுருவும் யோவானும் அந்த மனிதனை உற்றுப்பார்த்தார்கள்.

அ) அந்த மனிதனிடம் தங்களை நோக்கிப் பார்க்கும்படி கூறினார்கள்.

ஆ) ஏதாவது கிடைக்கும் என்ற எண்ணத்தில் அந்த மனிதன் அவர்களைப் பார்த்தான்.

5) அந்த சப்பாணியான மனிதன் சுகமானான்.

அ) "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" என்று பேதுரு கூறினார்.

ஆ) "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட"

இ) பேதுரு அவனை தூக்கி விட்டபோது, உடனே அவன் பெலன் பெற்றான்.

ஈ) பின்பு அந்த மனிதன் நடந்து, குதித்து, தேவனை துதித்தான்.

6) அற்புதத்திற்கான சாட்சிகள்

அ) அவன் நடந்து கொண்டு இருப்பதையும், தேவனை துதிப்பதையும் ஜனங்கள் கண்டனர்.

ஆ) அவன் எப்படிப்பட்டவனாய் இருந்தான் என்று அவர்கள் அறிந்து, இப்பொழுது அவன் நிலைமையைப் பார்த்து வியந்து ஆச்சர்யப்பட்டனர்.

இ) பின்பு அவர்கள் தங்கள் கவனத்தை பேதுரு மற்றும் யோவானிடமாய் திருப்பி, இன்னொரு முறை அவர்கள் சுவிஷேசத்தை பிரசங்கிக்கத் தருணம் கொடுத்தனர்

**ஆ) கொடுக்கப்பட முடியாத காரியங்கள்**

1) அநேக நேரங்களில் மற்றவர்களுக்குக் கொடுக்க நம்மிடம் பொருள் இல்லை.

அ) இன்னும் அநேக ஏழைகள் உள்ளனர்.

ஆ) பொதுவாக, அநேக சுவிஷேசகர்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ளனர்.

2) நாம் யாருக்கும் அற்புதவிதமாக உதவி செய்யும் வல்லமை நமக்கில்லை.

3) உங்களிடம் இல்லாத ஒன்றை நீங்கள் மற்றவர்க்கு கொடுக்க முடியாது.

இ) சிலர் எந்த சூழ்நிலையிலும் மற்றவர்களுக்கு கொடுக்க மனமில்லாதுள்ளனர்

1) அநேக சுயநலமான மக்கள் உள்ளனர்.

அ) தங்களிடம் உள்ளதை தங்களுக்கே வைத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள்.

ஆ) மற்றவர்கள் மேல் பற்று இல்லாதவர்கள்.

2) சிலர் பொருட்களையானாலும், ஆவிக்குரியதானாலும் அல்லது எதையுமே கொடுக்க மாட்டார்கள்.

**ஈ) நம்மிடத்தில் உள்ளதை நாம் கொடுக்க வேண்டும்**

1) ஒரு நல்ல அயலகத்தாராக இருங்கள்.

2) நமக்கு தாராளமாய் கொடுக்கப்பட்டதின் படியே நாமும் தாராளமாய் கொடுக்கனும் (கொரி16:2).

3) நம்மிடம் சத்தியம் உள்ளதெனில், நாம் அதை மற்றவர்களுக்கு எடுத்தச் செல்ல வேண்டும் (2தீமோ4:2).

4) நம்முடைய எல்லாவற்றையும் அவருக்கும், அவருடைய ராஜ்யத்தின் பரஸ்தாபத்திற்கும் நாம் கொடுக்க வேண்டும் என ஆண்டவர் விரும்புவார்.

## இறுதியாக

1) பாவிகள் தங்கள் வாழ்வை ஆண்டவரிடம் கொடுக்க வேண்டும்.

2) தவறு செய்யும் கிறிஸ்தவர்கள், மந்தைக்கு திரும்ப, தங்களையே தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் மறு அற்பனிப்பு செய்ய வேண்டும்.

3) இந்த உலகத்திலேயே சிறப்பாகக் கொடுப்பவர்கள் கிறிஸ்தவர்களாய் தான் இருக்க வேண்டும்.

அ) எல்லாவற்றையும் ஆண்டவருக்குக் கொடுங்கள்.

ஆ) உடன் உள்ளவர்களுக்கு எவ்வளவு உதவ முடியுமோ அவ்வளவு உதவ வேண்டும்.

4) எல்லாரும் மற்றவர்களுக்கு கொடுக்க விருப்பப்பட வேண்டும்; ஏனென்றால் நமக்கு ஆண்டவர் நிறைய கொடுத்துள்ளார்.

5) கொடுப்பது மட்டுமல்ல, கொடுத்தலில் தியாகம் செய்யவேண்டும்

6) ஆகையால் நாமும் அப்போஸ்தலனாகிய பேதுருவுடன் சேர்ந்து, "என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" என்று சொல்லுவோம்.

# எனக்கு வல்லமை இருந்தால்

## IF I Had The Power

## அறிமுகம்

1) சில நேரங்களில் நாம், ஏதாவது ஒன்றையோ பல காரியங்களையோ செய்வதற்கு சக்தியை விரும்புகிறோம்.

2) பொதுவாக அவை, நாம் விரும்பும் காரியங்களாக இருக்கும்; ஆனால் நம்மால் செய்ய முடியாதவையாக இருக்கும்.

3) மேலும் நாம் அநேக வேளைகளில் சொல்வது, மற்றவர்களைப் போல எனக்கும் சக்தி இருந்தால் நானும் அவைகளை பயன்படுத்துவேன் என்று கூறுகிறோம்.

4) ஆனால் மிக முக்கயமான கேள்வி என்னவென்றால் : நம்மிடம் உள்ள வல்லமையை (சக்கி) நாம் பன்படுத்துகிறோமா ?

## விவாதம்

**அ) நாம் சில நேரங்களில் சொல்வது :**

1) "எனக்கு மட்டும் அற்புதம் செய்யும் வல்லமை இருந்தால், நான் எல்லாரையும் குணமாக்கி விடுவேன்".

2) "எனக்கு மட்டும் மரித்தவர்களை உயிரோடு எழுப்பும் வல்லமை இருந்தால்; நான் எல்லா கல்லறைகளையும் சுத்தமாக்கி விடுவேன்".

3) "எனக்கு மட்டும் ஜனங்களை அற்புதமாக மனமாற்றும் வல்லமை இருந்தால், முழு உலகையும் மனந்திரும்ப செய்துவிடுவேன்".

**ஆ) வெவ்வேறுவிதமான வல்லமைகள் :**

1) அற்புதம் செய்யும் வல்லமை.

அ) ஒரு குறிப்பட்ட காலம் மட்டுமே நீடித்தது (1 கொரி 13).

ஆ) இப்பொழுது நமக்கு பூரணமான சுயாதீணப்பரமானம் உண்டு (யாக் 1: 25).

இ) எல்லா நல்ல செயல்களுக்கும் நம்மை வழிநடத்தக்கூடிய வசனம் நம்மிடம் உள்ளது (2 தீமோ 3: 16,17).

2) சாதாரண வல்லமை

அ) முன்மாதிரி எனும் வல்லமை (மத் 5:16).

ஆ) பேசும் வல்லமை (2 தீமோ 4: 2).

**இ) நம்மிடம் உள்ள வல்லமையை நாம் பயன்படுத் வேண்டும்.**

1) மக்களுக்கு சத்தியத்தை போதிக்கும் வல்லமை நம்மிடம் உள்ளது (மத் 28:18-20).

2) நேர்மையான ஆத்துமாக்களை இரட்சிப்படையச் செய்யும் வல்லமை நம்மிடம் உள்ளது (மாற்கு 16: 15,16).

3) மக்களை நன்மை செய்ய வைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை நம்மிடம் உள்ளது.

4) ஒரு நல்ல அண்டை வீட்டுக்காரராக இருக்கக் கூடிய வல்லமை நமக்கு உண்டு.

5) நம்முடைய எதிரிகளையும் நேசிக்கும் வல்லமை நமக்கு உண்டு (மத் 5: 43).

6) ஜெபத்தின் மூலமாக பரலோகப் பதாவிடம் பேசும் வல்லமை நமக்கு உண்டு (லூக் 18:1-8).

7) நம்முடைய வேதாகமத்தை தினந்தோறும் படிக்கும் வல்லமை நமக்கு உண்டு (2 தீமோ 2: 15).

8) தேவனை ஆராதிப்பதற்காக பரிசுத்தவான்களுடன் கூடும் வல்லமை நமக்கு உண்டு (எப10:25).

9) நேர்மையாக இருக்கக் கூடிய வல்லமை நமக்கு உண்டு.

10) கிறிஸ்தவ வாழ்வு வாழக்கூடிய வல்லமை நமக்கு உண்டு (1பேதுரு 4:16).

11) தேவனிடத்தில் விசுவாசமாக (உண்மையாய்) இருக்கும் வல்லமை நமக்கு உண்டு (வெளி 2 : 10).

12) தீமையை எதிர்க்கும் வல்லமை நமக்கு உண்டு.

**ஈ) எல்லோருக்கும் வல்லமை உண்டு**

1) சுவிஷேசத்திற்கு கீழ்படியக்கூடிய வல்லமை ஒரு பாவிக்கு உண்டு (மாற்கு 16:16).

2) தவறு (பாவம்) செய்யும் கிறிஸ்தவர் தேவனிடத்திற்கு திரும்பும் வல்லமை பெற்றிருக்கின்றனர் (யாக் 5:16).

3) தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் முதலாவதாக தேடும் வல்லமையை கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கிறார்கள் (மத் 6 : 33).

**உ) வல்லமையும் அதின் பயன்பாடும்**

1) சிலர் தங்தகளுடைய வல்லமையை அழிப்பதற்கு பயன் படுத்துகின்றனர்.

2) வேறு சிலர் தங்கள் வல்லமையை தீமையான நோக்கங்களுக்கு பயன் படுத்துகின்றனர்.

3) பன்னும் வேறு சிலர் தங்கள் வல்லமையை, மக்களை ஏமாற்றுவதற்காக பயன்படுத்துகின்றனர்.

4) அநேகர் தங்களுடைய வல்லமையை தங்கள் பெயர் பரஸ்தாபத்திற்காகவே பயன் படுத்துகிறன்றனர்.

5) மற்றவர்கள் தங்களுடைய வல்லமையை நன்மைக்காக பயன்படுத்துகின்றனர்.

## இறுதியாக

1) நம்மிடம் வல்லமை இருப்பதால் அதை பயன்படுத்துவோம்; அப்படி பயன்படுத்தும் நாம், அதை தேவனுடைய மகிமைக்காக பயன்படுத்துவோம்.

2) நம்மிடம்கொடுக்கப்பட்டுள்ளவல்லமையைநாம்பயன்படுத்தினால் மட்டுமே, நாம் அநேக பெரிய காரியங்களைச் செய்யமுடியும்.

3) உங்களிடம் உள்ள வல்லமையைப் பற்றி சிந்தியுங்கள் - அதை வீணாக்காதீர்; மாறாக பயன் படுத்துங்கள் !

# கிறிஸ்துவம் நேற்றும் இன்றும்

## Christianity Yesterday and Today

### முகவுரை :

1. புதிய ஏற்பாட்டின் (ஆரம்ப) நாட்களில் ஒரு விதமாகவும் இன்று நமது நாட்களில் வேறொரு விதமாகவும் இரட்சிக்கப்படுகிறார்களா?
2. திருமறையின் (ஆரம்ப) நாட்களில் ஒரு பெயரையும், இன்று நமது நாட்களில் வேறொரு பெயரையும் (மார்க்க ரீதியாகத்) தெரிந்துக்கொள்ளலாமா?.
3. அந்நாட்களில் ஒரு மாதிரியான ஆசரிப்பையும், இன்று ஒரு மாதிரியான ஆசரிப்பையும் கைகொள்ளலாமா?.
4. இவைகளைக் குறித்தும் வேறு சில காரியங்களைக் குறித்தும் கண்டறிவோமாக.

### விவாதம் :

அ. புதிய ஏற்பாட்டின் (ஆரம்ப) நாட்களில் :

1. சத்தியம் பிரசங்கிக்கப்பட்டது (ரோமர் 10).
2. ஒரே இரட்சகர் இருந்தார் (மத்தேயு 1:21).
3. ஒரே சுவிசேஷம் மட்டும் பிரசங்கிக்கப்பட்டது.
4. மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் இரட்சிப்புக்கு தேவையான நிபந்தனைகளாயிருந்தன. (அப் 2:38).
5. ஒரே ஒரு சபை மட்டுமே எங்கும் பரவியிருந்தது. (மத்தேயு 16:18)
6. இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப். 2:47).
7. தேவனுடைய பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அறியப்பட்டிருந்தனர். (1 பேதுரு 4:16).
8. தேவனுடைய ஜனங்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொண்டனர். (யோவான் 4:24).
9. கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய பணியில் அதிகமாய்த் தரித்திருந்தனர். (கொரிந்தியர் 15:58).

10. பரலோகத்திற்குச் செல்ல ஒரே ஒரு வழி மட்டுமே இருந்தது, இருக்கிறது. (யோவான் 14:6).

**ஆ. இந்த உண்மைகளை ஆராய்ந்து பாருங்கள்**

1. அதே சத்தியம் நமக்கு இருக்கிறது.
2. அதே இரட்சகர் நமக்கு இருக்கிறார்.
3. அதே சுவிசேஷம் நமக்கு இருக்கிறது.
4. அதே கட்டளைகளுக்கு நாம் கீழ்படிகிறோம்.
5. அதே சபையில் நாம் அங்கத்துவம் வைக்கிறோம்.
6. அதே பெயரை நாமும் வைத்துக் கொள்கிறோம்.
7. அதே போன்ற ஆராதனையை நாம் செய்கிறோம்.
8. அதே சபைப் பணியை நாமும் செய்ய வேண்டியவர்கள்.
9. அவர்களின் பாதையிலேயே நாம் பயணிக்க வேண்டியவர்கள்
10. யாவரும் ஒரே இடத்துக்குப் போக வேண்டியவர்கள்.

## முடிவுரை :

1. புதிய ஏற்பாட்டு (ஆரம்ப) காலத்து தேவ ஜனங்களுக்கும் இந்த கடைசி கால ஜனங்களுக்கும் உள்ள ஒரே வேறுபாடு நாம் வித்தியாசப்பட்ட காலக்கட்டத்தில் வாழ்கிறோம் என்பது மட்டும் தான்.
2. தேவன் அவர்களோடு காரியங்களை நடப்பித்தபடியே இன்று நம்மோடும் நடப்பிக்கிறார்.
3. எல்லாரும் ஒரே காரியத்தை செய்யவும் ஒரே இடத்துக்காகப் பிரயாசப்படவும் தேவன் விரும்புகிறார்.
4. கர்த்தருடைய சித்தத்தை பின்பற்றுகிற போது நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கவும் அதே நேரத்தில் அதிகமாய் சாதிக்கவும் கூடும்.
5. யார் எதைச் செய்தாலும் கர்த்தருடைய சித்தத்தின்படி, கர்த்தரை முன்பாக வைத்து செயல்பட்டு பாருங்கள் அனைத்தும் நலமாக நடக்கும்.

# நடனமாடுதல் என்னும் பாவம்

## The Sin of Dancing

### முகவுரை :

1. யுகயுகமாக இந்த உலகம் நடனமாடுகிற அவபக்தியால் வாதிக்கப்பட்டு வருகிறது.

அ. இஸ்ரவேலர்கள் விளையாட எழுந்தார்கள் (யாத்திராகமம் 32:6)

ஆ. ஒரு நடனத்தின் விளைவால் தான் யோவான் ஸ்நானகளின் தலை துண்டிக்கப்பட்டது (மாற்கு 6:21-24)

2. நடனமாடுதல் ஒரு தீமையான செயல் என்பதைக் காண உங்களைச் சுற்றிலும் நடைபெறுகிற சம்பவங்களைப் பாருங்கள்.

அ. இரவு விடுதிகள், உயர்நிலை கல்வியகங்கள் மற்றும் கல்லூரிகளில் இவைகள் முன்னோடித்துவம் பெற்றுள்ளன.

ஆ. விளைவு - சூதாட்டம், மதுபானம் அருந்துதல், சபித்தல் போன்றவற்றை நடனமாடுதல் தன்னுள் கொண்டுள்ளது.

### விவாதம் :

அ. **நடனமாடுவதில் உள்ள பொதுவான எண்ணம்**

1. ஒரு காலத்தில் ஜனங்களில் பெரும்பாலானோர் இப்படிப்பட்ட செயல்களைப் பார்த்து முகம் சுளித்தது உண்டு.

2. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் ஜனங்கள் இவ்விஷயத்தில் பெலவீனப்பட்டு வருகின்றனர்.

3. முழு உலகமும் ஒட்டு மொத்தமாக நடனத்தின் விளைவை ஒரு பொருட்டாக நினைத்துப் பார்ப்பதில்லை.

அ. வணிக நிறுவனங்களே அவைகளுக்கு ஊக்கப்படுத்தும் வகையில் பொறுப்பேற்று நடத்துகின்றன.

ஆ. உயர்நிலை பள்ளிகளும் பெயர் சபைகளும் கூட இவற்றை ஆதரிக்கின்றன.

4. இச் செயலுக்கு சில சபை (கிறிஸ்துவின் சபை) அங்கத்தினர்களும் துணை போவதுடன், தாங்களும் அதிலே பங்கேற்கின்றனர்.

அ. தங்கள் பிள்ளைகளை நடன பள்ளிகளுக்கு அனுப்புவதில் பிரியப்படுகின்ற பெற்றோர்.

ஆ. பள்ளிகளில் நடக்கும் நடன நிகழ்ச்சிகளில் தங்கள் பிள்ளைகள் பங்கேற்க அனுமதிக்கும் பெற்றோர் இருக்கின்றனர்.

5. நடனங்கள் தங்களுக்கு மிகுந்த வசீகரத்தைக் கொடுப்பதாக சொல்லப்படுகிறது, ஆகிலும் இதற்காக அவர்கள் சந்திக்கும் பின் விளைவுகளைக் கவனித்துப்பாருங்கள்.

6. இதிலே எந்தத்தவறுமில்லை என்று வாதிடுவோரும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டு செயல்படுகின்றனர்.

7. நண்பர்களே, நடனம் பிசாசின் விளையாட்டு

**ஆ. நடனமாடுதலுடன் தொடர்பு கொண்டிருந்தோரின் காப்பியங்கள்:**

1. பிரசித்திபெற்ற நடன கலைஞர், பேராசிரியர் ஹேரி ஸ்டைட்ஸ் என்பவர் உடலை அசைத்து, குலுக்கி, சுழன்று ஆடும் ஒரு பெண், தனது கற்பைக் காத்துக்கொள்ளவோ, தன்னுடன் நடனமாடும் ஒரு நபரை தனது ஆண் நண்பனாக்கி உறவாடாமலோ இருப்பார்கள் என்று நான் நம்பவில்லை என்று சொன்னார். (தி மாடர்ன் டேன்ஸ், குளோ-விஸ் சேப்பல் என்னும் புத்தகம்)

2. முன்னாள் நடனப்பயிற்சி ஆசிரியரும், லாஸ் ஏஞ்சல்ஸ் நடனக் கல்வியக இயக்குனருமாகிய திரு. T.A. ஃபால்கன் என்பவர்: “அதிர்ச்சி தரும் உண்மை என்னவெனில் நடனத்தின் மீதுள்ள மோகத்தினால் ஆட்கொள்ளப்பட்ட மூன்றில் இரண்டு பெண்கள் விழுந்துபோகின்றனர். இது உண்மையானதால், இந்த என் வார்த்தைகளை குறித்து வைத்துக்கொள்ளுங்கள் என்றார்.” (பாலே நடன அறை முதல் நரகம் வரை, பக்கம் 22).

3. முன்னாள் நடனப் பயிற்சி பேராசிரியர் வில்லியம் ஏச். ஹோம்ஸ் கூறுகையில் “பாலே நடன அறை ஏராளமானோர் அழிவிற்கு இட்டுச் செல்லும் ஒரு மார்க்கம். வீழ்ந்து போன ஆயிரக்கணக்கான தகப்பன்மார்கள், இருதயம் உடைந்துபோன தாய்மார்கள், நடனங்களில் அடிமைப்பட்டுப்போன மனைவிமார்களின் லேகியோன் கணக்கான கணவன்மார்கள், வீட்டை பாழடைந்த இடமாக்கி விட்டு சென்றுபோன மகள்களைக் கொண்ட பெற்றோர், கைகோர்த்துப் போனதால் ஒற்றுமையின்றி சீர்குலைந்து போன இல்லங்கள் ஆகியோரின் கொதித்துப்போயிருக்கும் இதயங்கள்தான் யதார்த்த நிலை”, என்றார் (தி மாடர்ன் டான்ஸ், சேப்பல்).

**இ. நாகரிக நடனம் குறித்து ஒரு டாக்டரின் நோய் நிர்ணயக் குறிப்பு**

1. நியூஜெர்சியிலுள்ளஹோமியோபதி மருத்துவச்சங்கத்தில் உரையாற்றிய டாக்டர் ஃபிராஸ்க் ரிச்சார்ட்ஸன் "இன்றைய நடன அறைகள் விவாகரத்துக்கான துவக்கப்பள்ளிகள், விபச்சாரத்துக்கான பயிற்சிக் கூடங்கள் அவமானத்துக்கும் தீமைக்கும் பட்டமளித்து கௌரவிக்கும் பயிலகம்" என்றார் (மரணக்களியாட்டு எனும் புத்தகம் பக்கம் 70)

2. டாக்டர் A.C. டிக்ஸன் என்பவர் நாகரிகமெனக் கருதப்படும் நடனம் ஒரு உணர்ச்சி நயமற்ற இசையும், பிறரை மயங்கச் செய்யும் ஒரு அழகிய கலையுமாகும்; ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே பண்பாடோ, நாகரிகமோ இல்லாத நிலையை ஏற்படுத்தும் நேரங்கள்; வேசித்தனத்திற்கு வழிவகுக்கும் ஒரு மோசமான செயல் அது. இதன் ஒரே நிவாரணம் ஒரு வரை முழு அழிவுக்குட்படுத்துவது தான் என்று குறிப்பிட்டார் (மரணக்களியாட்டுப் புத்தகம், பக்கம் 70)

**ஈ. நடனம் பாவம் என்பதற்கான காரணங்கள்**

1. நடனம் தீர்க்க முடிவற்ற சந்தேகத்திற்குரியது (ரோமர் 14 : 23)
2. அது ஒழுக்கக் கேடானது (1 கொரிந்தியர் 15 : 33)
3. அது உலகத்தினால் உண்டான இச்சை (1 யோவான் 2: 15)
4. அது காம விவகாரம் (கலாத்தியர் 5:19)
5. அது களியாட்டத்துக்கும், வெறிக்களத்துக்குமுரியது. (கலாத்தியர் 5 : 21)
6. அது அழிவுக்குரியது (ரோமர் 6:23).
7. அது இடறச் செய்யும் கல் (ரோமர் 14:13)

**உ. உங்களிடம் சில கேள்விகள்**

1. உங்கள் கிறிஸ்தவ நண்பர்களை நடனமாட அழைப்பீர்களா?
2. நடனமாடுமிடத்தில் கர்த்தர் உங்களோடிருக்கிறார் என விசுவாசிக்கிறீர்களா?
3. ஒழுக்க ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் நம்மை உயர்த்தும் என்று நடனத்தை பரிந்துரைப்பீர்களா?
4. அப்படிப்பட்டவைகளில் தேவன் பிரியப்படுகிறாரா?
5. உங்களோடு நடனமாடுபவருடன் கிறிஸ்துவைப் பற்றிய காரியங்களை உரையாடக்கூடுமா?

6. கர்த்தருடைய இரண்டாம் வருகை நேரத்தில் நடனமாடுமிடத்தில் இருக்க விரும்புவீர்களா?

ஊ. ஜனங்களே விழித்தெழுங்கள் !

1. பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளை உணர்த்த விழித்தெழுங்கள்.
2. வாலிபரே, நீங்கள் தவறான படியில் கால் வைக்கும் முன் விழித்தெழுங்கள்.
3. நடனமாடுவது பாவந்தான்! கறையில்லாமல் நடனத்தில் பங்குபெற இயலாது.

## முடிவுரை

1. ஜெபிக்கும் முழங்கால்களும், நடனமாடும் பாதங்களும் ஒத்துப்போவதில்லை என்பதை மனதில் வையுங்கள்.
2. கர்த்தர் உங்கள் பக்கம் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் கர்த்தர் பக்கம் காத்திருங்கள்.

# மூப்பர்களின் தகுதியாம்சங்களும் பணியும்

1 தீமோத்தேயு 3; அப்போஸ்தலர் 20 : 28

Qualifications & Work of Elders

## முகவுரை

1. முன்னோடித்துவத்துக்கு ஏற்புடைய தேவை உள்ளது.

அ. வியாபார உலகில் முன்னோடித்துவத்தின் தேவையுண்டு.

ஆ. அதேபோல சபையிலும் முன்னோடித்து தேவையுண்டு.

2. கர்த்தருடைய ஜனங்களுக்குள் முன்னோடித்துவம் இல்லாத குறைபாடுகளினால்,

அ. தங்களிலுள்ள திறமைகளைக் குறித்து கவனமற்றவர்களாய் இருக்கின்றனர்.

ஆ. வேறு சிலர் போதிய செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை.

3. முன்னோடிகள் இன்னும் அதிகமாய் தேவைப்படுகின்றனர்.

4. இந்த பகுதியை விட்டுவிடக்கூடாது.

5. வருங்கால முன்னோடிகளாய் வர உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளுங்கள்.

## விவாதம் :

**அ. மூப்பர்களின் தகுதியாம்சங்கள் (1 தீமோத்தேயு 3: தீத்து 1)**

**1. நேர்மறைத் தகுதி**

| | | |
|---|---|---|
| அ. | குற்றஞ்சாட்டப்படாதவன் | - குற்றஞ்சாட்ட ஏதுவான எந்த செயலையும் கொண்டிராதவன் |
| ஆ. | ஜாக்கிரதையுள்ளவன் | - சபையின் ஊழியங்களிலே உயிரோட்டமுள்ள செயல்பாடுகளை கவனமாய் செய்பவன் |
| இ. | தெளிந்தபுத்தியுள்ளவன் | - ஆரோக்கியமான மனதும் பகுத்தாய்வு செய்பவனுமாயிருத்தல் |
| ஈ. | யோக்கியதையுள்ளவன் | - எப்பொழுதும் தன் கிறிஸ்தவ ஒழுக்கத்தை காத்துக்கொள்பவன் |
| உ. | அந்நியரை உபசரிக்கிறவன் | - வருகிறவர்களை நன்கு கவனித்து பராமரிப்பவன் |
| ஊ. | பொறுமையுள்ளவன் | - நீடிய பொறுமை, சாந்தம் மற்றும் தயவுள்ளவன் |
| எ. | புறம்பேயிருக்கிறவர்களாலே நற்சாட்சி பெற்றவன் | - சபைக்கு புறம்பே (வெளியே) இருக்கிறவர்களிடம் நல்லவன் என்று பெயர் பெற்றவன் |
| ஏ. | பொறுமையுள்ளவன் | - இச்சை அடக்கமுள்ளவனாய் தவறான பழக்க வழக்க மற்றவனாயிருக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஐ. | நீதிமான் | - நடுநிலை வகிப்பவன் ஒருதலை பட்சமாக தீர்ப்பு செய்யாதவன் |
| ஒ. | பரிசுத்தவான் | - தூய்மையும், தேவபக்தியும் கொண்ட இருதயம் |

**2. எதிர்மறை தகுதியாம்சங்கள்**

| | | |
|---|---|---|
| அ. | மதுபான பிரியனாய் இருக்கக்கூடாது | - போதை தரும் எந்த வகை பானத்தையும் விரும்பாதவன், சமுதாயத்துடன் பருகும் போதை வஸ்துக்களில் பிரியமில்லாதவன் |
| ஆ. | அடியாதவன் | - சண்டை பண்ணாமல், தன்னுடன் ஒத்துப் போகாதவனை அடிக்கும் பழக்கம் இல்லாதவன் |
| இ. | இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயிருக்கக்கூடாது | - உலகப் பிரகாரமான பொருளாசையோ, கனத்தையோ விரும்பாதவன் |
| ஈ. | பண ஆசை இல்லாதவன் | - பணத்தை நேசிக்காதவன் |
| உ. | சண்டை பண்ணுகிறவனா யிருக்ககூடாது | - வாதம் பண்ணுதல் தொல்லை கொடுத்தல் பிரிவினை கொள்ளாமலிருப்பவன் |
| ஊ. | முற்கோபமில்லாதவன் | - மூர்க்கமான (முன்) கோபங்கள் சபையை உடைக்கும் கருவிகளாகும் |
| எ. | தன் இஷ்டப்படி செய்யாதவன் | - எந்தக் காரியத்தைப் பேசினாலும் தான் நினைக்கும் முடிவையே ஏற்க வேண்டும் எனும் மனபாங்கு உள்ளவனாக எதையும் தோண்டி துருவி குற்றம் கண்டுபிடிக்கக் கூடியவனாக காலங்காலமாய் இருந்த வரைமுறையை எதிர்க்க கூடியவனாக இருக்கக் கூடாது. |

3. **சிறப்பு தகுதியாம்சங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அ. | ஒரே மனைவியையுடைய புருஷன் | - | திருமணமானவராகவும் பல மனைவிகளையுடைய வனாகவோ விவாகரத்து பெற்ற மனிதனாகவோ இருக்கக் கூடாது. |
| ஆ. | விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன் | - | சபையில் விசுவாசமுள்ள அங்கத்துவம் உடைய பிள்ளைகளையுடையவன் |
| இ. | தன் சொந்தக்குடும்பத்தை நடத்துகிறவன் | - | தன் குடும்பத்தாரின் நன்றாய் மதிப்பைபெற்றவனாகவும் தன் மனைவியின் அதிகாரத்துக்கு உட்படாதவனாயும் இருக்க வேண்டும் |
| ஈ. | நூதன சீஷனாயிருக்கக்கூடாது | - | புதிதாக மனமாற்றப்பட்டவனாக (ஞானஸ் நானம்பெற்றவனாக) இருக்கக் கூடாது. |
| உ. | போதக சமர்த்தனாக இருக்க வேண்டும் | - | அவதூறு பேசுகிற தர்க்கம் பண்ணுகிறவர்களுடைய வாயை வேத வசனத்தினால் அடைக்கக் கூடியவனாயிருக்க வேண்டும். |

## ஆ. மூப்பர்களின் பணி (அப் 20:28)

1. விளக்கமாகக் கூறுவதென்றால், அவர்களுக்குப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளே அவர்களது பணிகளை இயல்பாக விவரிக்கிறது.

   அ. மூப்பர் - வயதில் மூத்தவர், வாழ்க்கையில் பல வித அனுபவங்களையும் பெற்றவர்.

   ஆ. மேய்ப்பர் - மந்தையைக் கவனித்து வழி நடத்துபவர்

   இ. கண்காணி (பிஷப்) - மேற்பார்வையிடுபவர்

   ஈ. பிரிஸ்பட்டர் (கண்காணி) - மூப்பு அடைந்தவர்

2. மந்தையை போஷித்து வழிநடத்தி ஆண்டு நடத்துபவர்

3. அவர்களுடைய பணியில் உதவுவோர்

   அ. பொருளாளர்

ஆ. பாடல் நடத்துவோர்

இ. சுவிசேஷகர்

4. உதவிக்காரர்கள் மூப்பர்களுக்குக் கீழ் பணியாற்றுகிறவர்கள்

5. மூப்பர்கள் மந்தையை மேய்க்கக் கூடியவர்களும், தேவை ஏற்படும்போது தவறுகளை கண்டிக்க கூடியவர்களும், தேவையுடையோருக்கு உதவுவதுமே!

6. மூப்பர்கள் உள்ள அந்தந்த பிராந்திய சபைகளுக்கப்பால் அவர்களது அதிகாரம் செலுத்த முடியாது.

## முடிவுரை :

1. இத்துடன் வேறு அநேக பாடங்கள் (கருத்துக்களை) சேர்க்கப்படலாம்.

2. மூப்பர்களை நியமித்தல் மூப்பர்களுக்கு சபையாரின் கடமைகள் போன்றவற்றை இத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்.

3. இவற்றை ஜெபத்துடன் எண்ணிப் பாருங்கள்

# கிறிஸ்துவுக்காகத் தீர்மானித்தல்

## Making a Decision of Christ

## முகவுரை

1. தீர்மானித்தல் குறித்து மிக அதிகமாய் கூறப்பட்டுள்ளது.

2. பில்லிகிரஹாம் தனது பிரசங்கத்தை கேட்போரை கர்த்தருக்கென்று தீர்மானியுங்கள் என்று கூறுவார்.

3. தீர்மானித்தல் என்றால் என்ன? அதில் எவையெல்லாம் அடங்கும்?

4. எவையெல்லாம் இதில் உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை சற்று ஆய்வு செய்வோம்.

## விவாதம்

**அ. கிறிஸ்துவுக்கென்று தீர்மானித்தல் என்பது...**

1. தன் மனதில் முடிவு எடுத்துக் கொள்ளுதல்

2. கர்த்தருக்கு தான் கீழ்படிவதாக தீர்மானித்தல்

3. முற்றிலும் அவரைப் பின்பற்றுதல்

**ஆ. அப்படியொரு முடிவை எடுக்க ஒருவரை இயக்குவது எது?**

1. ஒருவர் தனது நிலைமையை உணருதல் (ரோமர் 3:23)
2. கர்த்தருடைய மரணத்தின் உண்மைகளை (சத்தியத்தை) பெறுதல் (ரோமர் 5:8)
3. இரட்சிக்கப் பட விரும்புதல்

**இ. அப்படியொரு தீர்மானத்தை எடுத்த சிலர்**

1. பெந்தகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்டவர்கள் (அப் : 2)
2. எத்தியோப்பிய மந்திரி (அப் : 8)
3. சவுல் (அப் : 9)
4. கொர்நெலியு வீட்டார் (அப் : 10)
5. பிலிப்பிய சிறைக்காவலன் (அப் 16:25:40)

**ஈ. அப்படியொரு தீர்மானத்தை எடுக்க வேண்டியவர்கள்**

1. பாவி
2. தவறில் வாழும் கிறிஸ்தவன்
3. கிறிஸ்தவன்

**உ. எப்பொழுதுதெல்லாம் தீர்மானிக்க வேண்டும்.**

1. தேவனுடைய வசனத்தை நீங்கள் வாசிக்கும் பொழுதுதெல்லாம் தீர்மானிக்கலாம்.
2. ஒரு பிரசங்கத்தைக் கேட்கும்போது தீர்மானிக்கலாம்
3. கர்த்தரை நீங்கள் நினைக்கும்பொழுதெல்லாம்

**ஊ. கர்த்தருக்கு எதிராகத் தீர்மானித்தவர்கள்**

1. பேலிக்ஸ் (அப் : 24)
2. அகிரிப்பா இராஜா (அப் : 26)

**எ. கர்த்தருக்கென்று தீர்மானியுங்கள்**

1. சுவிசேஷத்துக்குக் கீழ்படியுங்கள்
2. அது எப்படிப்பட்ட பாதையாக இருக்கக் கூடும், இடுக்கமும் நெருக்கமுமானதா? விசாலமானதா?
3. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது.

# இயேசுவை பிரபல்யப்படுத்துதல்

## Advertising Jesus

### முகவுரை

1. விளம்பரப்படுத்துதல் பிரயோஜனமானது என்று கண்டறியப்பட்டுள்ளது.
   - அ. விளம்பர பலகைகள் மூலம்
   - ஆ. செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிக்கைகள் மூலம்
   - இ. வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம்
2. மார்க்க ரீதியான விஷயத்திலும் இது உண்மையானது.
   - அ. முதல் நூற்றாண்டில் இது பிரயோஜனமாயிருந்தது போலவே இப்பொழுதும் உள்ளது.
   - ஆ. இன்னும் அதிகமாய் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் முக்கியமானது.

### விவாதம்

**முதல் நூற்றாண்டில் இயேசுவை பிரபல்யப்படுத்திய சில வழிகள்:**

1. எழுதப்பட்ட வசனங்கள் மூலம் (II திமோ 3 : 16,17)
2. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்ததின் மூலம்
3. தாங்கள் கண்டவைகளைக் குறித்து சாட்சி கொடுத்ததின் மூலமாக (அப் 8: 1:12)
4. வசனத்தை பிரசங்கித்ததின் மூலமாக (மாற்கு 16:15)
5. முன்மாதிரியான நடத்தையின் மூலம் (1 கொரி 4:16)

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் இயேசுவை விளம்பரப்படுத்த சில வழிகள்:

1. எழுதப்பட்ட வசனங்கள் மூலமாக (I திமோத்மேயு 3:16,17)
2. செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் மூலமாக
3. வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக
4. ஆராதனையிலும் பிற கூட்டங்களிலும் பிரசங்கிப்பதன் வழியாக (மாற்கு 16:15)

5. தேவையுடையோருக்கு உதவுவதன் மூலமாக (யாக்கோ 1:27)
6. முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதன் மூலமாக (மத்தேயு 5:14-16)
7. சபையின் பணிகள் நிறைவேற உதவிகள் செய்வதன் மூலமாக (அப் : 20)

**விளம்பரத்தின் விளைவு**

1. முதல் நூற்றாண்டில் சுவிசேஷம் உலகம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டது.
2. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் அப்படிச் செய்ய முடியும் (சிறப்பாக இப்பொழுது இருக்கின்ற வசதி வாய்ப்புகளைக் கொண்டு பணியாற்ற ஆர்வமிருந்தால் அப்படிச் செய்யலாம்.
3. ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் அதன் மூலம் இரட்சிக்கப் படக்கூடும்.
4. முழு உலகமும் இதன் மூலம் அதிகமேன்மையடையக் கூடும்.

## முகவுரை :

1. உலகத்திற்கு இயேசுவை அறிவிக்க நீங்கள் செய்வது என்ன?
2. ஒவ்வொரு தனித்தனி அங்கத்தினரும் தங்களின் பங்காக இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும்.
3. காரியங்களை நிறைவேற்ற இதுதான் ஒரே வழி

# மனுஷன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் ?

(மத்தேயு 16: 26: மாற்கு 8:36,37)

What shall a man give in exchange for his sow?

## முகவுரை :

1. நமது பெரும்பாலான பிரயாசங்கள் மாமிச சரீரத் திற்காகவே.
2. ஆனால் நமக்குள் இருக்கிற ஆத்துமாவுக்காகத்தான் அதிக அக்கரை நாம் காட்ட வேண்டும்.

## விவாதம் :

**அ. ஒருவர் உலகத்தை ஆதாயப்படுத்தி தனது ஆத்துமாவை இழப்பாராகில் அவருக்கு கிடைக்கும் லாபம் என்ன?**

1. மாமிசக் காரியங்கள் கடந்து போகும், ஆனால் ஆத்மா தொடர்ந்து வாழ்ந்து கொண்டேயிருக்கும் (மத்தேயு10:28)
2. ஆத்மாவுடன் ஒப்பிடும்போது உலகத்தின் மதிப்பு ஒன்றுமில்லை
3. ஆத்மா இரட்சிக்கப்பட்ட (பாதுகாக்கப்பட்டிருக்க) கர்த்தர் ஒழுங்கு செய்துள்ளார்.

**ஆ. உங்களுக்கு ஒரு ஆத்துமா இருக்கிறது என்று நீங்கள் அறிவீர்களா?**

1. அநேகருக்குத் தெரியாது
2. அதைக்குறித்து நீங்கள் என்ன செய்து கொண்டுள்ளீர்கள்?

**இ. ஆத்துமாவிற்காக மனுஷன் என்னத்தைக் கொடுப்பான்? (மத்தேயு 16: 26 )**

1. இதைப் பற்றி கூறும் பல்வேறு மொழிப்பெயர்ப்புகள் சொல்வ...

அ. மனித ஆத்துமாவுக்கு ஈடான அதிகப்பட்ச விலை என்ன?

ஆ. மனுஷன் தன் (ஆத்துமாவுக்காக) ஜீவனுக்காக என்னத்தை கொடுப்பான்?

இ. ஒரு முறை தன் ஆத்துமாவை இழந்துவிட்டால் அதற்கு ஈடாக என்னத்தைச் செலுத்தி ஆத்மாவை மனுஷன் திரும்பப் பெற முடியும்.

2. உங்கள் ஆத்துமாவுக்கு ஈடாக எதை எடுத்துக்கொள்வீர்கள்

அ. பணத்தையா?

ஆ. உலகப் பொருள்களையா?

இ. சந்தோஷத்தையா?

ஈ. மனித மார்க்கத்தையா?

3. அல்லது இழந்துபோன ஆத்துமாவுக்கு கிரயமாக என்னத்தை செய்வீர்கள்?

அ. கீழ்படிதலையா? (எபிரெயர் 5:8:9)

ஆ. பாவத்தை விட்டு விடுதல்

இ. முதலாவது தேவனைத் தேடுதல்

ஈ. உங்கள் நேரத்தையும் பிரயாசத்தையும்

4. நீங்கள் உங்கள் ஆத்துமாவை நித்தியத்திற்கும் இழந்து போவீர்களானால் உங்கள் ஆத்துமாவைத் திரும்பப் பெற வழி எதுவுமில்லை.

ஈ. அநேகர் தங்கள் ஜீவனைக் (ஆத்துமாவைக்) குறித்து அக்கரையற்றவர்களாயிருக்கின்றனர்

1. அதிக நேரத்தை உலகக்காரியங்களில் செலவிடுகின்றனர்.
2. உலகத்தோடு ஒத்துப்போகின்றனர்
3. மனித உபதேசங்களை ஏற்றுக் கொள்கின்றனர்
4. உலகப் பிரகாரமான ஒழுக்கங்களை (நெறிமுறைகளை) கை கொண்டு வருகின்றனர்.
5. மதத்துடன் விளையாட்டுப் போக்கை கடைபிடிக்கின்றனர்.

உ. தங்கள் ஜீவனை இழந்துபோன சிலர் :

1. ஐசுவரியவான் (லூக்கா 16:19:31)
2. யூதாஸ்காரியோத் (அப்போஸ்தலர் 1)
3. ஐசுவரியமுள்ள மதிகேடன் (லூக்கா 12:16-31)
4. அனனியா மற்றும் சப்பீராள் (அப். 5)

ஊ. ஆத்துமா (ஜீவன்)

1. தேவன் அதை சிருஷ்டித்தார்
2. தேவ சாயலாக அதை சிருஷ்டித்தார்

3. ஆவியாக சிருஷ்டித்தார்
4. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஆத்மா வாழ்கிறது.
5. அழிவில்லாது
6. ஒருவரிடமிருந்து ஆத்துமா இழந்துபோகக் கூடும்
7. அல்லது இரட்சிக்கப் (பாதுகாக்கப்பட) முடியும்

## முடிவுரை

1. உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பு என்ன?
2. நீங்கள் இரட்சிக்கப்படவே இயேசு உங்களுக்காக மரித்தார்.

# நான் ஏன் கிறிஸ்துமஸ் பண்டிகையை அனுசரிக்கக் கூடாது?

## Why I cannot observe Christmas?

## முகவுரை

1. கிறிஸ்தவ உலகம் கிறிஸ்துவின் பிறந்த நாளை அனுசரிக்கும் பொருட்டு டிசம்பர் 25-ந் தேதியை தெரிந்து கொண்டுள்ளது.
2. உண்மைக் கிறிஸ்தவர்கள் இப்படி பண்டிகையை அனுசரிப்பதில் நம்பிக்கை கொண்டிராவிட்டாலும், மேலும் மேலும் அநேகர் இப்பண்டிகையை ஏற்றுக்கொள்ளவே செய்கின்றனர்.
3. தனிப்பட்ட முறையில் நான் இப்படிப்பட்ட அனுசரிப்புகளை ஒத்துப்போக இயலாது.
    அ. ஏதோ வெறியார்வத்தால் அப்படி நான் சொல்லுகிறதில்லை.
    ஆ. அதே வேளையில் மற்றவர்களைப் பார்த்து ஏமாற்றப்பட்டவனாய் அப்படி நான் சொல்லுகிறதுமில்லை.

## விவாதம்:

**அ. நான் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதில்லை ஏனெனில்**

1. அதிலே கிறிஸ்துவுக்கு இடமில்லை

2. திருமறையில் அப்படியொரு உபதேசம் ஒரு இடத்தில் கூட காணப்படவில்லை.
3. பிற மத ஆசரிப்புகளைக் போன்றதாகத்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையும் ஆசரிக்கப்படுகிறது.
4. வசனம் அப்படிப்பட்ட ஆசரிப்புக்களை கடிந்துகொள்கிறது. (கலாத்தியர் 4:10)
5. இந்த பண்டிகையை அனுசரிப்பதினால் மற்றவர்களுக்கு ஒரு தவறான முன்னுதாரணத்தைக் காட்டுகிறோம்.
6. நமது பிள்ளைகளை தவறான வழிக்கு நடத்துகிறோம்
7. இப்படிப்பட்ட பண்டிகைகளை அனுசரிப்பதன் மூலம் மனித உபதேசங்களை தொடர்ந்து வளர நாமே உதவி செய்கிறோம்.
8. தேவனைப் பரியாசம் பண்ணும் காரியங்களில் நமது நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறோம்.
9. பிற மதங்களின் ஆசரிப்புகளை குறைகூறி போதித்து விட்டு, பிறகு நாமே சுயமாக ஒரு ஆசரிப்பை அந்த இடத்தில் வைத்து செயல்படுவதால் நமது (அந்த மத ஆசரிப்பைக் கொண்டிருந்து அவைகளை விட்டுவந்த) பிற மார்க்க சகோதர்களுக்கு குழப்பத்தையும் வேடிக்கையையும் கொடுக்கிறது.

**ஆ. “கிறிஸ்தவர்கள் எனப்பட்டோர்” ஏன் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட விரும்புகின்றனர்?**

1. அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை செய்ய ஊக்கமளித்து வளர்க்கப்பட்டிருப்பதால், வெகு சுலபமாக நமது மக்கள் இப்படிப்பட்ட பாரம்பரியங்களை கை கொள்ளத் துவங்குகின்றனர்
2. அநேகரும் அதை அனுசரிப்பதால் அது பிரசித்தமான ஒன்றாக மக்களுக்குள் காணுகிறது
3. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அது பெரிய மகிழ்ச்சிதரும் காரியமாகக் காணுகின்றனர்.
4. சிலர் அப்பண்டிகை உண்மையிலேயே கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூரக் கூடியதாக கருதுகின்றனர்.

**இ. உண்மைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் குறித்து செய்ய வேண்டியது என்ன?**

1. அவர் அதிலிருந்து விலகி நிற்க வேண்டும்.

2. அதை எதிர்ப்பதில் வெறியார்வம் உடையவராயிருக்கக் கூடாது.
3. இப்படிப்பட்ட பண்டிகை நாட்களிலும் அவர் பிற நாட்களைப் போலவே சாதாரணமாக நடந்து கொள்ள வேண்டும்.
4. அது தேசீய விடுமுறை நாளாக இருந்தால் வழக்கம் போல் விடுமுறையை கழிக்கலாம்
5. ஒருவருக்கொருவர் வெகுமதிகளை எப்போதும் கொடுப்பது தவறல்ல; ஆனால் இப்பழக்கம் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போா மட்டுமே நினைக்கக் கூடாது.

ஈ. **சிந்திக்க வேண்டிய சில காரியங்கள்**

1. கிறிஸ்துமஸ் நாம் கொண்டாடாதபடியால் நாம் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம் என்று பொருள் கிடையாது.
2. புதிதாய் வந்த கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் நாடுகளின் இந்து, முஸ்லீம் போன்ற மதங்களிலுள்ள பண்டிகைகளைத் தொடர்ந்து செய்து வந்தால் நாம் என்ன நினைப்போம்?
3. பிற மதப் பண்டிகைகளையும் அதற்குச் சமமான கிறிஸ்துமஸ் பண்டிகைகளையும் கண்ணுறும் உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு நாமும் கொண்டாடலாம் என்கிற எண்ணம் உருவாகலாம்.
4. ஆனால் எந்த மதப் பண்டிகைகளும் உண்மைக் கிறிஸ்தவனுக்கு நாட்டம் ஏற்படுத்தாது.

## முடிவுரை

1. நீங்கள் எதைச் செய்தாலும் கிறிஸ்துமஸ்ஸை எந்த வியாக்கியான வார்த்தையாலும் நான் ஏற்றுக்கொள்ள இயலாது.
2. அப்படி நான் புறக்கணிப்பதால் இதற்கு முன் உணர்ந்திராத ஒரு விடுதலையை நான் உணருகிறேன்.
3. நீங்களும் இவைகளை நேர்மையாகச் சிந்தித்துப் பாருங்கள்.
   அ. கிறிஸ்துமஸ் மரம் நட்டு, கிறிஸ்துமஸ் எனும் பாரம்பரியத்தை குடும்பத்துடன் ஏன் அனுசரிக்க வேண்டும் என்பதை சற்று நிதானித்துச் சிந்திப்பீர்கள் என்று நம்புகிறேன்.
   ஆ. உங்களைப் போன்றே பண்டிகை அனுசரிப்போரைக் குறித்து நீங்கள் சொல்லுவது என்ன?
4. இந்த அஞ்ஞானப் பாரம்பரியத்தைக் குறித்து தேவன் எப்படி வெறுப்பார்?

5. கிறிஸ்தவம் மிகவும் அழகானதும், தேவன் கொடுத்துள்ள சட்டங்களின் படியே நடந்து கொள்ளும் போது மிகவும் அர்த்தமுள்ளதுமாகும்.

# பெந்தகோஸ்தே நாளில் நடந்த சில சம்பவங்கள் அப்போஸ்தலர் 2

## Some things that took place on the day of Pentecost

### முகவுரை :

1. பெந்தகோஸ்தே நாள் என்பது மிகவும் பெரிய ஒருநாள் அதில் அநேக பெரிய காரியங்கள் சம்பவித்தன.
2. அந்த நாளில் நடந்த சில சம்பவங்களை ஆய்வு செய்வதே இந்தப் பாடத்தின் நோக்கம்.

### விவாதம் :

அ. பெலன் வந்தது

1. தேவனுடைய இராஜ்யம் பெலத்தோடே வரும் என்று தீர்க்க தரிச னமாகச் சொல்லப்பட்டிருந்தது. (யோவேல் 2:28-29)
2. தேற்றரவாளனை அப்போஸ்தலருடன் இருக்கும்படி அனுப்பப் போவதாக கிறிஸ்து கூறியிருந்தார். (யோவான் 16 : 13)

அ. அவர்களை சகல சத்தியத்துக்குள்ளும் அவர் வழி நடத்துவார்.

ஆ. அற்புதங்களையும், பல அதிசயங்களையும் அவர்கள் செய்ய அவர் பெலன் கொடுப்பார் என்றும் கூறப்பட்டிருந்தது.

3. அப்போஸ்தலர்கள் ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:1-4)

ஆ. அப்போஸ்தலர்கள் அந்நியபாஷையிலே பேசத்துவங்கினர்.

1. வித்தியாசப்பட்ட மொழிகளில் அவர்கள் பேசினார்கள் (அப்போஸ்தலர் 2:4)
2. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாஷைகளிலே சத்தியத்தைக் கேட்க முடிந்தது. (அப்போஸ்தலர் 2:8)

இ. முதன் முதலாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

1. அதற்கு முன் சுவிசேஷம் வரும் என்பதை ஒரு வாக்குத்தத்தமாக மட்டுமே பிரசங்கிக்கப்பட்டது (மத்தேயு 3)
2. இப்பொழுது பேதுரு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 2:32)
3. சுவிசேஷத்தின் கட்டளைகளையும் பேதுரு பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 2:38)

**ஈ. கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்டது.**

1. ஏறத்தாழ மூவாயிரம் பேர் சபையிலே சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள் (அப்போஸ்தலர் 2:41)

**உ. இரட்சிக்கப்படுகிறவர்கள் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.**

1. கர்த்தருடைய சபையிலே ஒருவர் தானாக சேர்ந்துகொள்ள முடியாது.
2. தமது சபையிலே ஒருவர் சேர்க்கப்படலாமா கூடாதா என்பதை கர்த்தர் தீர்மானிக்கிறார் (அப்போஸ்தலர் 2:47)
3. கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக மாற, ஒருவர் கர்த்தருக்குக் கீழ்படிய வேண்டும், பரலோகத்திற்குப் போக அவர் கர்த்தருக்குள் உண்மையாய் நிலைத்திருக்க வேண்டும். (மத்தேயு 7:21-23).

**ஊ. ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலரின் உபதேசங்களில் தரித்திருந்தனர்.**

1. தேவனை அவருடைய சித்தத்தின்படி தொழுது கொண்டனர். (அப்போஸ்தலர் 2:42)
2. வழக்கத்திற்கு மாறான ஒரு செயலாக, அவர்கள் தேவையுடையோருக்கு ஏற்ப ஒவ்வொருவரும் தங்களின் பொருட்களையும் ஆஸ்திகளையும் பகிர்ந்து கொண்டனர். (அப்போஸ்தலர் 2:44)
3. பரலோகத்தின் தேவனுக்கே துதிகளைச் செலுத்தினர் (அப்போஸ்தலர் 2:47)

**எ. வித்தியாசப்பட்ட தீர்க்க தரிசனங்கள் நிறைவேறின.**

1. யோவேலின் தீர்க்க தரிசனம் நிறைவேறியது (அப்போஸ்தலர் 2 : 16 - 21 )
2. கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறின (மாற்கு 9:1)

### முடிவுரை

1. அந்த நாளில் நடந்தவைகள் காலங்களினூடே இன்று வரை நினைவுகூரப்படுகிறது.
2. அந்த நாளில் ஸ்தாபிக்கப்பட்ட சபை அழிக்கப்படவில்லை, அழியவும் செய்யாது (இயலாது)
3. பெந்தகோஸ்தே நாளின் சம்பவங்களில் கர்த்தருடைய கரம் இருந்ததால், என்றென்றும் அந்நாள் நிறைவு கூறப்படும்.
4. அந்த நாளில் நடந்த காரியங்களின் விளைவாக, மனிதன் எப்பொழுதுமே ஆசீர்வதிக்கப்படுவான்.

# அன்பின் நான்கு வடிவங்கள்

## Four Forms of Love

### முகவுரை :

1. "அன்பு" எனும் வார்த்தை ஏராளமான அர்த்தங்களுக்கு சர்வ சாதாரணமாய் பயன்படுத்தப்படுகிறது.

   அ. நான் என் பூனை, நாய், பறவைகளை நேசிக்கிறேன்.

   ஆ. நான் என் காரை விரும்புகிறேன்.

   இ. ஐஸ்கிரீம், நல்ல உணவு, பழங்கள் என் விருப்பம்.

   ஈ. நான் எனது நகரம், எனது மாநிலம், என் நாடு ஆகியவற்றை நேசிக்கிறேன்.

   உ. பறக்கிறதையும், பயணம் பண்ணுவதையும், வீட்டுக்குப் போகிறதையும் பிரியப்படுகிறேன்.

   ஊ. நான் என் பள்ளியையும், என் வேலையையும் நேசிக்கிறேன்.

2. இப்படி "அன்பு" எனும் பதத்தின் மாறுபட்ட வார்த்தைகள் எல்லா வகையிலும் பயன்படுத்தப்படுகிறது.
3. அன்பைக் குறித்த அடிப்படைகள் தெரியாதோர் அநேகர் உண்டு; அவர்கள் அர்த்தத்தை அறியாதவர்கள்.
4. ஆங்கிலத்தில் அன்பின் அநேகப் படிவங்களை ஒரே வார்த்தையாகிய (Love) அன்பு என்கிற பதத்தில் பயன்படுத்தப்படுகிறது.

5. கிரேக்க மொழியில் அன்பு எனும் பதம் குறைந்தபட்சம் நான்கு படிவங்களில் (நான்கு ரீதியில்) கூறப்பட்டுள்ளது. அவைகளில் மூன்று புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது, மற்றொன்று விளக்கமளிக்க பயன்படுத்தப்படுகிறது.

6. நாம் ஒவ்வொரு படிவத்தையும் நன்கு கற்று, அவைகளின் செயல்களைப் புரிந்துகொள்வோமாயின் அன்பைப் பற்றிய நமது அநேக தவறான புரிந்துகொள்ளுதல் தெளிவாக்கப்படக்கூடும்.

## விவாதம் :

**அ. தெய்வீக அன்பு :**

1. புதிய ஏற்பாட்டில் 224 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு 7:12-ல் ஒரு நல்ல விளக்கம் இது குறித்து கூறப்பட்டுள்ளது.
2. இதுவே உச்சகட்ட அன்பு.
3. தேவனை முதலாவதாக வைத்து அவருக்குக் கீழ்படிய பிறருடைய நலனையும் நோக்குதல் அவசியம் என்பது இதன் பொருள்.
4. தேவனால் கட்டளையிடப்பட்ட அன்பு இதுதான்.
5. பிரியத்தினால் ஏற்படும் உணர்ச்சிவயப்படுதலை இந்த அன்பு தனக்குள் கொண்டதல்ல.
6. இப்படிப்பட்ட அன்பைத் தான் உலகத்தில் தேவன் வெளிப்படுத்தினார். (யோவான் 3:16; ரோமர் 5:8)
7. உலகிற்கும் சபைக்கும் கிறிஸ்து வெளிப்படுத்திய அன்பு இதுதான் (யோவான் 15:13, எபேசியர் 5:25)
8. அன்பு பிறருக்கு பொல்லாங்கு செய்யாது (ரோமர் 13:10)
9. அன்பே பெரிது (1 கொரிந்தியர் 13:13)
10. சத்துருக்களிடமும் நாம் அன்புகூற வேண்டும் (மந்தேயு 5 : 44)
11. நாம் தேவனிடத்திலும் அன்புகூற வேண்டும். (மத்தேயு 22 : 37)
12. நம்மிடத்தில் அன்புகூறுவது போல நாம் பிறனிடத்திலும் அன்புகூற வேண்டியவர்கள் (மத்தேயு 22:39)
13. புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூற வேண்டும் (எபேசியர் 5:25)
14. முதிர் வயதுள்ள ஸ்தீரிகள் பாலிய ஸ்திரீகளுக்குப் புத்தி

சொல்லி தங்கள் புருஷரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களாயிருக்கச் சொல்ல வேண்டும். (தீத்து 2:4)

15. இந்த வகை அன்பு ஒரு புதிய பிரமாணம் (யோவான் 13 : 34, 35)

16. தெய்வீக அன்பு சிட்சிக்கும் (எபிரேயர் 12:6)

17. நேரம் வரும்போது (தீய காரியங்களுக்கு) இந்த அன்பு “முடியாது” என்று சொல்லும்

**ஆ. சகோதர அன்பு**

1. பிற மனிதரின் வருகையால், நட்பின் நேசத்தால், அனல் கொள்வது இந்த அன்பு.

2. பிறர் மீது கொண்டுள்ள பிரியத்தின் வெளிப்பாடு

3. தேவனிடத்திலும் சிநேகிதனிடத்திலும் திருமண பந்தத்திலும் வெளிப்படும்.

அ) இயேசுவும் கூட தன்னுடைய சீஷர்களில் ஒருவரை மிகவும் நேசித்தார். (யோ 13: 23)

4. அன்பு “அதிகாரம்” செலுத்தாது (Phileo); அது ஊக்கப்படுத்தும்.

5. பல்வேறு அளவுகளில் வந்து செல்லும்.

6. மற்றவர்களிடம் நமக்கு இந்த அன்பு இப்பொழுது இல்லை என்றாலும் பரவாயில்லை; திருமணத்தின் போது ஒருவருக்கு ஒருவர் இப்படிப்பட்ட அன்பு இல்லையென்றாலும் பரவாயில்லை - பொறுமையாய் இருங்கள். அது சரியான சூழ்நிலையில் வந்து விடும். மேலும் எப்பொழுதும் நிலைத்திருக்கும்.

7. திருமண உறவில் (Phileo) அன்பு இல்லாமற்போவதினால் விவாகரத்து செய்வது அர்த்தமற்றது.

8. சில, மற்றவர்கள் மீது தாங்கள் அன்பு என்னும் உணர்வை வைத்திருப்பதை தவறு என்று எண்ணுகின்றனர். ஆனால் அந்த உணர்வில் இச்சையோ, பாவம் செய்வதற்கான சோதனையோ இல்லாத பட்சத்தில் அது தவறல்ல.

அ. மனிதர்களைப் போலவே எல்லா வகையிலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதிருந்தவர் இயேசு என்பதை நினைவில் கொள்ளவும்.

ஆ. நமது வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் சோதனைகளில் நாமாகப்போய் (அன்பு என்ற பெயரில்) சிக்கிக் கொள்ளக்கூடாது.

9. தெய்வீக அன்புடன் சகோதர அன்பு இடம் பெறுதல் வேண்டும்.

**இ. தேக்கி வைத்த அன்பு**

1. இயல்பான குடும்பக் கட்டுக்கோப்பு
2. பிற அன்புடன் இணைந்து வராதது
3. இந்த அன்பு கொல்லப்பட்டதாகக் கருதப்பட்டாலும், அது இருந்து கொண்டேதான் இருக்கும்.
4. அன்பின் பிற படிவங்களிலிருந்து (வகைகளில்) வித்தியாசபட்டது.
5. தெய்வீக அன்புடன் சேரும்போது மிகவும் பொருத்தமானது
6. இதைச் உற்சாகப்படுத்த பின்வரும் காரியங்கள் உதவும்.

அ. ஒன்றாக சாப்பிடுவது மூலம்

ஆ. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம்

இ. நமது செய்கையால் அன்பை வெளிப்படுத்துவதினால்

i) இயேசு எவரிடத்திலும் "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொன்னதாக வசன ஆதாரம் எதுவுமில்லை

ii) வாய்ப்பேச்சு இல்லாத ரீதியிலேயே இயேசு தமது அன்பை (செயலில்) காட்டினார்.

**ஈ. காதல் (காம) அன்பு**

1. புதிய ஏற்பாட்டில் இப்பதம் பயன்படுத்தவில்லை. ஆனால் விளக்கப்பட்டுள்ளது.

அ. இருவர் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்பதும்

ஆ. விவாக மஞ்சம் அசுசிபடாததாயிருக்க வேண்டும் என்பதுமாகும்

2. வசன ரீதியான திருமணமாயின் அந்தக் கட்டுப்பாட்டுக்குள் மேற்குறித்த அன்பை வெளிப்படுவதில் தவறோ அசிங்கமோ எதுவும் இல்லை.

அ. நாம் இதில் எல்லை மீறக் கூடியவர்களாயிருக்கக் கூடும்.

ஆ. கர்த்தர் இந்த அன்பு எங்கே இருக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த இடத்தில் அதை வெளிப்படுத்தி திருமறை வாக்கியத்தின்படி அமலாக்க வேண்டும்.

இ. தேவனுடைய வசனத்தின்படி இந்த அன்பு இருக்குமேயானால் அது

மிகவும் அழகானது ஒரு மனுஷனுக்கும் மனுஷிக்கும் இடையிலான திருமணபந்தம் கர்த்தருக்கும் அவருடைய சபைக்குமிடையிலுள்ள பந்தத்துடன் ஒப்பிடப்படுகிறது.

4. பிற அன்பின் (படிவங்களுடன்) வகைகளுடன் சேராமலேயே வெளிப்படுத்தப்படுவது

5. ஆகிலும் தெய்வீக அன்பில்லாமல் வெளிப்படும் காதல் அன்பு அர்த்தமற்றது.

6. தெய்வீக அன்பே வெற்றிகரமான காதல் (திருமண) அன்பைக் கொடுக்கக்கூடியது.

## முடிவுரை :

1. இன்று அநேகருக்கு தெய்வீக அன்பை எப்படி வெளிப்படுத்துவது என்பது தெரிவதில்லை; மேலும் அவர்களிடம் மற்ற வகை அன்பும் இல்லை.

2. அன்பை அவர்கள் பற்றிக்கொள்ள விரும்புவதால் பிறர் கவனத்தை தன்பக்கம் திருப்ப அரும்பாடுபடக் கூடும். இதனிமித்தம் எப்பொழுதும் வியாதியுள்ளவர்களாக அல்லது தற்செயலான சலன முள்ளவர்களாயிருக்கலாம்.

   அ. நேரம் வரும்போது இப்படிப்பட்ட அன்பு மற்ற எல்லாவகை அன்பையும் துடைத்துப் போடக்கூடும்.

   ஆ. மற்றவர் கவனத்தைத் திருப்ப தொடர்ந்து பாடுபட்டாலும் யாருமே ஒருவேளை கவனம் செலுத்துவதில்லையெனில் அவர்களுக்கு உண்மையான அன்பின் தேவை ஏற்படும் போது அது ஆபத்தாகவே முடியும்.

   இ. ஒருவர் மிகுந்த பாரத்தில் இருக்கும்போது நாம் அவருக்கு உதவ வேண்டியது அவசியம் (கலாத்தியர் 6:2)

3. இன்றைய உலகின் தேவையெல்லாம் சரியான வகை அன்புதான்

4. நீங்கள் எப்படிப்பட்ட அன்புடையவர்? எப்படிப்பட்ட அன்பை நீங்கள் கொடுக்க இயலும்? எப்படிப்பட்ட அன்புக்காக நீங்கள் எதிர்பார்த்துள்ளீர்கள்?

# நான் ஏன் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுவதில்லை?

## Why I do not Celebrate Easter

### முகவுரை

1. கிறிஸ்தவ உலகம் என்றழைக்கப்படும் மக்களில் பெரும்பாலானோரும் வருடாவருடம் ஈஸ்டர் எனும் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.
2. இந்த நாளில் தான் கல்லறையிலிருந்து கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்று சொல்லப்படுகின்றது.
3. இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவரது மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை சுட்டிக்காட்ட வருடந்தோறும் கொண்டாடப்படுகிறது.
4. கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த வருடாந்திரப் பண்டிகையை கொண்டாடலாமா?
5. தனிப்பட்ட முறையில் நான் செய்ய முடியாது அதுபோலவே நீங்களும் உணருவீர்கள் என்று நம்புகிறேன்.

### விவாதம்:

**நான் ஏன் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுவதில்லை என்பதற்கான காரணங்கள்**

1. அப்படியொரு பண்டிகை திருமறையில் போதிக்கப்படவில்லை
2. இதை ஆராதிப்பதற்காக ஆதாரங்கள் எதுவுமில்லை.
3. இந்த வருடாந்திர பண்டிகை கொண்டு வந்துள்ள பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களுடன் என்னால் ஒத்துப் போக முடியாது.
4. அப்படியொரு அனுசரிப்பைக் கொண்டாட என் குடும்பத்திற்கு வழிகாட்டவோ, என்னைச் சுற்றி தவறானதொரு முன் உதாரணத்தை நிலைநாட்டவோ நான் விரும்பவில்லை.
5. நான் இப்படிப்பட்ட பண்டிகைகளை அனுசரித்துக் கொண்டு, பிற மதத்திலிருந்து வந்த என் சகோதரர்கள் தங்களின் முந்தைய ஆசரிப்புக்களை விட்டுவிடும்படி ஊக்கப்படுத்த முடியாது

6. நான் கர்த்தரை மட்டுமே பின்பற்றி அவர் காட்டிய போதனையை மட்டுமே மனதிற்கொள்ள தெரிவு செய்வேன்.

**ஈஸ்டர் ஞாயிறு எனக்கு என்ன பொருளைக் கொடுக்கிறது.**

1. நான் ஆராதிக்கும் ஞாயிறுகளில் இதுவும் ஒன்று
2. மனித உபதேசங்களை பாரம்பரியமாக மார்க்க உலகம் பின்பற்றிப் போவது எனக்கு கவலை அளிக்கிறது.
3. இப்படிப்பட்ட பாரம்பரியத்துடன் என் சகோதரர்கள் பின்பற்றிப் போவது அதைக் காட்டிலும் கவலையளிக்கிறது.

இ. ஈஸ்டரைக் குறித்து நான் செய்ய வேண்டியது என்ன?

1. நாம் அதிலிருந்து விலகி நிற்கலாம்.
2. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அதைக்குறித்து நாம் போதிக்கலாம்.
3. மதவெறியில்லாமலேயே அப்படிப் போதித்து எதிர்த்து நிற்கலாம்.
4. இவ்விஷயத்தில் நாம் உலகத்துடன் ஒத்துப் போகா திருப்போமாக.

## முடிவுரை:

1. தேவனுடைய வழியைப் பின்பற்றிச் செல்வது ஒரு அருமையானதும், மனிதனுடைய அனைத்து பாரம்பரியதிலிருந்தும் விடுதலை பெறுவது அற்புதமானதாகும்.
2. ஆதலால் ஈஸ்டரை கொண்டாட இயலாது
3. இவ்விஷயத்தில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?
4. நாம் தனித்து நின்றாலும் சத்தியம் நம்மிடத்தில் இருப்பதால் நாமே சரியானவர்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

# நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவரா?

Are you a true Christian? (I பேதுரு 4:11-19)

## முகவுரை

1. நீங்கள் ஒரு உண்மைக் கிறிஸ்தவராக இருப்பது சாத்தியமே.
2. ஏதோ சிலவற்றை பின்பற்றுவதன் மூலம் நீங்கள் உண்மை கிறிஸ்தவராக இருக்க இயலாது.

   அ. உங்கள் உணர்வுகளைப் பின்பற்றுவது

   ஆ. உலகத்தோடு ஒத்துப் போவது
3. நீங்கள் உண்மைக் கிறிஸ்தவனாக இருக்க விரும்பினால் தேவனுடைய திட்டத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

## விவாதம்

**நீங்கள் உண்மைக் கிறிஸ்தவரா?**

1. தேவனை விசுவாசிக்கிறீர்களா? (எபிரேயர் 11:6)
2. கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறீர்களா? (யோவான் 14:1)
3. தேவனுடைய வசனத்தை விசுவாசிக்கிறீர்களா? (2 தீமோத்தேயு 3 : 16,17)
4. நீங்கள் உண்மையாய் மனமாற்றப்பட்டீர்களா? (அப். 2:3)
5. பல விதமான சபையின் கூட்டங்களில் கலந்து கொள்கிறீர்களா? (எபிரேயர் 10:25)
6. கர்த்தருடைய ஊழியத்திலே பெருகுகிறவர்களாக இருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 15:58)
7. வியாதிப்பட்டவர்களைப் போய் பார்க்கிறீர்களா? (யாக்கோபு 1 : 27)
8. கிறிஸ்துவின் ஆவி உங்களில் இருக்கிறாரா? (பிலிப்பியர்2:8)
9. நீங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்தவரா? (வெளி 2:10)

**உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்**

1. உங்கள் விசுவாசத்தையும் செய்கைகளையும் சோதித்துப் பாருங்கள் (1 கொரிந்தியர் 11:28)

2. உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள் (2 கொரிந்தியர் 13:5)
3. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக் கொள்ளுங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:21)
4. ஆவிகளைச் சோதித்துப் பாருங்கள் (1 யோவான் 4:1)
5. உலகத்திலிருந்து வித்தியாசப்பட்ட நடக்கையைக் கொண்டிருங்கள் (யாக்கோபு 1:21)
6. நீங்கள் வஞ்சிக்கப்படக்கூடும். (யாக்கோபு 1:26)

**ஒருவர் உண்மையான கிறிஸ்தவராக இருக்கலாம்**

1. கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்படிய வேண்டும்.
2. கிறிஸ்துவின் நாமத்தை அதின்மூலம் தரித்துக் கொள்ள வேண்டும். (1 பேதுரு 4:16)
3. புதிய ஏற்பாட்டை மட்டுமே ஒரே உபதேசமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். (யாக்கோபு 1:25)
4. கர்த்தருடைய நாமத்தினாலே எல்லாவற்றையும் செய்ய வேண்டும். (கொலோ செயர் 3 :17)

**புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை நீங்களும் பாதுகாக்க உதவலாம்**

1. தேவனுடைய வாக்கியத்தின்படியே போதிக்க வேண்டும் (1பேதுரு 4:11)
2. மனித உபதேசங்களையும் (சபைக்கு கொடுக்கும்) பெயர்களையும் விட்டு வாருங்கள் (ரோமர் 16:17,18)
3. உங்கள் அபிப்பிராயங்களுக்கு கட்டுப்படாலிருப்பதன் மூலம் (1 கொரிந்தியர் 1:10)
4. கிறிஸ்துவின் பிரமாணத்தையே போதுமானதென அறிவிப்பதன் மூலம் (வெளி 22:18,19)
5. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளரை கனப்படுப்பதன் மூலம் (எபி 9:15-17)

## முடிவுரை:

1. நீங்கள் ஒரு கிறிஸ்தவரா இல்லையா என்பதை இப்பொழுது அறிந்திருப்பீர்கள்.

2. உலகத்திற்கென நீங்கள் வாழ்வது வேறு; கிறிஸ்துவுக்கென்று வாழ்வது வேறு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

   அ. நீங்கள் உலகத்திற்குரியவர்களா?

   ஆ. நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என நினைக்கிறீர்களா?

   இ) நீங்கள் ஒரு தவறு செய்யும் கிறிஸ்தவரா?

   ஈ) நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவரா?

3. நீங்கள் யாரையும் ஏமாற்றதீர்கள்; மாறாக உங்களுக்கு நீங்களே நேர்மையானவரும் எல்லாவற்றுக்கும் மேல் தேவனிடத்திலே நேர்மையுள்ளவராகவும் இருங்கள்.

4. நீங்கள் உண்மையான கிறிஸ்தவராயில்லாமல் இருந்தால், அப்படி ஒரு கிறிஸ்தவராக மாறுங்கள்.

5. நீங்கள் கிறிஸ்தவரானால் முடிவு பரியந்தம் உண்மையாய் நிலைத்திருங்கள்.

6. கிறிஸ்தவனை கர்த்தர் நித்திய ஜீவனுக்கென்று ஆசீர்வதிக்கிறார்.

# விதைப்புக்கும் அறுப்புக்குமான பிரமாணம்

கலாத்தியர் 6:7,8

The Law of Sowing and Reaping

## முகவுரை:

1. விவசாயம் செய்வது குறித்து எல்லாரும் அறிவார்கள்.

2. கர்த்தரும் தமது ஞானத்தால் விவசாய சம்பந்தப்பட்ட பெரிய பாடங்களை போதித்துள்ளார் (மந்தேயு 13)

3. எனவே விதைப்புக்கும் அறுப்புக்குமான பிரமாணங்கள் சம்பந்தப்பட்டுள்ள சில சத்தியங்களை கொடுப்பதே இப்பாடத்தின் நோக்கம்.

## விவாதம்:

அ. விதைப்புக்கும் அறுப்புக்கும் உள்ள பிரமாணத்துடன் இயற்கைக்கும் ஆவிக்குரிய காரியங்களுக்குமிடையில் ஒற்றுமையுண்டு

1. அறுவடை வேண்டுமானால் ஒருவர் விதைக்க வேண்டும்.
2. விதைக்கிறதில் உறுதியாயிருந்தால் அவன் அதே உறுதியுடன் அறுப்பான்.
3. விதைப்பிற்கேற்பத்தான் அறுவடையும் இருக்கும்.
4. பெரும்பாலும் விதைக்கிறதுக்கு மேலான அறுவடை இருக்கும் என்பது தவறாத பிரமாணம்
5. அறுவடை எல்லாவற்றையும் விளக்கிவிடும்.

ஆ. இந்த மாமிச வாழ்க்கையில் விதைப்பும் அறுப்பும்

1. ஒரு குடிகாரன் தன் பாவத்திற்கான கிரயத்தை செலுத்தியே தீர வேண்டும்.
2. விபச்சாரக்காரன் பல வகையிலும் பாடுபட்டாக வேண்டும்.
3. கீழ்படியும் பிள்ளை நீடித்த ஆயுளால் ஆசீர்வாதம் பெறுவான்.
4. கிறிஸ்தவனின் வாழ்க்கை நிறைவும் பலனுமுள்ளதாயிருக்கும்.

இ. ஆவிக்குரிய விதைப்பும் அறுப்பும்

1. மோசம் போகாதிருங்கள்; மனிதன் எதை ஆவிக்குரிய, முறையில் விதைக்கிறானோ அதையே உறுதியாக அறுப்பான்.
2. மாமிசத்துக்கென்று விதைக்கிறவன் ஆக்கினையை அறுப்பான், ஆவிக்கென்று விதைக்கிறவன் நித்திய ஆசீர்வாதத்தை அறுப்பான்.
3. இந்த காரியங்களில் கர்த்தருடைய தீர்ப்பே இறுதியானது.
4. ஒருவன் மரித்து நியாயத்தீர்ப்பு அடைந்தபின் மனந்திரும்பவோ, மாற்றம் பெறவோ சந்தர்ப்பம் இல்லை

## முடிவுரை :

1. அறுவடைகாலம் வருகிறது, ஆகையால் எச்சரிக்கையாயிருங்கள்
2. ஆசீர்வாதமான அறுவடை பெற விதைப்புக்கேற்ற காலம் இப்பொழுதே.

# ஒருவன் இன்றைக்கு கிறிஸ்தவனாக இருக்க இயலுமா?

Can one be a Christian Today?

## முகவுரை :

1. இன்றைக்கு யாரும் கிறிஸ்தவனாக இருக்க முடியாது என்ற ரீதியில் சுவிசேஷத்துக்குக் கீழ்படிய மறுப்பவர்கள் இருக்கிறார்கள்.
2. வேறு சிலர் இதையே சாக்காக வைத்துக்கொண்டு கர்த்தருக்கு தாம் விசுவாசமாயிராமலிருப்பதை நியாயப்படுத்துகின்றனர்.
3. இன்று, விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருப்பது என்பது சாத்தியமா?

## விவாதம்:

**கூறப்படும் சாக்குப் போக்குகள்**

1. "உலகம் அளவுக்கதிகமான பாவத்திலிருக்கிறது"
2. "கிறிஸ்தவம் ஒரு காலம் கடந்த மார்க்கம்"
3. "கிறிஸ்தவனாக இருந்தால் எதையும் அனுபவிக்க இயலாது"
4. "மிக அதிகமானோர் கிறிஸ்தவத்தை எதிர்க்கிறார்கள்"
5. "பெரும்பான்மையானோர் மாய்மாலக் காரராயிக்கிறார்கள்"

**இப்படிப்பட்ட சாக்குப்போக்குகளைச் சொல்லக் காரணம் என்ன?**

1. அநேகரும் சாக்குபோக்குச் சொல்லவே தேடுகின்றனர்.
2. வேறு சிலர் முறைப்படி தீர்மானிப்பதில்லை
3. சிலர் கிறிஸ்தவத்தை தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.
4. இன்னும் சிலர் உண்மையாக மனமாற்றமடையவில்லை.

**ஜனங்கள் எப்பொழுதும் தேவனுக்கு கீழ்படியவே செய்தார்கள்**

1. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் (ஆதியாகமம்5:21-25)
2. அநீதியான உலகத்திற்குக் கீழ்படிவதைக் காட்டிலும் நோவா தேவனுக்கு கீழ்படிந்தார் (ஆதியாகமம் 6:22)
3. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தன் தேசத்தை விட்டு ஆபிரகாம் போனார் (ஆதியாகமம் 12:1)

4. மோசே இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துச் சென்றார் (யாத்திராகம 14)
5. தானியேல் மனிதர்களுக்கு முன்பாக தலை வணங்க மறுத்தாதர். (தானியேல் 6)
6. சோதனை நேரத்தில் பவுல் கிறிஸ்தவரானார்
7. கொர்நெலியு கிறிஸ்தவரானார் (அப். 10)

**இன்றும் ஒருவர் கிறிஸ்தவராக இருக்க முடியும்.**

1. கிறிஸ்தவராக மட்டும் இருக்க இயலும்
2. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது சாத்தியமே; இல்லாவிட்டால் கர்த்தர் அதை கட்டளையிட்டிருக்க மாட்டார்

**கிறிஸ்தவராக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள்**

1. ஒருவர் கிறிஸ்தவராக இருக்க விரும்ப வேண்டும்.
2. அதற்காக அவர் பிரயாசப்பட வேண்டும். (பிலிப்பியர்2:12)
3. எல்லாவற்றிலும் தேவனை முதலாவதாக தேட வேண்டும். (மத்தேயு 6:33)
4. அவர் நீதியை விரும்ப வேண்டும் (எபிரேயர் 1:9; யாக்கோபு1:20)
5. தன்னைத்தானே அவர் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 9:27)
6. அவர் இரட்சிக்கப்பட்ட வேண்டும் (அப்போஸ்தலர் 2:40)

**ஆனால் ஒருவர் விசுவாசமுள்ள கிறிஸ்தவராக இருந்து கொண்டே.....**

1. உலகத்தில் அன்பு கூறுகிறவராக இருக்கக் கூடாது.
2. தவறான கூட்டத்தோடு சேரக்கூடாது (1கொரிந்தியர் 15:33)
3. மதுபானம் பண்ணக் கூடாது (1 கொரிந்தியர் 6:10)
4. சூதாடுதல் கூடாது
5. நாகரிகமற்ற முறையில் உடை அணியக் கூடாது (1பேதுரு3:3-5)
6. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது (யாத்திராகமம் 20:7)

**கிறிஸ்தவ வாழ்க்கைக்கு கிடைக்கும் பிரதிபலன்**

1. பாவத்திலிருந்து விடுதலை (1 யோவான் 1:7)

2. கிறிஸ்தவ ஐக்கியம்
3. ஆவிக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களும் (எபேசியர் 1:3)
4. ஜெபம் செய்யும் சிலாக்கியம் (1 யோவான் 5:14,15)
5. வாழ்க்கையில் ஒரு திருப்தி (பிலிப்பியர் 4:11)

## முடிவுரை :

1. கிறிஸ்தவ வாழ்க்கையே மிகப்பெரிய வாழ்க்கை
2. நீங்களும் கிறிஸ்தவராக இருக்கலாம்.

# திருமறை கூறும் மனமாற்றம்

## Bible Conversion

மனமாற்றம் குறித்து அதிகமாகவே பேசுகிறோம். குறிப்பாக சில தனிப்பட்டவர்களின் மனமாற்ற நிகழ்ச்சியைக் குறித்து பேசுகிறோம். அல்லது குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் ஒரு பிராந்திய சபையின் மனமாற்ற நிகழ்ச்சி குறித்து பேசுகிறோம். ஆனால் மனமாற்றம் என்றால் என்ன? வேதாகம மன மாற்றம் என்றால் என்ன?

## விளக்கம்

"மனமாற்றம்" என்பதன் நேரடி பொருள் ஒரு செயலிலிருந்து "மாறுதல்" "திரும்புதல்" "புதிதாக துவங்குதல்", அல்லது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல் என்று பொருள்.

**எது மனமாற்றம் அல்ல**

1. மனமாற்றம் என்பது வெறும் சடங்காச்சாரமோ சம்பிரதாயமோ அல்ல.
2. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தால் போதுமானதல்ல
3. அது ஏதோ ஒரு சபையில் சேர்ந்து கொள்ளுதல் அல்ல.
4. பக்தியை பறைசாட்டுதல் அல்ல
5. அது நல்லொழுக்கமான ஜீவியம் மாத்திரமல்ல

## என்னதான் அது

1. மனமாற்றம் என்பது தேவ வசனத்தை கேட்பதை அடிப்படையாகக் கொண்டது (ரோமர் 10:17)
2. அதைத் தொடர்ந்து ஆழமாக தரித்திருக்கும் விசுவாசத்தையும் அடிப்படையாகக் கொண்டது (எபிரெயர் 11: 6; யோவான் 14:1)
3. பிறகு உண்மையான மனந்திரும்புதலை அது கொண்டு வருகிறது (லூக்கா 13:3)
4. அடுத்ததாக அறிக்கையிடுதல் இருக்கிறது. (ரோமர் 10:10)
5. இறுதியாக தனிப்பட்ட ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுதல்.

**இதுவே திருமறை கூறும் மனமாற்றம் (அப்போஸ்தலர் 3:19)**

**உண்மையான மனமாற்றம் கனிகளைக் கொடுக்கும்**

1. மனமாற்றப்பட்டவர் தவறாது சபையின் ஆராதனைகளில் கலந்து கொள்வார். (எபிரேயர் 10:25)
2. மனமாற்றப்பட்டவர் தனது வரவுக்குத்தக்கதாக காணிக்கை கொடுப்பார் (1 கொரிந்தியர் 16:2)
3. மனமாற்றப்பட்டவர் எதைச் செய்தாலும், சொன்னாலும் தேவனையே முதலாவதாக வைப்பார் (மத்தேயு 6:33)
4. மனமாற்றப்பட்டவர் தங்கள் ஆத்துமாவை இழந்தவர்களுக்கு அக்கரை காட்டுவார் (மாற்கு 16:15)
5. மனமாற்றப்பட்டவர் கர்த்தருக்கு கடைசி வரை உண்மையுள்ள வராயிருப்பார் (வெளி 2:10)

**சபையைக் குறித்த தவறு என்ன?**

1. அநேகம்பேர் சத்தியத்தை வெளிப்படுத்துகின்றனர்; ஆகிலும் கர்த்தரிடம் தங்கள் மனதை உண்மையாய் செவி சாய்ப்பதில்லை.
2. அநேகம்பேர் மனமாற்றமே அடையாததால் சபையை பின்னுக்குத்தள்ளி வாழ்கின்றனர்.

   சபை ஆராதனையில் கலந்து கொள்வதில்லை

   தங்களுடைய காணிக்கைகளை முறையாகக் கொடுப்பதில்லை

   அவர்கள் உலகத்தோடு ஒத்து வாழ்கின்றனர்

அவர்கள் புறங்கூறுபவர்கள்

அவர்கள் குழப்பவாதிகள்

அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை இழந்தவர்கள்

### முடிவுரை:

சகோதரர்களே! நண்பர்களே! நாம் தேவனுக்குக் கீழ்படிய வேண்டும் என்றும், அதில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும் என்றும், நமது மனதில் உறுதி கொள்ள வேண்டும். மனமாற்றம் அடைவோம், கிறிஸ்தவ வாழ்க்கையை உண்மையாய் வாழ்வோம்.

# சபையில் உலக ரீதியான காரியங்கள்

## Worldliness in the Church

ரோமர்12:2, யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15
கலாத்தியர் 5:19; தீத்து 2:11,12

### முகவுரை:

**சபையில் உள்ள சிலர் உலகப்பிரகாரமாக வாழ்கின்றனர்**

1. உலகப் பிரகாரமான சிந்தனை
2. உலகப் பிரகாரமான பேச்சுக்கள்

   அசிங்கமான நகைச்சுவைகளைப் பேசுதல்

   தேவனை சபித்தல்
3. உலகக் காரியங்களை பார்த்தல்

   புறங்கூறுதலுக்கு செவி சாய்த்தல்

   அசிங்கமான கதைகளை கேட்க ஆவல்
4. உலகப் பிரகாரமான காரியங்களை கேட்க விழைதல்

   அசிங்கமான (சினிமா) படங்களில் பிரியப்படுதல்

   எப்பொழுதும் கெட்டதையே காணுதல்
5. உலகப் பிரகாரமான நடக்கை
6. உலகப் பிரகாரமான காரியங்களை நுகருதல்

பீர் போன்ற மதுபானங்களை நுகர்தல்

புகையிலையை நுகருதல்

7. உலகக் காரியங்களைக் காணுதல்

நீச்சல் உடை தரித்தோரை பார்த்து ரசித்தல்

குட்டையாக கால் உடை, பாவாடைகளை தரிப்பதைக் கண்டு ரசித்தல்.

8. உலகத்தாரைப் போலவே ஆட்டம் பாட்டம்

நடனம்

இருபாலரும் சேர்ந்து குளித்தல் (ஜலக்கிரீடை)

சூதாட்டம்

சினிமா

குடித்தல்

வேசித்தனம்

விபச்சாரம்

பிறரை சபித்தல்

கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை கொண்டாடுதல்

**நாம் என்ன செய்யலாம்?**

1. தேவனுக்கு நாம் தானாகவே கீழ்படிய வேண்டும்.
2. பாவத்தைக் கடிந்து கொள்ள வேண்டும்.
3. சபை எதற்காக நிலை நிற்கிறது என்பதை உலகம் அறியச் செய்ய வேண்டும்.
4. நல்ல முன் மாதிரியைக் நாம் காட்ட வேண்டும்.

## முடிவுரை:

1. நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?
2. நீங்கள் கிறிஸ்தவர் தானா?

# " நான் எதைப் பிரசங்கிப்பது "

## What shall I Preach?

### முகவுரை:

1. பிரசங்கிப்பதில் மிகப் பெரிய பொறுப்பு உண்டு.
2. எதைப் பிரசங்கிப்பது எனத் தீர்மானித்தல் அவசியம்.
3. இந்த பிரசங்கத்தில் தான் எனது இரட்சிப்பும் கேட்போரின் இரட்சிப்பும் அடங்கியுள்ளது.
4. நான் எதைப் பிரசங்கிப்பது?

### விவாதம்:

**பிரசங்கிப்பவர் முக்கியமானவர்**

1. அவர் அனுப்பப்பட்டவர் (மாற்கு 16:15)
2. பிரசங்கிப்பவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (ரோமர் 10:14)

**பிரசங்கிக்கப்படும் செய்தி முக்கியமானது**

1. தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்ற செயல் இது.
2. விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கிறதற்கான தேவனுடைய திட்டம் (1 கொரிந்தியர் 1:21)

**நான் எதை பிரசங்கிப்பது?**

1. உலகத்தின் பதில்கள்:

   அ. ஒரு பெரிய நபரைக் குறித்து பிரசங்கிப்பது.

   ஆ. சொந்த வாழ்க்கையைக் குறித்து பிரசங்கிப்பது.

   இ. அன்புக்குறியவர் யாராவது ஒருவரின் மரணத்தைப் பற்றி பிரசங்கித்தல்

   ஈ. உலகத்தைப் பற்றியும் அதில் உள்ள பிரச்சனைகள் பற்றியும் பிரசங்கித்தல்.

   உ. ஒழுக்கம் சம்பந்தமான பிரச்சனைகளைப் பற்றி பிரசங்கித்தல்.

   ஊ. அன்பைப் பற்றி பிரசங்கித்தல்

எ. கிறிஸ்துவைப் பற்றி மட்டும் பிரசங்கித்துவிட்டு, மற்ற எல்லாரையும் விட்டுவிடுதல்.

2. திருமறையின் பதில்:

அ. கிறிஸ்துவையும் அவருடைய இராஜ்யத்தையும் பிரசங்கிப்பது. (அப் 8:5,12)

ஆ. வசனத்தை பிரசங்கிப்பது (தீமோத்தேயு 4:1,2; யோவான் 8:32)

இ. சுவிசேஷத்தை பிரசங்கிப்பது (பிரசங்கி 16:15)

**செய்தியைக் குறித்த பிற காரியங்கள்**

1. தவறற்றதாயிருக்க வேண்டும்.
2. அது புரட்டப்படக் கூடாது
3. ஒரு சுவிசேஷம் மட்டுமே உண்டு (கலாத்தியர் 1:7-9)
4. எல்லாரும் அதற்குக் கீழ்படிய வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 1:7,8)

## முடிவுரை:

1. தேவனுடைய வசனம் எல்லாவற்றிற்கும் போதுமானது (தீமோத்தேயு 3:16,17)
2. நேர்மையாக அதைக் கையாள வேண்டும்; இல்லையேல் தேவனுக்கு பதில் சொல்ல வேண்டும்.
3. நான் சத்தியத்தை மட்டுமே பிரசங்கிக்க வேண்டும் - வேறு வழியே இல்லை.

# தேவனுடைய சுவிசேஷத் திட்டம் (அப் 1:8)

## God's Missionary Program

### முகவுரை:

1. இது முதல் நூற்றாண்டு சபையின் சுவிசேஷ ஊழியம் குறித்த கல்வி.
2. சுவிசேஷ ஊழியத் திட்டம் குறித்த விளக்கம்.

   குறிப்பிட்ட ஊழியத்திற்கான திட்டமிட்ட பணி

   சுவிசேஷத்தை பிரசங்கிப்பதுதான் இதன் ஊழியம்

   இதில் இரண்டு வகை சுவிசேஷ பணிகள் உண்டு. அவை:

   i. உள்ளூர்

   ii. வெளிநாடு
3. சபையின் முக்கியத்துவம்:

   சபையின் மூலமாக தேவனுடைய அநந்த ஞானம் வெளியாக்கப் பட்டது.

   மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற பணியை ஆண்டவர், சபையின் மூலமாகவே செய்யும்படி திட்டமிட்டுள்ளார். (மாற்கு 16:15,16)
4. முதலாவதாக முதல் நூற்றாண்டு ஊழியத் திட்டத்தையும், பின்பு இருபதாம் நூற்றாண்டு ஊழியத்திட்டம் குறித்த விவரத்தையும் ஆய்வு செய்வோம்.

### விவாதம்:

**முதல் நூற்றாண்டிற்கான தேவனுடைய சுவிசேஷ ஊழியத் திட்டம் (அப்போஸ்தலர் 1:8)**

1. சுவிசேஷம் முதலாவதாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

   மனத்திரும்புதலும் பாவமன்னிப்பும் முதலாவதாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கர்த்தர் தமது அப்போஸ்தலர்க்கு வாக்குத்தமாகச் சொன்னார் (லூக்கா 24:7)

   அதேபோல முதல் சுவிசேஷப் பிரசங்கம் ஏருசலேமில் தான் செய்யப்பட்டது (அப்.2)

   தேவலாயத்தில் பிரசங்கம் (அப்.3)

   ஸ்தேவானும் அவரது பிரசங்கமும் (அப்.6,7)
2. **அடுத்ததாக சுவிசேஷம் யூதேயாவில் பிரசங்கிக்கப்பட்டது**

   இதுவும் எருசலேசமின் நிகழ்ச்சியைக் குறிக்கிறது (அப் : 2,3)

எருசலேமைச் சுற்றியிருக்கின்ற கிராமங்களையும் உள்ளடக்கியது இந்த ஊழியம்.

எருசலேமில் பிரசங்கிக்கப்பட்ட பிறகு அது யூதேயா முழுவதிலும் பரவியது.

**3. பிறகு சமாரியாவிலே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.**

பிலிப்பு சமாரியாவில் சுவிஷேசம் கொண்டு செல்ல காரணமானவர் (அப் : 8)

மேலும் அவர் எத்தியோப்பிய மந்திரிக்கும் சுவிஷேசம் பிரசங்கித்தார்.

**4. இறுதியாக சுவிசேஷம் பூமியின் கடைசி பரியந்தம் கொண்டு செல்லப்பட வேண்டும்.**

பவுலின் மனமாற்றத்திற்குப்பின் இது அதிகமாய் செயல் படுத்தப்பட்டது. (அப் : 9)

யூதர்க்கும் புறஜாதிக்குமாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. (அப் 10 : 34, 35)

கொரிந்து, எபேசு, அந்தியோகியா, ரோமாபுரி, பெரோயா போன்ற நாடுகளில் பிரசங்கிக்கப்பட்டது. (1கொரிந்தியர்1, அப்போஸ்தலர் 11, ரோமர் 1, அப்போஸ்தலர் 17)

ஆசியா, ஐரோப்பா மற்றும் பூமியெங்கும் பிரசங்கிக்கப்பட்டது. (அப். 2, ரோமர் 1)

பவுலின் காலத்திலும் உலகம் முழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது (கொலோசேயர் 1:5:6)

**இருபதாம் நூற்றாண்டில் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்திட்டம் (மாற்கு 16:15,16)**

1. உலகிற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கடமை கிறிஸ்தவர்களுக்கு இன்னமும் இருக்கிறது. (மாற்கு 16 : 15)

   அ. சகல தேசத்தாருக்கும் (மந்தேயு 28:19,20)

   ஆ.சகல சிருஷ்டிக்கும் (மாற்கு 16:15,16)

2. முதல் நூற்றாண்டைப் போல சுவிசேஷமானது முன்பு உள்ளூரிலும் பின்பு எல்லா பக்கமும் பரவ வேண்டும்.
3. எல்லாருமே கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தினால், உலகம் முழுவதும் சத்தியத்தை அறிந்து கொள்ள அதிக நாட்கள் ஆகாது.

4. ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் பங்குக்கு ஆற்ற வேண்டிய பணியைச் செய்தல் வேண்டும்.

அ. கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவது மூலம்.

ஆ. மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன் மூலம்.

இ. பிராந்திய சபைக்கு ஒத்துழைப்பை நல்குவதன் மூலம்.

ஈ. அப்படிப்பட்ட ஊழியங்களுக்கென கொடுப்பதன் மூலம்

5. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன் பங்குக்கு ஆற்ற வேண்டிய பணிகள்.

அ. ஒவ்வொரு அங்கத்தினரையும் விசுவாசமுள்ளவர்களாய் வைத்திருப்பதன் மூலம்.

ஆ. வீடுகள்தோறும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம்.

இ. பிற ஊழிய ஸ்தலங்களிலும் சென்று பணிகளை நிறைவேற்றுவதன் மூலம்.

ஈ. இப்படிப்பட்ட பணிகளிலுள்ள பிற பிராந்திய சபைகளுக்கு ஒத்துழைப்பை அளிப்பதன் மூலம்

உ. இந்தத் திட்டத்திற்கென இயன்ற அளவுக்கு கொடுப்பதன் மூலம்.

6. சபையானது ஒரு முழு சரீர ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும்.

தேவனுடைய சித்தத்திற்கு உண்மை உள்ளவர்களா இருப்பதன் மூலம்.

சுவிசேஷ ஊழியத்தைக் குறித்த சிந்தை எப்பொழுதும் மனதில் இருப்பதன் மூலம்.

## முடிவுரை:

1. எல்லா மனுஷரும் கேள்விப்படவும், இரட்சிக்கப்படவும் வேண்டும். (1 தீமோத்தேயு 2:4)
2. முதலாம் நூற்றாண்டின் ஊழியத்திட்டத்தை சீர்தூக்கிப் பார்த்து, உலகம் முழுவதும் இந்த யுகத்திலும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க கர்த்தர் உதவிசெய்வார் என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.
3. அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் வரை ஓயாமல் இருப்போமாக.

# சத்தியமாவது என்ன?

யோவான் 18:37,38

What is truth?

## முகவுரை:

1. பிலாத்து இயேசுவினிடத்தில் கேட்ட கேள்வி இது.
2. சிலர் யதார்த்தமாகவும் சிலர் வேறு எண்ணத்திலுமாக அநேகர் இதே கேள்வியை கேட்டுள்ளனர்.
3. இக்கேள்வி உங்களையும் என்னையும் சம்பந்தப்படுத்துகிறது.

## விவாதம்:

**சத்தியத்தைக் குறித்த விளக்கம்.**

1. நேர்மை
2. உண்மையாயிருக்கும் நிலை
3. உண்மைகளடங்கிய ஒரு தொகுப்பு
4. உண்மையை ஒப்பந்தமாக்கி சரியாக இருத்தல்
5. அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அளவீடு
6. தனக்குத்தானே சத்தியம் முரண்படாது
7. ஒருமைப்பாடு

**சத்தியமாவது என்ன?**

1. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டது. (யோவான் 1:7)
2. கிறிஸ்துவே சத்தியம் (யோவான் 14:6)
3. உமது வசனமே சத்தியம் (யோவான் 17:17)
4. சுவிசேஷ சத்தியம் (கலாத்தியர் 2:5)
5. சத்திய வார்த்தை (எபேசியர் 1:13)
6. தேவனுடைய வசனமாகிய சத்தியம் (1 தெலோனிக்கேயர் 2:13)

**சத்தியத்தைக் குறித்த உண்மைகள்**

1. பிரிவினையை ஏற்படுத்தாது, மாறாக சேர்க்கும்

2. ஒரே நிலையிலிருக்கும், மாறாது
3. வழி நடத்தி ஆசீர்வதிக்கும்.
4. இரட்சித்து விடுதலையாக்குகிறது (யோவான் 8:32)
5. அது அளவிடுகிறது.
6. மிகவும் தெளிவானதும் யதார்த்தமுமானது.

**கெடுக்கப்பட்டால் அது சத்தியமாக நீடித்திராது.**

1. இத்துடன் ஒன்றைக் கூட்டும்போதோ குறைக்கும் போதோ (வெளி. 22:18,19)
2. சத்தியத்தின் ஸ்தானத்தில் வேறு எதைவைத்து போதித்தாலும் (கலாத்தியர் 1:7-9)
3. அதற்கு தவறான அர்த்தத்தைக் கொடுக்கும்போது ( 2 பேதுரு 1:20)

**சத்தியம் எல்லாராலும் நேசிக்கப்படுவதில்லை**

1. பாவத்திலிருப்போருக்கு சத்தியம் எடுபடாது (யோவான்3:18-21)
2. சிலர் சத்தியத்தின் அன்பை அங்கீகரிக்க மாட்டார்கள் (2 தெலோனிக்கேயர் 2 :10)
3. சத்தியத்தை விசுவாசிக்காதவர்களுக்கு தேவன் கொடிய வஞ்ச கத்தை அனுப்புவார் (2 தெசலோனிக்கேயர் 2:12)
4. சிலர் எப்பொழுது கற்றலாலும் ஒரு போதும் சத்தியத்திற்கு உடன்பட மாட்டார்கள் (2 தீ மோத்தேயு 3 :7)
5. அநேகர் சத்தியத்துக்கு செவியை விலக்குவார்கள் (2 தீமோத்தேயு 4:4)

**திருமறையில் உள்ள சத்தியம் வெளிப்படுத்தும் காரியங்களாவன.**

1. பாவமும் அதன் விளைவும் (ரோமர் 6 : 23)
2. கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1 :16)
3. திருமறை கூறும் ஒரே சபை (எபேசியர் 4 : 3-6)
4. தேவனை எப்படித் தொழுது கொள்வது. (யோவான் 4:24, அப் 2:7)
5. கிறிஸ்தவ ஜீவியம் (வெளி 2:10)
6. விசுவாசமுள்ளவராயிருப்பது எப்படி?
7. ஜீவியத்திற்கும் தேவபக்திக்குமுரிய சகல காரியங்கள் (2பேதுரு 1:3)

**முடிவுரை:**

1. சத்தியத்தை அறிந்து நீங்களும் கீழ்படியக்கூடும்
2. உங்களுக்கு சத்தியம் வேண்டுமா?

# யார் கிறிஸ்தவன்? அப்போஸ்தலர் 11 : 26
## Who is a Christian?

**முகவுரை:**

1. சீஷர்களை கிறிஸ்தவர்கள் என்று புதிய ஏற்பாடு அழைப்பதால் கிறிஸ்தவன் எனும் பதம் வசன ரீதியானது. (அப் 11:26)
2. அகிரிப்பா இராஜா கொஞ்சங்குறைய கிறிஸ்தவனாக மாற பவுல் சம்மதிக்கப் பண்ணினார் (அப் : 26:28)
3. கிறிஸ்துவின் நாமத்தில்தான் இரட்சிப்பு (1 பேதுரு 4:16)
4. இரட்சிப்பு இப்பெயரில் தான் உள்ளது என்று திருமறை போதிக்கிறது.
5. கிறிஸ்தவன் எனும் நமது ஆய்வு பெயர் பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட ஒன்று.

**விவாதம்:**

**அ. கிறிஸ்தவர்களல்லாத சிலர்**

1. நல்லொழுக்கங்களை மட்டும் சார்ந்திருப்போர் (அப் 10)
2. பிரிவுக்கூட்டங்கள் (நாமகரண கூட்டங்கள்) எனும் காட்டுக்குள் சிக்கிக் கொண்டிருப்பவர்கள் (மாற்கு 7:7)
3. உலகத்தோடு உலகமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் (1பேதுரு 2:21)

**ஆ. கிறிஸ்தவன் என்பவன் :**

1. மனமாற்றப்பட்டவன் (அப் 3:19)
2. தாழ்மையுள்ளவன் (மத்தேயு 18:4)
3. பயபக்தியுள்ளவன் (எபிரேயர் 12:28,29)
4. கபடற்றவன் (பிலிப்பியர் 2 : 14,15)
6. நன்றியுள்ளவன் (1 தெசலோனிக்கேயர் 5 : 17,18)

7. உலகில் செல்வாக்கு உடையவன் (மத்தேயு 5 :13,14)
8. கிரியைகளை நடப்பிப்பவன் (எபிரேயர் 4:9,11)
9. புது சிருஷ்டியாக்கப்பட்டவன் (2 கொரிந்தியர் 5 :17)

## முடிவுரை:

1. நீங்கள் இப்பொழுது கிறிஸ்தவர்தானா?
2. நான் ஒரு கிறிஸ்தவனா?
3. இந்தக் காரியங்களை கவனமுடன் சிந்திப்போம்.
4. நாம் கிறிஸ்தவராக இல்லாவிடில், இன்றே கிறிஸ்தவராக மாறுவோமாக.

# வீடு

# Home

## முகவுரை:

1. வீட்டைப் பற்றிய விளக்கம்: ஒருவரது தங்குமிடம் அல்லது வசிப்பிடம்; ஒரு மனிதன் தன் குடும்பத்துடன் தங்கி தாபரிக்குமிடம் சந்தோஷமும் வாழச் சிறந்ததுமான இடம் ஒருவரது சொந்த நாடு ஆகியவைகளைக் குறிக்கும்.
2. ஒருவரது கட்டுக்குட்பட்ட இடம் அல்லது ஒருவருக்கொருவர் மிகுந்த பரிச்சயத்துடன், ஒருங்கிணைந்த தன்மை, சுற்றுப்புறங்கள் அமைதியாகவும் ஆறுதலாகவும் உணரும் இடம் என பொருள் கொடுக்கும்.

## விவாதம்:

**அ. பிறந்த வீடு (தீத்து 2 : 5)**

1. குடும்ப அங்கத்தினர்களடங்கிய இடம்
2. பயிற்சி ஸ்தலம் (எபேசியர் 6:1,2)
3. உங்களுக்காக, உங்கள் தேவைகளையெல்லாம் குறித்து அக்கறைப் படுவோருக்குள், நன்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுமிடம்.

**ஆ. திருமண வீடு**

1. கிறிஸ்தவனை(ளை) மட்டும் மணமுடித்த வீடு (2 கொரிந்தியர் 6 : 14)
2. மனைவியினிடத்தில் அன்பு கூறுமிடம் (எபேசியர் 5 : 25)
3. பிள்ளைகளை போதனையில் வளர்க்க வேண்டும் (எபேசியர்6 : 4)
4. ஒரு அருமையான இடமாக மாற்றப்பட வேண்டிய இடம்

**இ. தேசமாகிய வீடு**

1. உங்கள் குடியுரிமை இங்கே உள்ளது.
2. உங்களுக்கென்று குறிப்பிட்ட பொறுப்புகள் உண்டு.
3. அதினால் உங்களுக்கு பலனுமுண்டு.
4. உரிமை கொண்டாடும் இடமிது.

**ஈ. ஆவிக்குரிய வீடு ( 1 தீமோத்தேயு 3:15)**

1. கிறிஸ்துவுக்குள்ளும், அவரது சபைக்குள்ளும் இருப்பது.
2. உள்ளூர் பிராந்திய சபையில் அங்கத்துவம் வைத்தல்.
3. சகோதரர்களும் சகோதரிகளும் இங்கே உங்களுக்கு உண்டு.
4. நீங்கள் ஊழியம் செய்யுமிடம்
5. அதிக முனைப்போடு செயலாற்ற ஏதுவாக அங்கேயே நிரந்தரமாக குடியேற முடிவுசெய்யுமிடம்.

**உ. பரலோக வீடு**

1. நித்திய வீடாகிய அதை ஒப்பிடும்போது, நாம் இங்கே இருக்குங்காலம் மிகவும் குறுகிய காலமே.
2. நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் (1 பேதுரு 2 : 11)
3. இங்கேயே (பூமியில்) எல்லா வசதிகளையும் பெற்று வாழ விரும்ப வேண்டாம். ஏனெனில் இங்கே நாம் நிரந்தரமாகத் தங்கி விட முடியாது.
4. ஆதலால் நாம் அந்த பரம வாசஸ்தலத்தை அடைய ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.
5. பரலோகம், ஆத்துமாக்களின் இருப்பிடம்.

## முடிவுரை:

1. உங்களுக்கு எப்படிப்பட்ட வீடு உள்ளது?
2. வீடு என்றால் அது உங்களுக்கு என்ன பொருளைக் கொடுக்கிறது?
3. எந்த வீட்டில் உங்கள் ஆர்வம் அதிகமாய் இருக்கிறது?

# ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தல்

## Encouraging one Another

## முகவுரை:

1. உற்சாகப்படுத்துதல் : தைரிய மூட்டுதல், உதவுதல், ஊக்கமளித்தல், உயர்த்துதல், உற்சாகமளித்தல் ஆர்வத்தைத் தூண்டுதல்
2. இது ஒரு சாதாரண விஷயம் என்றாலும் யாவருக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஒன்று.
3. நாம் திருடர்களோ கொலைகாரர்களோ ஒழுக்கங் கெட்டவர்களோ தவறானவர்களோ அல்ல: மாறாக நாம் மனிதர்கள்; தவறு செய்யவும் கூடும்; எனவே நமக்கு உதவிகளும் உற்சாக மளித்தலும் தேவைப்படுகிறது.

## விவாதம்:

**தேவனுக்குக் கீழ்படிய உற்சாகப்படுத்த வேண்டும்.**

1. கீழ்படிய அவர்கள் கிட்டிச் சேரலாம்.
2. சத்தியத்தை அறிந்து, தேவன் நமக்குத்தேவை எனும் உணர்வை அடையவும், கடைசி படிக்கு (கீழ்படிய) முடிவெடுக்கவும் நமது சிறிய உற்சாகமளித்தல் தேவை.

**சபைக் கூடிவருதலில் உற்சாகமளிக்க வேண்டும்.**

1. நம்மை இடறிவிழச் செய்ய சில சிறிய காரியங்களை நாம் அனுமதித்திருக்கலாம்.
2. சபையின் ஆராதனையில் பங்கு பெறுவதன் முக்கியத்துவத்தை, தனிபட்ட முறையில் ஞாபக மூட்டுதல் அவசியம்.

**தேவனிடத்திலும் அவருடைய சபையினிடத்திலும் திரும்பும்படி உற்சாகமூட்ட வேண்டும்.**

1. நமது தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.
2. நம்மீது சகோதரர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

சிறந்த மகனாக, மகளாக, கணவனாக, மனைவியாக பணிபுரிபவராக மற்றும் சிறந்த குடிமகனாக மாறுமளவுக்கு உற்சாகம் அளிக்கப்பட வேண்டும்.

இளைஞர்கள் சுவிசேஷத்தை போதிக்க ஊக்கமளிக்க வேண்டும்.

வரவுக்குத் தக்கதாக காணிக்கை கொடுக்கும்படி ஊக்கமளிக்க வேண்டும்.

அநேக வழிகளில் உற்சாகப்படுத்தலாம்.

1. இதமான வார்த்தை
2. நண்பர்களாக பழகுவது
3. புன்னகை
4. விசாரித்தல்
5. அன்பு காட்டுதல்
6. உதவுதல்
7. முன்மாதிரி நடத்தல்
8. சபைக் கூட்டங்களை தவறாமல் கலந்து கொள்ளுதல்
9. நற்கிரியை
10. வேதத்தை ஆராய்தல்
11. ஜெபித்தல்

## முடிவுரை:

1. ஊக்கமளித்தலின் மதிப்பை நாம் இப்பொழுது அறிந்து கொண்டுள்ளபடியால் மற்றவர்களை உற்சாகப்படுத்தத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும்.
2. இது ஒரு பெரிய விஷயமாக இல்லாவிட்டாலும் ஆத்துமாவை இரட்சிப்படையச் செய்யவும் ஒருவர் தனது பிரச்சனையை மேற்கொள்ளவும் இது அதிகமாய் உதவும்.
3. இது ஒரு சிறிய விஷயமாகக் கருதப்பட்டாலும் அனைத்து விதத்திலும் இது வித்தியாசத்தை ஏற்படுத்துவதால் இது உண்மையிலேயே பெரிய விஷயம் தான்.

# புதிய ஏற்பாடு ஜெபம்

லூக்கா 18:1; 1தெசலோனிக்கேயர் 5:17

New Testament Prayer

## முகவுரை:

1. ஜெபம் என்பது உள்ளத்தில் உள்ளத்தை ஊற்றுதல், மன்றாட்டு விண்ணப்பம் முறையிடுதல் தேவனுடன் பேசுகிற ஒரு கருவி (சாதனம்) ஆகும்.
2. தேவன் நம்முடன் தம்முடைய வசனத்தின் மூலம் பேசுகிறார். நாம் ஜெபத்தின் மூலம் தேவனுடன் பேசுகிறோம் என்பதே திருமறையின் உபதேசம்.
3. ஜெபத்தின் முக்கியத்துவத்தை புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது.

   அ. கிறிஸ்து அடிக்கடி ஜெபித்தார் (யோவான் 17)

   ஆ. அப்போஸ்தலர் ஜெப வீரர்களாய்த் திகழ்ந்தார்கள் (1தெச1:2)

   இ. ஆதிசபை ஜெபத்திலே உறுதியாய் தரித்திருந்தனர் (அப் 2:42)
4. தமது சீஷர்கள் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று இயேசு கற்றுக் கொடுத்தார் (மத்தேயு 6:1-13)

## விவாதம்:

**அநேக ஜனங்கள் ஜெபிப்பது ஏன்?**

1. பாவமன்னிப்பிற்காக
2. பக்தி விருத்தியடைய
3. பரிசுத்த ஆவியைப் பெற
4. தங்களுக்கு உதவி தேவை என்பதால்
5. ஜெபம் ஒரு வழக்கம் என்பதால்

**அநேகர் ஏன் ஜெபிப்பதில்லை?**

1. போதிய போதனை இன்மையால்
2. விசுவாசக் குறைவால்
3. முற்றிலும் அலட்சியம் காரணமாக

**ஜெபிக்கும் உரிமை பெற்றவர் யார்?**

1. புறம்பேயிருக்கும் பாவியல்ல (யோ 9:31)
2. கிறிஸ்தவர்கள் மட்டுமே (1 யோவான் 5 :14)

**ஏன் ஜெபிக்க வேண்டும்?**

1. தேவன் கட்டளையிட்டுள்ளபடியால் (1 தெலோனிக்கேயர் 5 :17)
2. பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்க (யாக்கோபு 5:16)
3. சோதனைகளை மேற்கொள்ள (மத்தேயு 6:13)
4. தேவனுக்கு நன்றி செலுத்த (பிலிப்பியர் 4:6)
5. விண்ணப்பங்களை ஏறெடுக்க (பிலிப்பியர் 4:6)

**எப்பொழுதெல்லாம் ஒருவர் ஜெபிக்க வேண்டும் ?**

1. கர்த்தருடைய நாளிலே (அப்போஸ்தலர் 2:42)
2. பந்தியில் அமர்ந்திருக்கும்போது (மத்தேயு 6:11)
3. இடைவிடாமல் (1 தெசலோனிக்கேயர் 5:17)

**ஒருவர் எப்படி ஜெபிக்க வேண்டும்?**

1. எல்லாத் தாழ்ரமயுடனும் (லூக்கா 18:10-14)
2. மறைவான இடத்தில் தணிந்திருந்து (மத்தேயு6:6)
3. பொதுவாகக் கூடிவரும் ஆராதனையாலும் பிறக்கூட்டங்களிலும் (அப்போஸ்தலர் 20:36)

**யார் யாருக்கெல்லாம் ஜெபிக்க வேண்டும்?**

1. தங்களுக்காக (மத்தேயு 6:11)
2. மற்றவர்களுக்காக (யாக்கோபு 5:16)

**ஒருவருக்கு ஜெபம் எந்த வகையில் உதவும்?**

1. ஒருவரைத் தேவனிடத்தில் சேர்க்கிறது.
2. ஒருவரை நல்லதொரு கிறிஸ்தவனாக மாற்ற
3. கர்த்தருக்கள் விசுவாசத்திலே அவரைக் காத்துக்கொள்ள

அ. அது (சந்தோஷம்) சொல்லப்பட்டதைக் காட்டிலும் உணரப்படுதலே சிறந்தது எனக் கருதுவோம்.

ஆ நீங்கள் சந்தோஷமாயிருந்தால் எல்லாம் நலமாகச் செல்லும் எனும் கருத்து.

3. மறுபடியும் பார்த்தால், கிறிஸ்தவம் முற்றிலும் வருத்தமும் ஆர்வமற்றதுமானது எனும் கருத்தும் நிலவுகிறது.

**ஆ. கிறிஸ்தவனின் சந்தோஷத்திற்கான காரணங்கள்:**

1. தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டுபண்ணக்கூடிய அளவுக்கு, தேவன் தன்னிடம் அன்பு கூர்ந்தார் எனம் உணர்வு (1 கொரிந்தியர் 10:13)
2. அவனுடைய பாவங்கள் கழுவப்பட்டமையால் அவன் சந்தோஷமாயிருக்கிறான் (அப் 8:39)
3. தனக்காக இப்பொழுது பரலோகத்தில் நித்திய ஜீவன் வைக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொண்டுள்ள படியால் (யோவான் 14:1-3)
4. கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ, அந்த சபையில் அவன் இப் பொழுது அங்கம்.
5. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளும் சிலாக்கியத்தை அவன் இப்பொழுது பெற்றிருப்பதால் (1பேதுரு 4:16)
6. இப்பொழுது அவன் தேவனை ஆவியோடும் உண்மையோடு தேவனுடைய மக்களோடு சேர்ந்து ஆராதிக்கும் நோக்கத்தை பெற்றிருப்பதால் (அப் 2:38-47)

   அ. ஜெபிக்க

   ஆ. பாட

   இ. வேதத்தை வாசிக்க

   ஈ. கர்த்தருடைய பந்தியில் பங்குபெற

   உ. காணிக்கை செலுத்த
7. கர்த்தருக்கென்று பாடுகளை அனுபவிக்க கிடைத்துள்ள சந்தர்ப்பத்திற்காக (கொலோசெயர் 1:24)
8. கிறிஸ்துவினிமித்தம் மற்றவர்களும் ஆதாயப்படுத்தப் படுகிற அருமையானஅனுபவம் கிடைத்திருப்பதால் (லூக் 15:4-10)
9. கிறிஸ்துவுக்குள் உள்ள அனைத்து ஆவிக்குரிய ஆசீர்களையும் தான் பெற சிலாக்கியம் பெற்றிருப்பதால் (எபேசியர் 1:3)
10. தனக்கு வழிகாட்டும் தேவ வசனத்தைக் கொண்டிருப்பதால் (சங்கீதம் 119:105)

**கிறிஸ்தவ ஜீவயத்தின் ஒரு பகுதி**

1. கர்த்தரிடத்தில் அன்புகூறுவதால் உண்டாகும் சந்தோஷம் (யோ 14:28
2. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுதல் (ரோமர்12:15)
3. ஆவியின் கனி சந்தோஷம் (கலாந்தியர் 5:22)

## முடிவுரை :

1. நண்பனே, நீங்கள் சந்தோஷமாக இருக்க விரும்பினால் கிறிஸ்தவராகுங்கள்.
2. கிறிஸ்தவனாக இருந்தும் சந்தோஷமில்லாமலிருப்பீர்களானால் ஏதோ கோளாறு என்று பொருள்.
3. நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையினால் கிறிஸ்த வனாயிருப்பதன் பொருள் என்ன என்பதை உலகத்திற்குக் காட்டுங்கள்

# கிறிஸ்துவின் இரத்தம்

மத்தேயு 26:26-28

The Blood of Christ

## முகவுரை:

1. மனிதனுடைய மார்க்க ஜீவியத்தில் இரத்தம் எப்பொழுதுமே பெரிய பகுதியை செய்துள்ளது.

   அ. காயீனும் ஆபேலும் இரத்தபலி செலுத்தும் படி தேவன் கட்டளையிட்டார் (ஆதி .4)

   ஆ. இரத்தத்தில் உயிர் இருக்கிறது (ஆதி 9:4)

2. இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபிரேயர் 9:22)

## விவாதம்:

**அ. பழைய உடன்படிக்கையின் கீழ்**

1. இரத்தம் பரிசுத்தமும் புனிதமுமானதாகக் கருதப்பட்டது. (உபாகமம் 12:23)
2. பரிசுத்தம் பண்ணுகிறதற்கும், சுத்திகரிப்புக்கும், பிற பொருட்களை பரிசுத்தப்படுத்தவும் அது பயன்படுத்தப்பட்டது.

3. பாவங்களிலிருந்து சுத்திகரிக்க பலிகளைச் செலுத்தும்படி தேவன் கட்டளையிட்டார் (லேவியராகமம் 4,5)
4. ஆகிலும் மிருகங்களின் இரத்தம் பாவங்களை நிரந்தரமாக நிவர்த்தி செய்யவில்லை (எபிரேயர் 10:4)
5. ஆதலால் கிறிஸ்து வந்து தமது இரத்தத்தைச் சிந்த வேண்டியது அவசியமாயிற்று (எபேசியர் 1:7; ரோமர் 3:24-26; 5:6-11; எபிரேயர் 8-10)

**புதிய ஏற்பாட்டின் கீழ்**

1. கிறிஸ்து ஒரே பரிபூர்ண பலி

   அ. தேவனால் அனுப்பப்பட்டவர் (யோவான் 3:16)

   ஆ மனிதருக்காக மரித்தார் (ரோமர் 5:8)
2. கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கிறது (எபேசியர் 1:7)

**கிறிஸ்துவின் இரத்தத்தின் சிறப்பு அம்சங்கள்**

1. கிறிஸ்துவின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்கிறது. (எபிரேயர் 9:22)
2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதன் மூலம் சபையானது கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. (அப் 20 : 28)
3. விசுவாசமுள்ளவர்களின் பாவங்களை கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கும் (1யோவான் 1:7)
4. கர்த்தருடைய பந்தியிலே பங்கு பொறுவதன் மூலம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூறுகிறார்கள் (மத்தேயு26:26-28)
5. கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் மட்டுமே பரலோகத்திற்குள் போக முடியும் (வெளி 1:5)
6. இரத்தத்தின் மூலம் சமாதானம் உண்டாயிருக்கின்றது. (கொலோசெ யர் 1:20)

**இரத்தத்துடனான தொடர்பு**

1. விசுவாசத்தினால் மட்டுமோ அல்லது மனிதனுடைய வழிகள் மூலமோ அல்ல.

2. ஆனால் எளிமையாக கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படிவதன் மூலமே (மாற்கு 16:15,16; அப்போஸ்தலர் 22:16; 1 பேதுரு 1:18,19)

## முடிவுரை:

1. அநேகரும் உலகப்பிரகாரமான சிந்தை கொண்டு தேவனை மறுதலிக்கின்றனர்; ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தில் மட்டுமே வல்லமையுண்டு என்று உணர்வடைவதே உண்மையில் அறிவுப்பூர்வமானது.
2. அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுதல் என்பது நித்தியத்திற்கான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.
3. இரத்தத்தினால் கழுவப்பட்டவரா நீங்கள்?

# கிறிஸ்தவனாகுதல்

(அப். 26-28, 1பேதுரு 4:16; அப். 2 :38)

Becoming a Christian

## முகவுரை:

1. எல்லாவற்றிலும் கிறிஸ்தவ வாழ்க்கையே மிகப்பெரியது.
2. தேவனுடைய குடும்பத்தில் தாங்களும் ஒரு அங்கமாக எல்லாரும் விரும்ப வேண்டும்.
3. ஒருவர் தான் கிறிஸ்தவராக வேண்டுமானால், இந்தப் பாடம் அவர்களுக்கு உதவிகரமாயிருக்கும்

## விவாதம்:

அ. ஒருவர் கிறிஸ்தவனாக ஏராளமான காரியங்கள் செய்யப்பட்டுள்ளது.

1. தேவன் தமது குமாரனை நமக்காகத் தந்தார் (யோவான் 3 : 16)
2. கிறிஸ்து தமது உயிரைக் கொடுத்தார் (மத்தேயு 26:28)
3. திருமறை கொடுக்கப்பட்டுள்ளது. (யாக்கோபு 1:25)
4. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. (மாற்கு 16:15)

**ஆ. மனிதன் தான் ஒரு கிறிஸ்தவனாக வேண்டிய அவசியத்தை உணர வேண்டும்.**

1. தான் ஒரு பாவி என்பதையும், அவன்தான் இருக்கும் நிலை மையில் தன் ஆத்துமாவை இழந்தவன் என்பதையும் (ரோமர் 3:23)
2. அவன் தன்னைத்தான் இரட்சித்துக்கொய்ய இயலாதவன் (ரோ 3:23)
3. கிறிஸ்தவனாக மாற வேண்டும் என்பதை விரும்ப வேண்டும்.

அ. அப்படிச் செய்யாத சிலர்

i. அகிரிப்பா ராஜா (அப்போஸ்தலர் 26:28)

ii. பேலிக்ஸ் (அப்போஸ்தலர் 24:25)

ஆ. கிறிஸ்தவனாக விரும்பிய சிலர்:

i. சவுல் (அப்போஸ்தலர் 9:6)

ii. எத்தியோப்பிய மந்திரி (அப் 8:36)

4. அவன் செல்லுஞ் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும். (லூக்கா 9:25)

**கிறிஸ்தவனாகுதல்**

1. செய்யும்படியான சில காரியங்கள் உண்டு (மத்தேயு 7:21)

அ. ஒருவர் கிறிஸ்தவனாக மாறச் செய்யாத காரியம்

i. ஜெபிப்பதால் மட்டும்

ii. விசுவாசித்தால் மட்டும்

iii. நற்கிரியைகளைச் செய்வதால் மட்டும்.

ஆ. சத்தியத்தை அறிந்து அதன்படி செய்வதன் மூலம்

i. தேவனிடத்தில் விசுவாசமாயிருத்தல் (எபிரேயர்11:6)

ii. எல்லா பாவங்களிலிருந்தும் மனந்திரும்புதல் (லூக்கா 13:3)

iii. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் (ரோ 10:10)

iv. ஞானஸ்நானம் பண்ணப்படுதல் (மாற்கு 16:16)

2. அப்பொழுது கர்த்தர் தமது பகுதியை செய்வார்

அ. இரட்சிக்கப்பட்டவர்களை சபையிலே சேர்த்துக் கொள்கிறார் (அப்போஸ்தலர் 2:47)

ஆ. கிறிஸ்துவின் பெயரைத் தரித்துகொள்ள அனுமதிக்கிறார்.

**கிறிஸ்தவனாக மட்டுமே இருத்தல்**

1. வசன ரீதியான நாமத்தை மட்டும் தரித்துக்கொள்ள வேண்டும். (1 பேதுரு 4:16)
2. கர்த்தருக்கு மட்டுமே கணக்கொப்புவிக்க வேண்டும். (மத்தேயு 28:18; கொலோசெயர் 1:18)
3. கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாய் செயல்படலாம் (ரோமர் 6:3)

**கிறிஸ்தவனாவதில் உள்ள ஆசீர்வாதங்கள்**

1. பாவத்திலிருந்து உங்கள் ஆத்துமாக்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் (அப். 2:38)
2. நல்லதொரு சந்தோஷமான வாழ்க்கையை வாழுவீர்கள் (அப். 8)
3. மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்கிற சிலாக்கியம்.
4. பரலோகத்திலே ஒரு வாசஸ்தலம் உண்டாயிருக்கும் (யோ 14: 1-3)
5. எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் (எபேசியர் 1:3)

## முடிவுரை:

1. நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?
2. இல்லாவிட்டால் காலமும் சந்தர்ப்பமும் இருக்கிற இப்போதே ஒரு கிறிஸ்தவராகுங்கள்.
3. இது உங்களுக்கு ஒரு புதிய ஜீவியத்தின் துவக்க அடையாளமாயிருக்கும்.

# கிறிஸ்தவ ஜீவியம்

(கொலோசெயர் 3:3)

## The Christian Life

## முகவுரை:

1. கிறிஸ்தவ ஜீவியம் என்பது என்ன?
2. கிறிஸ்தவ ஜீவியம் என்பது எப்படிபட்டது?
3. இந்தக் காரியங்களையும் மற்றவைகளையும் ஆராய்வோம்.

## விவாதம்:

**அ. கிறிஸ்தவ ஜீவியம் எனும் தலைப்பின் விளக்கம்**

1. கிறிஸ்தவன் எனும் பதத்தின் பொருள் கிறிஸ்துவைப் போன்றவன், கிறிஸ்துவின் ஆவியை உடையவன் என்பதாகும். (ரோமர்8:9); கர்த்தருக்கு ஒருவர் கீழ்படிகிறபோது அவருடைய நாமத்தை தரித்துக் கொள்ளுதலாகும் (அப். 11 : 26; 1 பேதுரு 4:16)
2. ஒருவருடைய ஜீவியம் அவர் ஒரு புதிய சிருஷ்டியாகி இருப்பதை அறிவிக்கும் (2கொரிந்தியர் 5:17); அதாவதுஅவர் கிறிஸ்தவரானது முதற்கொண்டு கிறிஸ்து ஜீவித்ததைப் போலவே அவரும் ஜீவிப்பார் என்று பொருள்.

**ஆ. கிறிஸ்தவ ஜீவியம் என்பது அநேகர் நினைப்பதுபோல வாழ்கிற ஜீவியமல்ல.**

1. ஒரு பூரணப்பட்டவனாக வாழ்பவன் என்று பொருளல்ல (1யோவான் 1:8; யாக்கோபு 5:16)
2. அது ஒரு மந்தமான ஜீவியமும் அல்ல (1 பேதுரு 3:10,11)

**இ. கிறிஸ்தவ ஜீவியமானது பல காரியங்களைக் குறிக்கின்றது.**

1. ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் குறிப்பிட்ட செயலைச் செய்யும்படிக்கு பிரித்தெடுக்கப்பட்டவர்கள் (1 கொரிந்தியர் 1 : 1,2)
2. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமானவனாக இருப்பதைக் கூறுகிறது (யாக்கோபு 1:27)
3. தான் எதைச் சொன்னாலும், செய்தாலும் கர்த்தரைப் பிரியப்படுத்த ஏதுவாக்கும் செயல் என்பதை அறிவிக்கிறது. (கொலோசெயர் 3:17)

**ஈ. கிறிஸ்தவ ஜீவியமானது**

1. கீழ்படிகிற ஜீவியம் (எபிரேயர் 5:8,9)
2. ஆராதிக்கும் ஜீவியம் (யோ 4: 23,24)
3. பிரசங்கம் பண்ணும் ஜீவியம் (1தீமோத்தேயு4:16)
4. பிறருக்கு உதவும் ஜீவியம் (கலாந்தியர் 6:1,2)
5. கர்த்தருக்காக காத்திருக்கும் ஜீவியம்

**உ. சபைத்துவமா அல்லது கிறிஸ்தவமா?**

1. அநேகர் சபையில் கிறிஸ்தவராயிராமலேயே அங்கத்துவம் வைப்பார்களாம்.
2. ஒருவர் சபையில் அங்கத்தினராய் மட்டுமிராமல் உண்மையில் பரலோகத்திற்கு போகத்தக்கதாக புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை கைகொள்ளவும் வேண்டும்.
3. இது தனித்துவம் பெற்ற ஆராதனையையும் ஊழியத்தையும் காட்டுகிறது.

   அ. பொறுமை

   ஆ. சகோதர சிநேகம்

   இ. அன்பு

   ஈ. எஜமான விசுவாசம்

F. கிறிஸ்தவ ஜீவியம் பலனளிக்கும் ஜீவியம்

1. மற்ற எல்லாவற்றிலும் மேலான ஆசீர்வாதமுள்ளது.
2. அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதமுள்ளது.
3. நித்திய இரட்சிப்பைத் தரவல்லது.

# ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவியம்

எபேசியர் 1:3

A Life of Blessings

## முகவுரை:

1. பாவிகள் பலவகை ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தாலும் கிறிஸ்தவ ஜீவிய ஆசீர்வாதங்களோடு அவைகளை ஒப்பிட முடியாது (மத்தேயு 5:45)
2. சில நேரங்களில் சிலர், நீதிமான்களைக் காட்டிலும் பொல்லாதவர்களே அதிக ஆசீர்வாதங்களப் பெறுவதாக கூறுவதுண்டு.

   அ. அது உண்மையல்ல. ஏனெனில் கிறிஸ்தவன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சேர்த்து பெறுகிறான்.

   ஆ. உண்மையில் கிறிஸ்தவனே உலகப் பொருளாலும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுகிறான். ஏனெனில் அவன் நேர்மையாய் சம்பாதித்து சேமிக்கிறான்.

## விவாதம்:

**அ. ஆசீர்வாதங்களைக் குறித்த விளக்கம்:**

1. இதன் பொருள் என்னவென்றால் தெய்வீக தயவு, இரக்கம், கிருபை என்பதாகும்.
2. நமது பிரயாசங்களுக்காக கொடுக்கப்படும் பிரதிபலன், நமக்காகவே ஆசீர்வாதமாகக் கொடுக்கப்படுகின்றன.

**ஆ. வித்தியாசப்பட்ட வகையிலான ஆசீர்வாதங்கள் (எசேக்கியேல் 34:26)**

1. உலகப்பிரகாரமான அல்லது சரீர ஆசீர்வாதங்கள் (யாக்கோபு 1 : 17)

   அ. மழை சூரியன் உணவு உடை உறைவிடம் போன்றவை.

   ஆ. ஒரு நல்ல குடும்பம், நண்பர்கள், டாக்டர்கள், போன்றோர்
2. ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (எபே 1:3)
3. மறைந்திருந்து கிடைக்கும் ஆசீர்வாதம்

   அ. ஆபிரகாம் தனது குமாரனை பலி செலுத்துதல் (ஆதியாகமம் 22)

   ஆ. நாகமான் ஏழுமுறை யோர்தானில் முழுகுதல் (2 இராஜாக்கள் 5)

   இ. ஏழ்மையிலிருத்தல் (யாக்கோபு 2:5)

**இ. ஆசீர்வாத ஜீவியம்**

1. பாவ மன்னிப்பு (எபேசியர் 2:8)

2. கிறிஸ்துவின் நாமத்தைத் தரிக்கும் சிலாக்கியம் (1 பேதுரு 4 : 16)
3. கர்த்தருடைய சபையில் அங்கம் வகித்தல் (எபிரேயர்12:28)
4. ஆராதிக்கும் வாய்ப்பு (அப். 20:7; 1 கொரிந்தியர் 10:16)
5. திருமறையைக் கற்கும் சிலாக்கியம் (சங்கீதம் 119:105)
6. தேவனிடத்தில் ஜெபிக்கும் சிலாக்கியம் (1 யோவான் 5:14)
7. நல்ல மனசாட்சி (2தீமோத்தேயு 1:3)
8. ஊழியம் செய்யும் பாக்கியம் (எபெசியர் 6:7)
9. நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கை (2தெசலோனகேயர்2:16)

ஈ. **பாக்கியவான்கள்**

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் (மத்தேயு 5:1-11)
2. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிற பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் (எபே 1:3)
3. அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி. 22:14)

உ. **ஆசீர்வாதம் கையைவிட்டு போகிறவரை அது போற்றப்படுவதில்லை**

1. நமது வீடு எரிந்து சாம்பலாகும் வரை அதன் அருமையை நாம் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம்.
2. நமது ஆரோக்கியம் கெடுகிற வரைக்கும் அதன் ஆசீர்வாதத்தை நாம் உணருவதில்லை.
3. அநேகர் இரட்சிப்பை பாராட்டுவதில்லை, ஆயினும் அதை பெறாததே அவர்களுக்கு ஆக்கினையை கொண்டு வரும்.

ஊ. **ஆசீர்வாதமும் சாபமும் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. (உபாகமம் 11:26)**

1. தேவனுக்கு கீழ்படிந்தால் ஆசீர்வாதம்
2. தேவனை மறுதலித்தால் சாபம்
3. நாம் தான் மனதில் தீர்மானிக்க வேண்டும்.

## முடிவுரை:

1. இப்பொழுது நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்; எனவே மற்றவர் கட்கு ஆசீர்வாதமா இருப்போம்.
2. மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் கர்த்தர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பார்.

# ஆளுகை அமைப்பும் ஒத்துழைப்பும்

## Organization and Cooperation

## முகவுரை:

1. வணிக உலகிலும் கல்வி உலகிலும் ஆளுகை அமைப்பும் ஒத்துழைப்பும் மிகவும் அத்தியாவசமானது.
2. இதுதான் திருமறை உபதேசமும் கூட

## விவாதம்:

**அ. இப்பதங்களின் விளக்கம்.**

1. அமைப்பு - ஒரு கூட்டமைப்பு அல்லது சரீரம் குறிப்பிட்ட பணியைச் செய்யும்படி நிலை பெறுவது.
2. குறிப்பிட்ட நோக்கத்தை முறையான திட்டங்களுடன் செயல்படுத்துவது.
3. ஒத்துழைப்பு - ஒன்றாக செயல்படுத்துவது, குறிப்பிட்ட பணியை செயல்படுத்த கொண்டுள்ள ஐக்கியம்.

**ஆ. கர்த்தருடைய சபையின் மாதிரி (அப்.2, 1கொரிந்தியர் 12:13-27 ரோமர் 16:16)**

1. சபை ஒரு ஆவிக்குரிய அமைப்பு அல்லது நிறுவனம்
   - அ. கிறிஸ்துவே அதன் தலைவர் (கொலோசெயர் 1:18)
   - ஆ. தனிநபர்களாகிய அங்கத்துவம் ஒரே சரீரமாகுதல் (1கொரிந்தியர் 12)
   - இ. மூப்பர்கள் மந்தையை (சபையை) கண்காணிப்பவர்கள் (அப் 20 : 28; 1 தீமோத்தேயு 3 :1-7)
   - ஈ. உதவிக்காரர்கள் பந்தி விசாரனை செய்பவர்கள் (1 தீமோத்தேயு 3 : 8-13)
   - உ. பிரசங்கியார்களும் சுவிசேஷகர்களும் உலகத்தை சுவிசேஷக ஊழியத்தால் நிரப்ப வேண்டியவர்கள்
   - ஊ. அங்கத்தினர்கள் தங்களுடைய வெளிச்சத்தை பிரகாசிக்க செய்ய வேண்டியவர்கள் (மத்தேயு 5:14-16)
2. **சபை தனது பணியை முறைப்படுத்தி செயல்பட வேண்டும்.**

அ. திருமறைக்குட்பட்ட இந்த அமைப்பிற்குள் தான் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றி சாதிக்கும்படி சபைக்கென கொடுக்கப்பட்ட பணிகள் செயல்பட வேண்டும்.

ஆ. இலக்கோ திட்டங்களோ அல்லாத எந்த கூட்டமைப்பும் செயலற்றுப் போகும்.

3. **சபையின் ஊழியம் நிறைவேற்றப்பட ஒத்துழைப்பு அவசியமானது (1 கொரிந்தியர் 1:10)**

அ. பிராந்திய சபைகளுக்குள் ஒத்துழைப்பு (2 கொரிந்தியர் 9 : 1 - 5)

ஆ. பிராந்திய சபைக்குள் உள்ள அங்கத்தினர்களுக்குள் ஒத்துழைப்.

இ. பிராந்திய சபையிலுள்ள அவரவர் தன் தன் திறமைகளை (தாலந்துகளை) பயன்படுத்த வேண்டும். (மத்தேயு25:14-30)

i. ஊழியம் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகளுடன் சண்டைகள் போடக்கூடாது.

ii. மற்றவர்கள் செய்வது தவறு என்று குறைகூறிக்கொண்டு தான் கர்த்தருடைய பணியை செய்வதிலிருந்து நழுவ முடியாது.

4. பிராந்திய சபையானாலும் உலகளாவிய சபையானாலும்; ஒத்துழைப்பு தேவை.

அ. முழு உலகிற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.

i. பிரசங்க மேடையிலிருந்து

ii. தனிநபர் ஊழியத்தின் மூலம்.

iii. கிறிஸ்தவர்கள் முறையான கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் படி, வசனப்படியான உபதேசத்தை சபை கூடி வரும் பொழுதெல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆ. தேவனைத் தொழுதல்

i. சபை கூடிவருதலில் பங்கேற்றல்

ii. பயப்பக்தியுள்ளவர்களாயிருத்தல்

இ. ஏழைகளுக்கு உதவுதல்

i. உதவ விருப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

ii. கிறிஸ்தவர்கள் (காணிக்கை) கொடுத்து அது சபையின் கரத்தில் இருந்தால் தான் செய்ய இயலும்.

ஈ. சமுதாயத்தின் நடுவில் முன்மாதிரி ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும்.

i. கிறிஸ்தவர்களுக்குள் அந்நியோநியம்

ii. பிறருடைய பாரங்களைச் சுமப்பது (கலாந்தியர் 6:2)

உ. **ஆக அமைப்பும், ஒத்துழைப்பும் ஆகிய இரண்டும் தேவை**

1. ஒரு வேளை திட்டங்கள் சிறப்பானதாக இருக்கலாம். ஆகிலும் ஒத்துழைப்பு (ஒற்றுமை) இல்லாவிடில் அதில் பிரயோஜனமில்லை.
2. ஏதாவது நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டு, அது செயல்படுத்தப் பட்டால் நல்ல பலன் தரும்.

*முடிவுரை:*

1. அமைப்பும், ஒத்துழைப்பும் இல்லாதிருந்த எத்தனையோ பிராந்திய சபைகள் அழிந்து போயின.
2. உங்கள் பிராந்திய சபையைப் பற்றி என்ன?

# நமது இருதயங்களை கடினப்படுத்துதல்

## Hardening our Hearts

*முகவுரை:*

1. பெரும்பான்மையான ஜனங்கள் (ஆத்துமாவை) இழந்துள்ளனர்

அ. உலகப் பிரகாரமாய் வாழ்கின்ற யாவரும் இழந்து போனவர்கள் தான்.

ஆ. சபை அங்கத்தினர்களிலும் கூட அநேகர் ஆத்துமாக்களை இழந்து கொண்டுள்ளனர், அவர்கள் கர்த்தருடைய வருகை நாளியே இராஜ்யத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டு கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (மத்தேயு 13 :41)

2. ஜனங்களில் அநேகரும் தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொண்டிருப்பதால் இது உண்மையானது

## விவாதம்:

**அ. ஜனங்களுடைய உணர்வைத் தூண்டும் உண்மைகள்.**

1. தேவன் ஒருவர் இருக்கிறார் (ஆதியாகமம் 1.1)
2. பாவிகளுக்காக கிறிஸ்து மரித்தார் (ரோமர் 5:8 )
3. சுவிசேஷத்தின் பெலன் (ரோமர் 1:16)
4. மகிமையுள்ள சபை
5. மரணத்தை பற்றிய உண்மை நிலை (எபி 9:27)
6. நித்தியத்தைக் குறித்த ஏற்புடமை (மத்தேயு 25:46)

**ஆ. ஆகிலும் எல்லாரும் உணர்வடைவதில்லை.**

1. உலகத்தை மனமாற்றம் செய்வதில் உள்ள கஷ்டம் (யோவான் 5 : 40)
2. மார்க்கரீதியான மக்கள் வித்தியாசமான சிலவற்றை தேடுகின்றனர் (மத்தேயு 13:15)
3. தவறு செய்யும் கிறிஸ்தவன் தேவனுக்கு புறமுதுகு காட்டுகிறான் (வெளி 3:13-16)
4. சபையின் அங்கத்தினர்கள்

   அ. மூப்பர், ஊழியர், பிற அங்கத்தினர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கக் கூடும்

   ஆ. தங்கள் வசதியை போல சபை ஆராதனையில் கலந்து கொள்வார்கள்

   இ. வரவுக்குத்தக்கதாக கொடுக்க மாட்டார்கள்

   ஈ. உலகத்தோடு ஒத்துப் போவார்கள்

   உ. ஊழியமோ, வேலையோ செய்யாமல் சோம்பலாக இருப்பார்கள்.

**இ. ஒருவருடைய இருதயம் கடினப்படும் விதங்கள் சில**

1. தவறுகளால்
2. சத்தியத்தின் மேலுள்ள அன்பு தணித்து போவதால்
3. வயதாகி விடுவதால்
4. உலகப் பற்று

5. அலட்சியம்
6. தொடர்ந்து சில காலம் தவறுகளைச் செய்து கொண்டே இருப்பது
7. பிறருடைய நெருக்கடி அல்லது பிறருடைய மாதிரியைப் பின் பற்றுதல்

**ஈ. ஒருவருடைய இருதயக் கடினத்தால் வரும் விளைவு :**

1. மனந்திரும்பக் கூடாத அளவுக்கு விழுந்து போதல் சாத்தியம்.
2. கர்த்தர் அவர்களுக்கு கொடிய வஞ்சகத்தை அனுப்புவார் (2தெச லோனிக்கேயர் 2:11)
3. இம்மையிலும் மறுமையிலும் ஆத்தும இழப்போடடே இருக்க சாத்தியக் கூறுகள் உண்டு

**உ. இப்படிப்பட்ட கடின இருதயங்களை மாற்ற, செய்ய வேண்டியது என்ன?**

1. ஆராதனை, திருமறை, ஜெபங்கள், போன்றவை உங்களுக்கு முக்கியத்துவமுள்ளவைகளாயிருக்கட்டும்.
   அ. ஆவிக்குரிய காரியங்கள் ஏதோ வெறும் சடங்காச் சாரமாக்கப்பட வேண்டாம்.
   ஆ. ஏதோ கிடைத்த சந்தர்ப்பமாக, சந்தர்ப்ப வசத்தால் அமைந்த ஒன்றாக, கருத வேண்டாம்.
   இ. ஆராதனை ஸ்தலங்களை சாதாரண இடமாக கருத வேண்டாம்.
2. தேவ காரியங்களில் எந்தக் கேள்வியுமின்றி அவருக்குக் கீழ்படியுங்கள்
   அ. உங்கள் சொந்த கருத்துக்களையும், ஆலோசனைகளையும், தூக்கிப்போடுங்கள்
   ஆ. மனித உபதேசங்களுக்கு செவி சாய்க்காதீர்கள்
3. உங்கள் பிள்ளைகள் தேவனையும், அவரது வசனங்களையும் மதிக்க கற்றுக் கொடுங்கள்.
4. உலகத்தாருக்கு வசனத்தை தொடர்ந்து போதியுங்கள்

## முடிவுரை:

1. தேவன் நீதிமான்களை மட்டுமே இரட்சிப்பார்.
2. நீங்கள் எங்கே நிற்பீர்கள்?.

# இயேசு தாம் விரும்புகிறதைக் காண்கிறாரா?

வெளி 3:15; மத்தேயு 18:20

Does Jesus See what He wants to see?

## முகவுரை:

1. கர்த்தர் நம்மைக் கண்காணித்துக் கொண்டேயிருப்பதால் நம்மைப் பற்றி எல்லாமே அவருக்குத் தெரியும்.
2. கிறிஸ்து எப்போழுதும் உலகமெங்குள்ள அனைத்து கிறிஸ்தவர்கள் மத்தியிலிருக்கிறார்.
3. பின் வரும் கேள்விகளை அலசிப்பார்த்து, அதற்காக எதையாகிலும் செய்யும் படி தீர்மானியுங்கள்.

## விவாதம்:

அ. இயேசு உலகத்தில் எதைப் பார்க்க விரும்புகிறாரோ அதைப் பார்க்கிறாரா ? (1யோவான் 2:15)

1. உலகம் தொடர்ந்து யுத்தபயங்களைச் சந்திக்கிறது.
2. எப்பக்கம் திரும்பினாலும் பிரிவினைகளும், குழப்பங்களுமே காணுகிறது
3. தேவனுடிடைய நீதியை மிஞ்சி உலக சுகபோகங்கள் நிற்கிறது.
4. தேவன் தாம் காண்பதைக் குறித்து பிரியமில்லாத வராயிருக்கிறார்

ஆ. வீடுகளில் இயேசு எதைப்பார்க்க விரும்புகிறாரோ அதைப் பார்க்கிறாரா? (எபேசியர் 6: 1-4)

1. விவாகரத்தும் மறுமணமும் ஆதிக்கம் செலுத்துகிறது.
2. கோபமும் துஷ்பிரயோகமும் மனித நட்புகளுக்கு பங்கம் விளைவிக்கின்றன.
3. கர்த்தர் கைவிடப்பட்டு, பாவம் அந்த இடத்தை கைபற்றியுள்ளது.
4. கர்த்தர் வீட்டிலே காண்பதில் பிரியப்படுவதில்லை.

இ. மார்க்க உலகில் (மதம்) கர்த்தர் எதை பார்க்க விரும்புகிறாரோ அதைப் பார்க்கிறாரா? (ரோமர் 16:17,18) ?

1. இன்றைய (கிறிஸ்தவ)மார்க்க உலகில் நூற்றுக் கணக்கான கூட்டங்கள் காணப்படுகின்றன.

2. எல்லா வித உபதேசங்களும், கோட்பாடுகளும் பரப்பப்படுகின்றன
3. ஆதலால் கர்த்தர் மார்க்க உலகிலே காண்பதில் பிரியம் படுவதில்லை

ஈ. சபையிலே கர்த்தர் எதை பார்க்க விரும்புகிறாரோ அதைப் பார்க்கிறாரா? (மத்தேயு 28 : 18-20)

1. கர்த்தருடைய சபைக்குள்ளாகக் கூட ஏராளமான முரண்பாடுகள் காணப்படுகின்றன.
2. குறிப்பிட்ட சில அங்கத்தினர்கள் கனத்தையும் மற்ற எல்லாரைக் காட்டிலும் உயர்வாக கருதப்பட வேண்டும் என விரும்பும் நிலை உள்ளது.
3. சபையின் உண்மையான பணியாகிய சுவிசேஷ ஊழியம் அடிக்கடி மறக்கப்படுகிறது

உ. ஆராதனையிலே கர்த்தர் எதைப் பார்க்க விரும்புகிறாரோ அதை பார்க்கிறாரா? (யோவான் 4: 24)

1. சபையை சேர்ந்த அநேக அங்கத்தினர்கள் சபை கூடி வருவதை விட்டு விடுகின்றனர்
2. வேறு சிலர் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள தவறுகின்றனர்
3. சபையின் செயல்பாடுகளில் எப்பொழுதும் உற்சாகமாக பங்கேற்க மறுப்போர் உண்டு
4. இல்லை, ஆராதனையில் நிகழும் காரியங்களிலே கர்த்தர் அவ்வளவாகப் பிரியப்படுவதில்லை

ஊ. மனிதனுக்குள் கர்த்தர் எதைப் பார்க்க விரும்புகிறோரா அதைப் பார்க்கிறாரா? (யாக்கோபு 4:17)?

1. அநேகர் கர்த்தருக்குக் கீழ்படிய மறுக்கின்றனர்
2. சிலர் கிறிஸ்தவனுக் கென்று ஒப்புக் கொடுக்கப்பட்ட கடமைகளில் தவறுகின்றனர்
3. மனிதனுக்குள் கர்த்தர் பார்ப்பதில் பிரியப்படுவதில்லை

## முடிவுரை:

1. இயேசு எதைப்பார்க்க விரும்புகிறார் ?

அ. அவருடைய சித்தத்திற்கு கீழ்படிவதை

ஆ. நீதியானது நிலைத்திருக்கும் படி

இ. எல்லாருக்கும் சந்தோஷம் உண்டாக வேண்டும்.

2. கர்த்தர் எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

3. ஒருவன் சக மனிதனிடத்திலிருந்து தன்னை மறைத்துக் கொள்ளலாம்; ஆனால் தேவனிடத்திலிருந்து மறைக்க முடியாது.

4. நல்லதொரு ஜீவியத்தை செய்ய இப்பொழுது தீர்மானியுங்கள்

# தேவனுக்கு உடன் வேலையாட்கள்

அப்போஸ்தலர் 2:44; 2 கொரிந்தியர் 6:1

Workers together with God

*முகவுரை:*

1. இயல்பாக மனிதன், தான் செய்யும் காரியத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவான்.

அ. அன்றாட வேலையில் - பாத்திரங்களைக் கழுவுவதில் உதவி

ஆ. விளையாட்டுக்களில் - சில விளையாட்டுக்கள் மட்டுமே தனியாக மனிதன் விளையாட ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இ. ஆராதனைகளில் - வேதம் வாசிப்பது பாடுதல் போன்றவற்றில் பிறருடைய பங்கும் தேவைப்படுகிறது.

2. ஒற்றுமையாயிருப்பது பற்றி பெரிய அளவில் பேசப்படுகிறது.

அ. ஒன்றாகச் சேர்த்து ஜெபிக்கும் குடும்பம் ஒன்றாக கட்டப்பட்டும் இருக்கும்.

ஆ. ஒரு தலையைக் காட்டிலும் இரண்டு தலைகள் சாலச் சிறந்தது.

3. தனிமை பயங்கரமானது.

அ. சிறையிலடைக்கப்பட்டவர்கள் தனிமையிலிருக்கு மளவு தண்டிக்கப்படுகின்றனர்

ஆ. பெற்றோர்தங்கள்பிள்ளைகளின்தவறுகளுக்காகதனிமைப்படுத்தித் தண்டிப்பது உண்டு.

இ. சிலருக்குஇப்படிப்பட்டதனிமைமிகஅதிகம்என்றுநிரூபணமாகியும் உள்ளது.

i. தனிமையாயிருப்பதால் மனக்கோளாறுகள் உண்டாகிறது.

ii. பிற மனித அன்புக் தங்களிடம் வெளிக் காட்டப்படாமையால் பிள்ளைகள் பயப்படுதலுக்குள்ளாகின்றனர்

iii. தனிந்து விடப்பட்ட சபை அங்கத்தினர்கள் பெரும்பாலும் பலவீனமுள்ளவர்களாகி தேவனிடத்திலிருந்து வழுவிப் போகின்றனர்.

## விவாதம்:

**அ. மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்பதை தேவன் உணர்ந்தார்**

1. தேவன் ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார் (ஆதியாகமம் 2 : 18)
2. அப்போஸ்தலனாகிய பவுலும் மனிதர்கள் வேகிறதாக இருக்கக் கூடாதாகில், விவாகம் பண்ணுவது நலம் என்றார்.

**ஆ. ஒரு காரியத்தை செயலாக்க தேவன் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.**

1. பன்னிரண்டு வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர் (உபாகமம் 1 : 23)
2. கிறிஸ்து அப்போஸ்தலர்களை இரண்டிரண்டு பேராக அனுப்பினார் (மாற்கு 6:7)
3. பவுல் எப்பொழுதுமே யாரையாகிலும் தன்னோடே கூட்டிக்கொண்டு போனார் (அப்போஸ்தலர் 17:1)

**இ. சபை எப்பொழுதுமே ஒற்றுமையாயிருக்க வேண்டும்; இந்த ஒற்றுமை என்பது அநேக ஜனங்களை உள்ளடக்கியது.**

1. நாம் ஒன்றாயிருக்கும்படி கிறிஸ்து ஜெபித்தார் (யோவான்17:20,21)
2. "தனக்குத்தானே பிரிந்திருக்கும் எந்த இராஜ்யமும் நிலை பெறாது" (மாற்கு 3:24)

**ஈ. நாம் ஒன்றாக பணியாற்ற வேண்டியவர்கள்**

1. தேவனுடைய உடன் வேலையாட்கள் (2 கொரிந்தியர் 6 : 1)

2. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட ஒன்றாக வேண்டியவர்கள் (1 தீமோத்தேயு 6:12)

3. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள் (ரோமர் 12:15)

**உ. நாம் ஒன்றாக ஆராதிக்க வேண்டியவர்கள்**

1. முழுக்குடும்பமும் ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும்.

2. பாடுதல், ஜெபித்தல், வேதவகுப்புகளில் கலந்து கொள்ளுதல் ஆகியவற்றை ஒன்று கூடி செய்வது நல்லது; ஏனெனில் நாம் ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தக் கூடும். (எபிரேயர் 10:25)

**ஊ. குடும்பம் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.**

1. ஒருவருக்கொருவர் அன்பு கூறுதல்

2. காரியங்களை ஒன்றாகச் செய்தல்

3. வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டும்.

**எ. நம்முடைய கர்த்தரை சந்திக்க எல்லாரும் ஒன்றாக மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்படுவோம். (1தெலோனிக்கேயர் 4:17)**

1. மரணம் எல்லாருக்கும் நியமிக்கப்பட்டுள்ளது (எரேயர் 9 : 27)

2. நியாயத்தீர்ப்பு நாளில் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாச னத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.

3. எல்லாருமே ஏதோ ஒரு இடத்தில் நித்தியத்தை கழிக்க வேண்டும்.

**ஏ. ஆவிக்குரிய வகையில் தனிமையாக்கப்பட்டு இந் உலகத்தில் இருப்பது.**

1. உற்சாகமிழந்து விழுந்து போதலுக்கு ஏதுவாக்கும்

2. மிகச் சுலபமாக சோதிக்கப் படலாம்.

**ஐ. ஒன்று சேர்ந்து நிற்பதில் உள்ள ஆசீர்வாதங்கள்**

1. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க முடியும்.

2. அங்கே ஐக்கியம் இருக்கும்

### இறுதியாக :

1. ஆனாலும் ஒவ்வொருவரும் தனித்தனியாகவே செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு.
2) நாம் தேவனைப் பிடித்துக் கொள்வோம், பின்பு நாம் ஒரு போதும் தனிமையில் இருக்கமாட்டோம்.
   - அ) சுவிஷேசத்திற்கு கீழ்படிவது
   - ஆ) கிறிஸ்தவ வாழ்வை வாழுதல்
   - இ) தன்னைக் குறித்த கணக்கு கொடுத்தல் (நியாயத்தீர்ப்பில்)

# நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோ1:12)

## I know whom I have believed

### முகவுரை

1. அப்போஸ்தலனாகிய பவுலுக்கு, தேவன் யார் என்பது தெரிந்ததின் காரணமாகவே அவருடைய வேலைக்காரனாக மாறினார்.
2. வேதாகமம், சபை, வேலை மற்றும் நாம் செய்யும் எல்லாமே, நாம் நம்பக்கூடிய இந்த தேவனை "அறிந்து கொள்ளுதல்" என்பதன் ஆதாரமே.
3. நாம் யாரை நம்பியுள்ளோமோ அவரைப் பற்றி தெரிந்து கொள்ள அநேக வழிகள் உண்டு.

### விவாதம் :

**அ) தேவனை அறிந்து கொள்வதே வாழ்வாகும்.**

1) தேவனில் மட்டுமே வாழ்வு இருக்கின்றது.
2) வாழ்வு கொடுக்கும் வல்லமை அவரிடம் தான் உண்டு. (1 தீமோ 6:13)

**ஆ) அவருடைய அன்பின் மூலம் அவரை அறிந்து கொள்ளுதல் (எபே 3:19)**

1) அவர் தன்னுடைய குமாரனைக் கொடுத்தார் (ரோ 5:8)
2) உலகத்தின் மீதான அவருடைய அன்பே, இத்தகைய பரிசை அவர் கொடுக்கும் படி செய்தது (யோ 3:16)

**இ) நம்முடைய அன்பின் மூலம் தேவனை அறிந்து கொள்ளுதல் (மத் 22:37)**

1) தேவனை அறிந்து கொள்வதே அவரை நேசிப்பதாகும்.

2) அவரை நேசிப்பது என்பது அவருக்கு கீழ்படிவதாகும் (யோ 14:15)

3) நாம் அந்த அன்பை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்த வேண்டும் (எபி 13:1)

**ஈ) உலக ஞானமானது போதாது (1 கொரி 1:21)**

1) அநேகர் நன்றாகப் படித்திருப்பினும், தேவனைப் பற்றி அறியாமலிருக்கின்றனர்.

2) ஆவிக்குரிய காரியங்களின் மூலமே தேவனைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியும் (1 கொரி 1:26,27)

**உ) கிறிஸ்துவின் செயல்களின் மூலம் அறிந்து கொள்ளுதல்**

1) கிறிஸ்து தேவனிடம் இருந்து வந்தார் (யோ 3:1,2)

2) அவருடைய அற்புதங்கள் விசுவாசிகளை உண்டு பண்ண வேண்டியிருந்தது (யோ 20:31)

3) அவருடைய சில அற்புதங்கள்:

அ) பார்வையற்றவனை சுகப்படுத்தினார் - ஆவிக்குரிய பார்வை யற்றவர்களை சுகமாக்க முடியும்.

ஆ) செவிடனை சுகப்படுத்தினார் - ஆவிக்குரிய காதுகளை திறக்க முடியும்.

இ) ஊமையை சுகமாக்கினார் - ஆவிக்குரிய நாவுகளை கட்டவிழ்க்க முடியும்.

ஈ) வியாதிகளை சுகமாக்கினார் - நம்மையும் பாவத்திலிருந்து சுகமாக்க முடியும்.

உ) மரித்தோரை எழுப்பினார் - உயிர்தெழுதலின் நாளிலே நம்மையும் மரித்தோரிலிருந்து எழுப்ப முடியும்.

4) கிறிஸ்து தாமே மரணத்தை ஜெயித்தவராக கல்லறையில் இருந்து எழுந்தார்.

**ஊ) சத்தியத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என அறிதல் (யோ 8:32)**

1) எது சரி என்பதை புரிந்துகொள்ள வேதாகமத்தைப் பற்றிய அறிவு வேண்டும்.

2) ஆவியைப்பற்றி அறிந்துகொள்ள ஒருவர் கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். (1 யோ 4:2)

3) ஆவிகளை சோதித்துப் பார்க்க வேண்டும் (1 யோ 4:1)

**எ) நம்பிக்கையின் வல்லமையினால் தெரிந்து கொள்ளுதல் (எபே 1:18)**

1) நம்பிக்கை இல்லையெனில் வாழ்வு பரிதாபமாயிருக்கும்.

2) நம்பிக்கை வெட்கப்படச் செய்யாது

3) நம்பிக்கை என்பது ஒருவரை முன்னேறிச் செல்ல உதவும்.

**ஏ) நம்முடைய செயல்களின் மூலம் அவரை அறிந்து கொள்ளுதல் (பிலி 2:13)**

1) தேவனைப் பற்றி அறிவினால் ஒருவர், தேவனுடைய செயல்களை செய்ய முடியும்.

2) நாம் தேவனுடைய கருவிகளாகிறோம்.

**ஐ) உயிர்தெழுதலின் வல்லமையினால் அவரை அறிந்து கொள்ளுதல்**

1) கிறிஸ்து உயிர்தெழுந்ததினால் நாமும் உயிர்தெழலாம் என நம்புகிறோம்.

2) இந்த நம்பிக்கையின் காரணமாகவே, நாம் அவருடைய விருப்பங்களுக்கு இணங்குகிறோம்.

**ஒ) தேவனை அறிந்துகொள்வது, நாம் விழாமல் இருக்க உதவும்**

1) நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்பதினால் நாம் விழமாட்டோம் என்பதில்லை.

2) நாம் விழுந்து போக இயலும், ஆனால் தேவையற்றது.

3) கிறிஸ்துவைப் பற்றிய அறிவு, பாவத்தை மேற்கொள்ள ஒருவருக்கு வல்லமை தருகின்றது.

## *இறுதியாக:*

1. தேவனை நாம் உண்மையிலேயே அறிந்து கொள்ளும்போது, எதுவுமே நம்மை தேவ அன்பில் இருந்து பிரிக்க முடியாது (ரோ 8:38,39)

2. நிங்கள் ஆண்டவரை அறிந்து உள்ளீர்களா?

# தீமை
# BAD

**முகவுரை :**

1. "தீமை" என்றால் ஒழுக்க ரீதியான தீமை அல்லது கொடியது; தரத்தில் குறைந்தது, சாதகமற்றது, குறைவானது, தகுதியற்றது போன்றது.
2. நன்மைக்கு எதிரான எதுவுமே தீமை ஆகும்.

**விவாதம்:**

1. ஒரு கெட்ட பெயர்
2. கெட்ட பேச்சுவார்த்தை (அல்லது) நடவடிக்கை
3. ஒரு கெட்ட செய்தி
4. கெட்ட ஒழுக்கங்கள்
5. கெட்ட பாதிப்பு
6. கெட்ட போதகர்கள்
7. கெட்ட உபதேசங்கள்

**நன்மை மற்றும் தீமையின் ஆரம்பம்**

1. தேவன் படைத்தது எல்லாமே நல்லது தான் (ஆதி 1:31)
2. தேவனுக்கு கீழ்ப்படியாமற் போகும் வண்ணமாக, மனிதன் தீமையானவற்றை உண்டாக்கினான் (ஆதி 3)
3. தேவன் மனிதனை பாவமற்றவனாகப் படைத்தார்.
   அ. மனிதன் சீக்கிரமாக கணக்கு கொடுக்கக்கூடிய வயதை அடைகிறான்.
   ஆ. பின்பு அவன் பாவம் செய்தவனாகிறான் (ரோ 3:23)
   இ. அந்த நிலைமையில் அவன் தேவனைவிட்டு பிரிகிறான்.
4. தான் இரட்சிக்கப்படும்படியாக மனிதன் தேவனுடைய கட்டளைகட்கு கீழ்படிய வேண்டும் (மாற்கு 16:16; 1 யோ 5:3)

**இறுதியாக:**

1. தீமையும், தீமையை செய்பவர்களும் அழிக்கப்படுவார்கள்.
2. நாம் தீமையானவர்களாய் இருக்க வேண்டியதில்லை; தேவனை நேசித்து அவருக்கு கீழ்படிவதினால் நாம் நன்மையை தேர்வு செய்ய முடியும்.

# நன்மை

## Good

### முகவுரை :

1. "நன்மை" என்ற வார்த்தை வேதாகமத்தில் அநேக முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
2. அதற்கு "இரக்கமுள்ள, பிரம்மாதம், சக்தியுள்ள, பிரயோஜனமான, தகுதியான, உண்டை" போன்றவை...
3. இது பயன்படுத்தப்படும் சில வழிகளை நாம் பார்ப்போம்.

### விவாதம்:

1. படைப்பு நல்லதாக இருந்தது (ஆதி 1:4)
2. கர்த்தருடைய வார்த்தை நன்மையானது (ஏசாயா 39:8)
3. ஆண்டவர் நல்லவர் (நாகூம் 1:7)
4. ஒரு நல்ல பெயர் (நாமம்) (பிரசங்கி 7:1)
5. நல்ல வழி (1 இராஜா 8;36; எரே 6:16)
6. நல்ல உபதேசம் (நீதி 4:2)
7. நல்ல மனிதன் (மத் 12:35)
8. நல்ல வேலைக்காரன் (மத் 25:21)
9. எல்லாமே நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது (ரோ 8:28)
10. நன்மை எதுவோ, அதையே பற்றிக்கொண்டிருங்கள் (ரோ 12:9)
11. தீமையை நன்மையினால் வெல்லுங்கள் (ரோ 12:21)
12. எல்லா மனுஷருக்கும் நன்மை செய்வோம் (கலா 6:10)
13. நன்மை செய்யும்படி சிருஷ்டிக்கப்பட்டோம் (எபே 2:10)
14. நல்ல நம்பிக்கை (2 தெச 2:16)
15. நல் மனசாட்சி (1 தீமோ 1:5)
16. நன்மையான ஈவு எல்லாமே தேவனிடம் இருந்துதான் (யாக் 1:17)
17. நல்ல நாட்கள் (1 பேதுரு 3:10)
18. விசுவாசத்தின் நல்ல போராட்டம் (1 தீமோ 6:12)

19. ஒரு நல்ல அறிக்கை (1 தீமோ 6:13)
20. நல்ல விவாதம் (யாக் 3:13)
21. நல்ல ஒழுக்கங்கள் (1 கொரி 15:33)
22. நல்ல அறிக்கை (1 திமோ 3:7)

**முடிவுரை :**

1. தேவனிடம் இருந்து வரும் நன்மையானது (3 யோ 11)
2. நீங்கள் என்ன நன்மை செய்கிறீர்கள்?

# நம்முடைய சிறந்த முன்மாதிரி
## Our Perfect Example

**முகவுரை :**

1. மனிதன் எளிமையாக பாதிப்புக்குள்ளாகிறான்
2. அவன் எப்பொழுதுமே தன் வாழ்வை வடிவமைக்கும் படியாக ஒரு முன் மாதிரியை தேடுகிறான்.
3. எல்லா காரியங்களிலும் நம்முடைய முன்மாதிரியாக இருக்கும்படியாக கிறிஸ்து விரும்புகிறார்.

**விவாதம்**

**அ) கிறிஸ்து, நம்முடைய சிறந்த முன்மாதி**

1. ஜெபத்திலே (யோ 17)
2. அன்பிலே (எபே 5: 25)
3. விசுவாசத்திலே (மத் 4:4)
4. கொடுப்பதிலே (1 கொரி 1:4)
5. தியாகம் செய்வதிலே (அப் 8:32,33)
6. பொறுமையிலே (மத் 18:26,27)
7. பிரசங்கம் செய்வதிலே (மத் 28:19,20)
8. தைரியத்திலே (மத் 23:1-12)
9. தாழ்மையிலே (யோ 13:15)
10. மன்னிக்கும் ஆவியிலே (லூக் 23:24)

11. பாடுபடுவதிலே (யாக் 5:10,11)
12. பரிசுத்தத்திலே (1பேதுரு 1:18,19)
13. கீழ்படிவதிலே (எபி 5:8,9)
14. வளருவதிலே (லூக் 2:52)
15. ஆராதிப்பதிலே (மத் 4:10)
16. சோதிக்கப்படுவதிலே (மத் 4)

### இறுதியா

1. நீங்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிறீர்களா?
2. ஆண்டவரை பின்பற்றி, சிறந்த முன்மாதிரியாயிருங்கள்.

# தேவனைக் கட்டுப்படுத்துதல்

## LIMITING GOD

### முகவுரை :

1. தேவனையும் கூட கட்டுப்படுத்த முடியும் என உங்களுக்குத் தெரியுமா?
2. தேவன் ஒருவருக்கு செய்ய விரும்புவதை அந்த ஒரு தனிநபர் தவிர்க்க முடியும்
3. தன்னை மனிதன் கட்டுப்படுத்தாத பட்சத்தில் தேவன் இவ்வுலகிற்கு என்ன செய்ய முடியும்?
4. தன்னை மனிதன் கூட்டுப்படுத்தாத பட்சத்தில், தேவன் இப்பகுதிக்கு என்ன செய்ய முடியும்?
5. நாம் தேவனை கட்டுப்படுத்தாத பட்சத்தில், அவர் நம் பிராந்திய சபைக்கு என்ன செய்ய முடியும்?
6. நீங்கள் தேவனை கட்டுப்படுத்தாத பட்சத்தில், அவர் உங்களுக்கு என்ன செய்ய முடியும்?
7. இப்படி செய்ய தகுந்த ஒரே ஜீவராசி மனிதனே?

### விவாதம்:

அ. தேவன் செயல்படும் விதத்தின் காரணமாக அவரை கட்டுப்படுத்த முடியும்.

1. இன்று, தேவன் தனிநபரிடம் நேரடியாக பேசுவது கிடையாது.
2. மாறாக, தன்னுடைய கொடுக்கின்ற தன்மையின் மூலமாக தேவன் இன்று தனிநபரிடம் செயல்படுகிறார் (2 கொரி 4:7)
3. மனிதர்கள் இரட்சிக்கப்படுப்படியாக, ஒரு மனிதனே போதிக்கக் கூடியவராக தேவைப்படுகிறார் (அப் 8:26)

அ. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலே, மேலே உள்ள கூற்றுக்கு மாறாக தேவனால் நேரடியாகப் போதிக்கப்பட்டு ஒரு பாவி கிறிஸ்துவிடம் மாறியதாக ஒரு உதாரணமும் இல்லை.

ஆ. ஆத்துமாக்களை மனமாற்ற ஒரு போதகர் அவசியம்.

4. ஆனால், தேவனுடைய வேலையை (ஊழியம்) செய்ய மறுக்கும்போது, மனிதன் அவருடைய கரங்களை (இரட்சிக்காதபடி) கட்டுகிறான்.

**ஆ. தேவன் கட்டுப்படுத்தப்பட்ட சில உதாரணங்கள்**

1. ஆதாமும் ஏவாளும் (ஆதி 3)
2. ஜனங்கள் கேட்கக் கூடாத நிலையில் இருந்ததினால் உலகம் அழிக்கப்பட்டது (ஆதி 6,7)
3. தன்னுடைய அவிசுவாசத்தின் காரணத்தினால், தனக்கு தேவன் நிறைய நன்மைகளை செய்யாதபடி இஸ்ரவேல் தேசம் தேவனை கட்டுப்படுத்தியது (சங் 78:41)
4. தாங்கள் கிறிஸ்துவினிடமாக வராததினிமித்தமே அநேக யூதர்கள் தேவனைவிட்டு பிரிந்தனர் (யோ 5:40)

**இ. இன்று தேவனைக் கட்டுப்படுத்தும் மனிதர்கள்**

1. இன்று யூதன் கிறிஸ்துவை நேசிக்காததினால் அவரை (தேவனை) கட்டுப்படுத்துகிறான்.
2. தான் பாவத்தை நேசிப்பதினால் உலகமும் தேவனைக் கட்டுப்படுத்துகிறது.
3. ஜனங்களுக்கு சென்று சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க மறுக்கும் கிறிஸ்தவர்களும்...
4. பிரசங்கியார்கள்...
5. மூப்பர்கள்...

**ஈ. தேவனைக் கட்டுப்படுத்தும் மனித செயல்கள்**

1. பாவம் (ரோ 6:23)
2. சுவிஷேசத்திற்கு கீழ்படியாமறபோவது (மாற்கு 16:16)
3. தேவனிடமாய் திரும்பாமற்போவது (யாக் 5:16)
4. நாம் ஆராதிக்கும் முறைமையை மாற்றுவதினால் (யோ 4:24)
5. வசனத்தை ஆராய்தலை தவறவிடுதல் (2 தீமோ 2:15)
6. ஜெபிப்பதனை தவிர்ப்பது (1 யோ 5:14)
7. அன்பில்லாதது (மத் 22:37)
8. பிரசங்கிக்க (போதிக்க) மறுப்பது (மத் 28:19)
9. சபை கூடிவருதலை பங்குபெறாமற்போதல் (எபி 10:25)

**உ. தேவன் கட்டுப்படுத்தப்படும் காரியங்கள்**

1. பாவிகளை இரட்சிக்க முடியாது.
2. தவறு செய்பவர்களை திருத்துவது.

## *இறுதியாக:*

1. நீங்கள் தேவனை கட்டுப்படுத்துகிறீர்களா?
2. நீங்கள் அவருடைய கரங்களை கட்டிப்போட்டுள்ளீர்களா?
3. நீங்கள் அவரை பின்னடையச் செய்துள்ளீர்களா?
4. நீங்கள் இப்பொழுது தேவனை செய்ய அனுமதிப்பதைவிட, இன்னும் அதிகமாக அவரால் உங்களுக்கு செய்யமுடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
5. தேவனுக்கும், இரட்சிக்கப்படாத உலகிற்கும் இடையில் கிறிஸ்தவர்களே நிற்கின்றனர் என்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள்.
6. தேவன் மனிதர்களை இரட்சிக்கவும், ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார்; ஆனால், நாம் அனுமதிப்பதை தாண்டி அவரால் அதை செய்ய முடியாது.
7. தேவனை கட்டுப்படுத்தாதீர் !
8. அப்படிச் செய்வது உங்களக்கு நீங்கள் தீமையை வரவழைப்பதாகும்.

# சபையை உறுதியாக்குவது எது?

## What Makes the Church Strong?

(1 கொரி 16:13; எபே 6:10)

*முகவுரை :*

1. தேவன் சபையை ஸ்தாபித்து, அது உறுதியாக இருக்க வேண்டும் என விரும்பினார்.
2. லவதோக்கிய சபையின் இரண்டுங்கட்டான் நிலைமையின் காரணமாக, தேவன் தனது வெறுப்பைக் கொட்டினார். (வெளி 3 :1 5, 16)
3. ஆனால், ஒரு சபையை உறுதியாக்குவது எது?

## விவாதம்:

**அ. ஒரு சபை உறுதியாவதற்கு தேவையற்ற சில காரியங்கள்**

1. ஒரு பெருங்கூட்டம் (உபா 7:7)
2. உலக ஐசுவர்யம் (1 தீமோ 6:17-19)
3. உலக ஞானம் (1 கொரி 1:21)
4. ஒரு அருமையான கூடும் இடம் (அப் 17:24)
5. நிறைய பிரசங்கிமார்கள் (கலா 1:7-9)
6. புகழ் (மத் 7:13,14)

**ஆ. ஒரு சபை உறுதியாக தேவையானவைகள்**

1. தொடர்ந்து மனந்திரும்பும் ஆத்துமார்க்கள் (அப் 3:19)
2. போதிக்கப்படும் கிறிஸ்தவர்கள் (மத் 28:19,20)
3. உபதேசிக்கும் (வசனத்தை) சபை (1 தீமோ 4:16)
4. விசுவாசத்தில் அபரிதமான ஐசுவர்யத்தில் இருக்கும் சபை (ரோ 1:8)
5. ஆராதனையில் உண்மையும், தூய்மையுமான சபை (அப் 2:42)
6. வசனத்தின்படியான கிறிஸ்தவ ஜீவியத்தில் உறுதியான சபை (யாக் 1:27)

7. ஒற்றுமையான சபை (சங் 133:1)
8. வேலைசெய்யும் (செயல்படும்) சபை (யாக் 1:25)
9. தியாகம் செய்யும் சபை (ரோ 12:1)
10. ஜெபிக்கும் சபை (1 தெச 5:17)
11. அன்பு கூறும் சபை (1 கொரி 13)
12. வசனத்தின்படியான ஆளுகை அமைப்புடைய சபை (1 தீமோ 3; தீத்து 1; அப் 20:28)
13. ஒழுக்கம் காக்கப்படும் சபை (2 தெச 3:6)

**இ. உறுதியான சபையின் விளைவுகள் :**

1. ஆண்டவர் அதனுடன் இருக்கிறார் (மத் 28:20)
2. ஆத்துமாக்கள் தூய்மையாய் உள்ளனர்.
3. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.
4. சுவிஷேசம் பிரசங்கிக்கப்படுகிறது.
5. நன்மைகள் நடைபெறும்

## *இறுதியாக :*

1. இவைகள் நடைபெற ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு பங்கு உண்டு.
2. சபையானது உறுதியாக இல்லையெனில் அது நிறைய காரியங்களை சாதிக்க முடியாது.

# நீங்கள் சபையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (மத் 22:42; அப் 9:4,5)

## What think ye of the Church?

### முகவுரை :

1. முதல் நூற்றாண்டிலே, மனிதர்கள் சபையை மனிதகுலத்திற்கு சாபம் என்றெண்ணினர்; துன்பப்படுத்தி அதை அழிக்க நினைத்தனர்.
2. பின் வந்த நூற்றாண்டுகளில், மனிதர்கள் சபையை ஒரு குறைவுள்ள சரீரமாக கருதினர். அவர்களுடைய ஞானத்தை திருப்திப்படுத்தும் வகையில் அவர்கள் உண்மையான சபையைத் தவிர வேறு சபைகளை உருவாக்கினர்.
3. இந்த நூற்றாண்டிலும் கூட, கிறிஸ்து கட்டிய சபையை தள்ளிவிட்டு மனிதன் கட்டிய சபைகளையே ஜனங்கள் ஏற்கின்றனர்.
4. நீங்கள் சபையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

### விவாதம்:

**அ. முதலாவது, சபை என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?**

1. சபையென்பது ஒரு பிரம்மாண்டமான பேராலயமோ, நவீன ஆலயமோ அல்லது ஒரு கட்டிடமோ கிடையாது.
2. அது ஒரு சமுதாய நிறுவனமுமல்ல.
3. "எக்லீசியா" என்ற கிரேக்க வார்த்தையே ஆங்கிலத்தில் "சர்ச்" (சபை) என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று தான் பொருள்.
4. ஆகையால், சபையென்பது இப்படிப்பட்ட கிற்ஸ்தவர்களால் ஆனதே. அதாவது, உண்மையாகவே சுத்தமான தேவ வார்த்தையினால் உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டவர்கள்.

**ஆ. கிறிஸ்துவுக்கு கீழ்படிந்தவர்களை உள்ளடக்கியது சபை**

1. நாம் பிதாவில் விசுவாசம் வைக்க வேண்டும் என அவர் கூறுகிறார்.
2. நாம் உலகத்தை கைவிட்டு, நன்மை செய்ய மட்டுமே திரும்ப வேண்டும்.

3. நாம் தேவனுடைய குமாரனில் விசுவாசிக்கிறோம் என மனிதர்கள் முன் அறிக்கையிடனும்.

4. சிலுவையில்நாம்அவருடையமரணத்தையும்,அவருடையஅடக்கம் மற்றும் உயிர்தெழுதலை ஞானஸ் நானத்திலும் நாம் கீழ்படியனும். அதாவது, நாம் பாவத்திற்கும் இந்த உலக இச்சைகளுக்கும் மரித்து, நம்முடைய எல்லா பழைய பாவங்களும் கழுவப்படும்படியாக நாம் தண்ணீரிலே அடக்கம் செய்யப்பட வேண்டும்.

   நாம் பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைத்து இரட்சிக்கப்பட்ட படைப்பாகிறோம். அநேக நல்ல ஒழுக்கமான ஜனங்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று எண்ணுகிறார்கள்; ஆனால் அவர்கள் புதிய ஏற்பாட்டின் முழுமையான இரட்சிப்பின் வழியின்படி கீழ்படியாவிடில், ஏமாற்றமடைகிறார்கள். இரட்சிப்பை சாதாரணமாக எண்ணக் கூடாது.

**இ. மற்ற ஜனங்களிடமிருந்து தேவனால் பிரித்து வைக்கப்பட்ட இந்த குழுவின் அங்கத்தினர்களாகிய நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவர்கள் என்றால் கிறிஸ்துவைப் போன்றவர்கள்.**

1. கிறிஸ்து ஒரு சிறப்பான மனிதன் அவர் தேவனுடைய ஒரே குமாரன்.

2. கிறிஸ்துவைப் போல இருந்து அவரைப் பின்பற்றும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம்.

3. அவர் வாழ்ந்ததைப் போலவே ஒரு வாழ்வை நாம் எப்போதும் வாழ வேண்டும், இல்லையெனில் நாம் உண்மையிலே நம்மை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ள முடியாது.

**ஈ. மற்ற உலகத்தாருக்கு கிறிஸ்தவர்கள் வித்தியாசமானவர்கள்**

1. மனிதர்கள் சுயநலமானவர்கள்.
2. மனிதர்கள் பாவம் நிறைந்தவர்கள்.
3. மனிதர்கள் இவ்வுலகத்தில் மட்டுமே பிரியப்படக்கூடியவர்கள்.

**மாறாக,**

1. கிறிஸ்தவர் எல்லாவற்றையும் கொடுக்கவும் தியாகம் செய்யவும் கூடியவர்கள்; தங்கள் வாழ்வையும் கூட....

2. முடிந்த அளவு கிறிஸ்தவர்கள், பாவமற்ற வாழ்க்கை வாழ முற்படுகின்றனர்; அவர்கள் தங்களை அறியாமல் பாவம் செய்கையில் கிறிஸ்துவின் இரத்தம் அவர்களை சுத்தமாக்கும்.

3. இந்த வழியை மற்றவர்களும் இரட்சிக்கப்படும்படியாக அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் போதிக்க முயல்கின்றனர்.

**உ. ஒரு குழுவாக (சபை) கிறிஸ்தவர்கட்கு சில கடமைகள் உள்ளன**

1. தேவனை ஆராதிக்கும்படியாக ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அவரை நினைவு கூறுவார்கள்.
2. தங்களுக்கு தாங்களே உதவ இயலாத, தங்கள் உடன் இருப்பவர்களுக்கு கிறிஸ்தவர்கள் உதவி செய்ய முயல்வார்கள்.
3. இந்த வழியை மற்றவர்களுக்கும் இரட்சிக்கப்படும்படியாக அவர்களுக்கும் போதிப்பார்கள்.

**ஊ. சபையானது கிறிஸ்துவின் மணவாட்டி**

1. அவருடைய மனைவி என்ற முறையில், சபை தன்னுடைய கணவனுடைய பெயரையே தரித்துக் கொள்கிறது - "கிறிஸ்து"
2. மணவாளன் (கிறிஸ்து) தன்னுடைய சபையை ஏற்றுக்கொள்ள வர இருக்கிறார். அவர் அதை, தன்னுடன் இருக்கும்படியாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, முன்பு அதன் அங்கத்தினர்களாயிருந்து பின்பு அநியாயத்தில் பங்கடைந்த யாவரும் வெளியே எடுக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவார்கள்.
3. சபையில் இருப்பவர்கள் மட்டும், (அதாவது) அதில் உள்ள நீதிமான்கள் மட்டுமே நித்தியமாய் இரட்சிக்கப்படுவார்கள்.

## *இறுதியாக:*

1. இது தான் சபை - கிறிஸ்துவுக்கு சொந்தமான சரீரமான மக்களாவார்கள். நீங்கள் சபையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்களும் அதில் அங்கமாக இருக்க விரும்புகிறீர்களா?

   அ. விசுவாசியுங்கள் (யோ 8:24)

   ஆ. மனந்திரும்புங்கள் (அப் 2:38)

   இ. அறிக்கையிபுங்கள் (மத் 10:32)

   ஈ. ஞானஸ்நானம் பெறுங்கள் (அப் 2:38)

2. நீங்கள் ஒருவேளை முன்பே சுவிஷேசத்திற்கு கீழ்படிந்திருந்து, இப்பொழுது கிறிஸ்துவின் அன்பை மறந்துபோயிருந்தால், திரும்பி வந்து

உண்மையான கிறிஸ்தவராய் இருங்கள். ஏனெனில் அப்பொழுது தான் கிறிஸ்து தன்னுடைய மணவாட்டியை அழைத்து போக வரும்போது, நீங்கள் அவருடன் போக ஆயத்தமாயிருப்பீர்கள்.

அ. மனந்திரும்புங்கள் (லூக் 15:7)

ஆ. தவறுகளை அறிக்கையிடுங்கள் (யாக் 5:16)

இ. ஜெபியுங்கள்

# வாழ்க்கைக்கான சட்டங்கள்

## Rules for Life

### முகவுரை :

1. கூடாரத்தில் உள்ள சட்டங்களும், கட்டுப்பாடுகளும்.
2. எல்லா நிறுவனங்களுக்கும் சில வரைமுறைகள் உண்டு.
3. வேதாகமம் (பைபிள்) சட்டங்கள் அடங்கிய புத்தகம்.

### விவாதம் :

1. உறுதியான விசுவாசம் வேண்டும்

அ. தேவனில் (எபி 11:6)

ஆ. கிறிஸ்துவில் (யோ 14:1)

இ. வசனத்தில் (யோ 20:30,31)

ஈ. உடன் மனிதர்களிடம்.

உ. தன்னிடம்.

ஊ. விசுவாசத்துடன் நடத்தல்.

எ. விசுவாசத்துடன் செயல்படுதல்.

ஏ. வளருகின்ற விசுவாசம்.

2. உங்கள் பைபிளை (வேதாகமம்) தினந்தோறும் வாசியுங்கள்.

அ. வசனத்தை ஆராயுங்கள் (யோ 5:39)

ஆ. பகுத்து படியுங்கள் (2 தீமோ 2:15)

3. தினந்தோறும் ஜெபியுங்கள்

அ. மனிதர்கள் எப்பொழுதுமே ஜெபிக்க வேண்டும் (லூக் 18:1)

ஆ. இடைவிடாடமல் ஜெபியுங்கள் (1 தெச 5:17)

இ. தேவ சித்தப்படி ஜெபியுங்கள் (1 யோ 5:14)

4. அன்பு கூருங்கள்:

அ. தேவனை நேசியுங்கள் (மத் 22:37)

ஆ. உங்கள் அயலகத்தாரை சிநேகியுங்கள் (மத் 22:39)

5. உங்கள் பெற்றாருக்கு கீழ்படியுங்கள்

அ. இது நியாயம் (எபே 6:1-4)

6. சுத்தமான வாழ்வு வாழுங்கள்.

அ. பேச்சை சுத்தமாக வையுங்கள்.

ஆ. உடை அணிவதை கவனியுங்கள்.

இ. சுத்தமான எண்ணங்களுடையவர்களாகுங்கள்.

ஈ. நீங்கள் வாசிக்கும் காரியங்களை காத்துக் கொள்ளுங்கள்.

உ. நீங்கள் கேட்பவைகளைக் குறித்துகவனமாயிருங்கள்.

ஊ. நீங்கள் யாருடன் சேருகிறீர்கள் என்பதை கவனமாய் பாருங்கள்.

7. தங்க கட்டளையை பயிற்சி செய்யுங்கள்:

8. வேலை செய்யுங்கள்:

9. தேவனுக்கு கீழ்படியுங்கள்:

அ. சுவிஷேசத்திற்கு கீழ்படியுங்கள்.

ஆ. அவருடைய சபையில் அங்கமாகுங்கள்.

இ. கிறிஸ்தவ வாழ்வை வாழுங்கள்.

## இறுதியாக :

1. உங்கள் வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும்.
2. இந்த உலகத்தை விட்டு கடந்து செல்ல நீங்கள் ஆயத்தமாறிருப்பீர்கள்.
3. பரலோகம் உங்கள் வீடாகும்.

# சபை இரண்டாங்கெட்ட நிலைமைக்கு செல்லாமல் வைப்பது எவ்வாறு? (வெளி 3:15,16)

## How to keep the Church from becoming Lukewarm

### அறிமுகம் :

1. ஒரு சபை இரண்டாம் கெட்ட நிலைக்கு செல்வது சாத்தியமே.
2. லவதோக்கியா சபை அதற்கு உதாரணம்.
3. இப்படிப்பட்ட சபையின் நிலை

   அ. குளிருமின்றி அனலுமின்றி இருக்கும்.

   ஆ. வித்தியாசமான, உதாசினமான, எனக்குக் கவலை இல்லை என்ற ஆவி.
4. விளைவு தண்டனைக்குரியது.

### விவாதம்:

**அ. ஒரு சபையானது எவ்வாறு இரண்டும் கெட்ட நிலைக்கு செல்லும்.**

1. ஆண்டவருக்கான இடத்தை காலியாக வைத்திருப்பதினால்.
2. தன்னுடைய சொந்த போதனைகளையே விடாமல் பிடித்துக் கொண்டிருப்பது.
3. தவறான காரியங்களின் மீது முக்கியத்துவம் காட்டுவதால்.
4. எப்பொழுதுமே பயந்திருப்பதினால்.
5. எதுவுமே செய்யாதிருப்பதினால்.

**ஆ. சபை இரண்டும்கெட்ட நிலைமைக்கு போகாமல் காப்பது எப்படி:**

1. எஜமானுடன் சேர்ந்து விதைப்பதினால் (2 கொரி 9:6)
2. ஆண்டவருடைய சபையின் மீது ஒரு உற்சாகம் கொள்வதினால்; (மத்6:33) "உற்சாகமில்லாமல் சிறப்பானதொன்றும் இதுவரை பெறப்பட்டதில்லை" (ரால்ப் வால்சோ எமர்சன்)
3. தலைமைத்துவ பண்பை வளர்ப்பதினால் (1 தீமோ 3)
4. விசுவாசத்துடன் திட்டமிடுவதினால் (எபி 11:6)
5. உழைப்பதினால்.
6. விடுகளை சந்தித்து வேத வகுப்பு நடத்தும் பழக்கமிருப்பதால் (லூக் 14:23)

7. வாலிபர்பளுடன் சேர்ந்து ஆண்டவர் பணியை செய்வதினால் (பிரசங்கி 12:1)
8. விளம்பரம் (அல்லது) பிரபல்யப்படுத்துவதினால்.
9. தகுதியுடையோரை கனப்படுத்துவதினால் (ரோ 12:10)
10. சலசலப்புகளை தவிர்ப்பதினால்.
11. அச்சிடப்பட்ட செய்திகளை பரிமாறிக்கொள்வதினால்.
12. வேதாகமப் போதகர்களையும், வகுப்புகளையும் உண்டாக்கி, வளர்ப்பதினால்.

## இறுதியாக:

1. சிலர் குளிராகவும், சிலர் வெதுவெதுப்பாகவும் இருக்கின்றனர்; ஆனால், கிறிஸ்து நம்மை அனலாயிருக்கும்படி கூறுகின்றார்.
2. சபையானது வெதுவெதுப்பாய் இருக்க வேண்டாம்; மாறாக அது, எஜமானுக்காக வெற்றிநடை போட்டு முன்னேற வேண்டும்.

# மற்றவர்களைவிட நீங்கள் விஷேசித்து செய்கிறது என்ன?

What do ye more than others? (மத் 5:47)

## அறிமுகம் :

1. இயேசு தன்னுடைய சீஷர்களிடம், அவர்கள் எதையாவது செய்ய வேண்டும் என கற்பித்தார் (மத் 7:21)
2. அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொறுப்பு உண்டு என அவர் கற்பித்தார்.
3. மேலும் அவர் அவர்களுக்கு, மற்றவர்களைவிட சிறப்பானதை செய்ய வேண்டும் என கற்பித்தார்.

## விவாதம் :

**அ. இவ்வுலகில் வாழ்வதற்கான மிக உயரிய தரத்தை இயேசு போதித்தார்**

1. அது உலக தரத்திற்கு மேலானது (மத் 5:47)
2. எல்லா மத உலகின் தரத்தை எல்லாம் அது மிஞ்சி இருக்கின்றது (மத் 5:20)

**ஆ. இயேசுவின் வாழ்க்கை தரம்**

1. செயலாற்றும் தரம்.
2. தேவனை முதன்மைப்படுத்த வேண்டும் (மத் 6:33)
3. ஒருவர் தன்னையே கொடுக்க வேண்டும் (ரோ 12:1)

**இ. நீங்கள் மற்றவர்களைவிட என்ன விஷேசித்து செய்கிறீர்கள்?**

1. மற்றவர்களைவிட சிறப்பாக வாழும்படி கிறிஸ்தவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.
2. சராசரி வாழ்க்கை வாழ முடியாது.
3. நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை நிரூபிக்க என்ன செய்கிறீர்கள்?

**ஈ. மனித தரமானது போதாது**

1. நம் எதிராளிகளை கொலை செய்வதல்ல, நேசிக்க வேண்டும் (மத் 5:44)
2. ஒருவரிடம் இரு திருடுவது அல்ல, ஏழைகட்கு கொடுக்க வேண்டும் (எபே 4:28)
3. பழிவாங்குவதல்ல, எல்லாவற்றையும் ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்படைக்க வேண்டும் (ரோ 12:17-19)
4. ஆண்டவருடைய சபையில் அங்கமாக இருக்க வேண்டும் (மத் 16:18)

**உ. பரலோகம் செல்லும்படி, மற்றவர்களைவிட சிறப்பாக செயல்பட வேண்டும்.**

1. ஏதோ கொஞ்சம் செய்தோம் என்றல்ல, நிறைய செய்ய வேண்டும்.
2. மற்றவர்களும் நாம் என்ன செய்தோம் என்பதை மட்டும் ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அது போதுமானதாக இராமல் இருக்கும்.
3. நீங்கள் பரலோகம் செல்ல எவ்வளவு விருப்பம்?

## *இறுதியாக :*

1. பரலோகம் செல்லும்படியாக நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
2. முதலீடு செய்தவர்கள் மட்டுமே அறுப்பை எதிர்பார்க்க முடியும்.

# இயேசு என்ன செய்வார்? நான் என்ன செய்யும்படி இயேசு விரும்புவார்?

## What would Jesus do? What would Jesus have me do?

### முகவுரை :

1. நம் வாழ் ஒவ்வொரு மட்டத்திலும் நம் எல்லாருக்கும் எல்லா விதமான பிரச்சனைகள் உண்டு.
2. நாம் அனுமதித்தால், ஒரே ஒருவர் இவை அனைத்தையும் தீர்க்க முடியும் ; அந்த ஒருவர் இயேசுவே (1 பேதுரு 5:7)
3. ஆனால், அவர் நமக்கு உதவ வேண்டுமெனில், நாம் பின் உள்ளவற்றை கடைபிடிக்க வேண்டும்.

அ. நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் (யோ 8:24)

ஆ. நம்முடைய பிரச்சனைகளுடன் நாம் அவரை அணுக விரும்ப வேண்டும்.

இ. நாம் நன்மை பெற வேண்டுமெனில் அவருடைய ஆலோசனையை பின்பற்ற வேண்டும்.

### விவாதம்:

**அ. மத வட்டாரத்தில் இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. சுவிஷேசத்திற்கு கீழ்படிய வேண்டும் (2 தெச 1:7-9)
2. அவருடைய சபையில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் (யோ 3:3-5)
3. ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் (யோ 4:24)
4. கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும் (வெளி 2:10)

**ஆ. ஒழுக்க விஷயங்களில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. ஒரு நல்ல ஒழுக்கமான வாழ்வு வாழ வேண்டும் (1 தெச 5:22)
2. சுத்தமாக இருக்க வேண்டும் (1 தீமோ 3:9)
3. நல்ல கூட்டாளிகளை வைத்துக் கொள்ள வேண்டும் (1 கொரி 15:33)

**இ. பொழுதுபோக்கும் விஷயங்களில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. நன்மையும், முழுமையுமான விஷயங்களை மட்டுமே செய்ய வேண்டும்.
2. நான் பொழுதுபோக்கிற்காக செய்யும் இவ்விஷயத்தை இயேசு செய்வாரா?

**ஈ. தொழில் விஷயங்களில் - இயேசு நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. நான் நேர்மையும், உண்மையுமாய் இருக்கும்படி விரும்புவார் (லூக் 6:31)
2. எப்பொழுதுமே நான் கிறிஸ்தவனாக இருக்கும்படி விரும்புவார்.
3. ஆர்வத்துடன் செய்ய வேண்டும் (2 தெச 3:10)

**உ. படிப்பு விஷயத்தில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. எவ்வளவு படித்தாலும், நான், மனித தத்துவங்களுக்கெல்லாம் மேலாக தேவனுடைய வார்த்தையை வைக்க வேண்டும் என விரும்புவார் (1 கொரி 3:18-21)
2. நான் அதிகம் படித்திருந்தால் பெருமை அடையக் கூடாது (கொலே 2:18)

**ஊ. சமுதாயத்தில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. என்னுடைய அயலகத்தானை நேசிக்க வேண்டும் (மத் 5:43)
2. எல்லாரிடமும் நன்றாக பழகலாம்; ஆனால், யாராயிருந்தாலும், அவர்கள் தீமையானவர்களாக இருப்பினும் தேவையுள்ள அனைவருக்கும் சுவிஷேசம் சொல்லவேண்டும் (மத் 9:12,13)

**எ. திருமண விஷயத்தில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. ஆண்டவருக்கள் திருமணம் செய்ய வேண்டும் (2 கொரி 6;14)
2. வசனத்தின்படியான திருமணத்தை மதிக்க வேண்டும் (மத் 19:3-12)

**ஏ. குடும்பத்தில்-நான் என்ன செய்யும்படி இயேசு விரும்புவார்?**

1. அன்பு நிலைக்க வேண்டும் (எபே 5:22-33)
2. கிறிஸ்தவனாக - கிறிஸ்துவைப் போலவே இருக்க வேண்டும்.

**ஐ. அரசியல் விஷயங்களில் - இயேசு, நான் என்ன செய்யும்படி விரும்புவார்?**

1. நீதியை நிலைநிறுத்த வேண்டும்.

2. நம்முடைய பிள்ளைகள் அரசாங்கத்தை மதிக்கும்படி பயிற்சியளிக்க வேண்டும் (ரோ 13:1-7)

## இறுதியாக :

1. இயேசு நமக்கு உதவ முடியும்.
2. வாழ்வின் நம்முடைய எல்லா குறைகளையும் தேவனிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்வோம்.

# இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன?

மாற்கு 16:16; ரோ 8:24; அப் 16:30

What it means to be saved?

## முகவுரை :

1. ஒருவர் எதிலிருந்து வேண்டுமானாலும் காப்பாற்றப் படலாம்.
2. உண்மையில் இரட்சிப்பு என்றால் ஒருவர், பாவத்தில் இருந்து விடுவிக்கப்படுதல் (அ) காப்பாற்றப்படுதல் (அல்லது) பாவ மன்னிப்பை பெறுதல் என்பதாகும்.
3. இப்பகுதி இரட்சிப்பைப் பற்றியதாகும்.

## விவாதம் :

அ. இரட்சிக்கப்பட

1. ஒருவர் பாவத்தில் இருக்கிறார் என்ற உணர்வை பெற நாம் உதவனும் (ரோ 3:10)
2. தன்னுடைய சொந்த வழியில் முயல முடியாது (எரே 10:23)
3. பாவத்தின் விளைவுகள் (லூக் 16)

ஆ. இரட்சிக்கப்படுதல் என்பது இரண்டு விதத்தில் பயன்படுத்தப்படுகின்றது

1. பழைய பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டது - இப்பொழுது இரட்சிப்படைந்தது.(மாற்கு 16:16; அப் 2:38; 16:31)

அ. ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பும் பாவத்தில் விழ முடியும்.

ஆ. ஏனென்றால் அநேகர், ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்பொழுதுமே இரட்சிக்கப்பட்ட நிலை உண்டு (பாவம் செய்தாலும்) என்று எண்ணுகின்றனர்.

2. நித்தியமாக இரட்சிக்கப்படுதல் (ரோ 8:24; வெளி 2:10; 1 பேதுரு 4:18)

அ. ஒருவர் நித்தியத்திற்குமாய் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும்.

ஆ. நியாயத்தீர்ப்பு மட்டுமே இறுதி பதில் கொடுக்கும்.

**இ. இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன :**

1. அதாவது, ஒருவர் பாவத்திலிருந்து மன்னிப்பு பெற்றுவிட்டார் என்று அர்த்தம்.
2. அதாவது, ஒருவர் தேவனை முதன்மையாக வைத்துள்ளார் என்று அர்த்தம் (மத் 6:33)
3. அதாவது, ஒருவர்க்கு நித்திய வாழ்க்கைக்கான உறுதி உண்டு என்று அர்த்தம்.
4. ஒருவர் கிறிஸ்தவர் என்று அர்த்தம்.
5. ஒருவர் கிறிஸ்துவினுடைய சபையில் அங்கம் என்பதாகும் (அப் 2:47)

## *இறுதியாக :*

1. ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பும், பாவத்தில் விழுந்து தேவனை பிரிய முடியும் (எபி 3:12-14)
2. சுவிஷேத்திற்கு கீழ்படிய வேண்டும்; மேலும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராட வேண்டும் (ரோ 6:17; 1தீமோ 6:12)
3. நம்முடைய எல்லா முயற்சிக்கும் ஏற்ற மற்றும் அதிகமான பரிசு பரலோகம்.

# தெய்வீக அழைப்பு

## The Divine Calling (எபி 3:1)

## அறிமுகம் :

1. அநேக அழைப்புகள் உண்டு
   - அ. விடுமுறைக்கான அழைப்பு.
   - ஆ. பொறுப்புகளை நிறைவேற்ற அழைப்பு.
   - இ. உலகத்தின் அழைப்பு.
   - ஈ. மரணத்தின் அழைப்பு.
2. மிக முக்கியமான அழைப்பு பரிசுத்த அழைப்பாகும்.
3. அந்த அழைப்பை ஏற்கவோத, மறுக்கவோ முடியும்.

## விவாதம் :

**அ. இப்பாடத்துடன் தொடர்புடைய ஏமாற்றுத் தன்மைகள் :**

1. அநேகர், தங்கள் இருதயங்களில் நேரடியாக ஆவியானவரின் கிரியையின் மூலம் தேவனால் அழைக்கப்பட்டதாக நம்புகின்றனர்.
   - அ. சிலருக்கு கனவு வரும்.
   - ஆ. இன்னும் சிலர், ஏதாவது அடையாளங்களை காணுவார்கள்.
   - இ. இன்னும் சிலர், மெதுவான ஏதாவது சத்தம் கேட்பார்கள்.
2. இன்னும் சிலர், தாங்கள் பிரசங்கம் செய்ய ஏதோ அற்புத விதமாக அழைக்கப்பட்டதாக எண்ணுவர்.
3. ஆனால் இவற்றில் ஒன்றுமே வசனத்தின்படியானது இல்லை.

**ஆ. பைபிளின்படி நம்மை அழைப்பவர்கள்:**

1. தேவன் நம்மை அழைக்கின்றார் (ரோ 11:29)
2. கிறிஸ்து நம்மை அழைக்கின்றார் (மத் 11:28-30)
3. சுவிஷேசம் நம்மை அழைக்கின்றது (2 தெச 2:14)
4. சபை நம்மை அழைக்கின்றது (வெளி 22:17)
5. வசனம் நம்மை அழைக்கிறது (2 தீமோ 3:16,17)

**இ. தெய்வீக அழைப்பின் குணாதசியங்கள்:**

1. இது ஒரு பரிசுத்த அழைப்பு (2 தீமோ 1:9)
2. இது ஒரு பரலோக அழைப்பு (எபி 3:1)

**ஈ. இந்த அழைப்பினால்...**

1. ஒருவர் தேவனை நம்பும்படி அழைக்கப்படுகிறார் (எபி 11:6)
2. ஒருவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பும்படி அழைக்கப்படுகிறார் (அப் 17:30)
3. ஒருவர் கிறிஸ்துவை அறிக்கை செய்யும்படி அழைக்கப் படுகிறார் (மத் 10:32)
4. ஒருவர் திருமுழுக்குப் பெறும்படி அழைக்கப்படுகின்றார் (மாற்கு 16:16)
5. ஒருவர் சபையின் அங்கமாகும்படி அழைக்கப்படுகின்றார் (எபே 5:23)
6. ஒருவர் கிறிஸ்தவராகும்படி அழைக்கப்படுகிறார் (1 பேதுரு 4:16)
7. ஒருவர் தேவனை ஆராதிக்கும்படி அழைக்கப்படுகிறார் (யோ 4:24)
8. தேவனுடையவேலைகளைசெய்யும்படிஒருவர்அழைக்கப்படுகிறார் (பிலி 2:12)
9. ஒருவர் ஆண்டவருக்கு விசுவாசமாய் (உண்மையாக) இருக்கும்படி அழைக்கப்படுகிறார் (வெளி 2:10)
10. ஒருவர்தன்னுடைய அழைப்பையும், தேர்வையும் உறுதி செய்யும்படி அழைக்கப்படுகிறார் ( 2 பேதுரு 1:10)

**உ. இந்த அழைப்பின் நோக்கம்:**

1. ஒருவர் சமாதானம் அடைய (1 கொரி 7:15)
2. ஒருவர் சுதந்திரம் பெற (கலா 5:13)
3. ஒருவர் நம்பிக்கை அடைய (எபே 4:4)
4. ஒருவர் இரட்சிப்படைய (1 தீமோ 6:12)

## *இறுதியாக :*

1. ஒருவர் ஆண்டவருடைய அழைப்பை கேட்டால் மட்டும் போதாது - இரட்சிக்கப்படும்படி அதற்கு பதிலளிக்க வேண்டும்.

2. மேலும், ஒருவர் இந்த அழைப்பிற்கு பதில் அளிக்கும்படி தேவனுடைய சித்தத்தை பின்பற்ற வேண்டும்.

3. அவருடைய அழைப்பிற்கு பதில் கொடுத்தோர், ஏற்ற ஆசீர்வாதம் பெற்றனர்- ஆகையினால் சரியான தீர்மானம் செய்யுங்கள்.

# நாம் சாகும்வரை இங்கே அமர்ந்திருப்பது என்ன ? (2 இராஜா 7:1-20)

## Why sit we here until we die?

### அறிமுகம் :

1. 4 குஷ்டரோகிகளின் சம்பவத்தை வாசியுங்கள்.
2. அங்கே கேட்கப்பட்ட கேள்வி பெரியது; மேலும் சிந்திக்க வேண்டியது.
3. நம்முடைய கேள்வியும் அதேப்போல்: நாம் மரிக்கும்வரை இங்கே சும்மா உட்கார்ந்திருக்கலாமா?

### விவாதம் :

**அ. ஏன் ஒரு தனிநபர் சுவிஷேசத்திற்கு கீழ்படியாமல் உட்கார்ந்திருந்து மரிக்க வேண்டும்?**

1. தேவனுடைய சித்தம், எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது (1 தீமோ 2:4)
2. இப்பொழுதே ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் மற்றும் இன்றே இரட்சன்ய நாள் ( 2 கொரி 6:2)

**ஆ. ஏன் ஒரு கிறிஸ்தவன் சும்மா உட்கார்ந்து ஆவிக்குரிய வாழ்வில் மரிக்க வேண்டும் ?**

1. கிறிஸ்தவர்கள் தேவபக்திக்குரியவைகளை பயிற்சி செய்ய வேண்டும் (1தீமோ 4:7)
2. முதலின் திருவசனமாகிய பாலையும், பின்பு சக்தியுள்ள மாம்சத்தையும் பழக வேண்டும் (1 பேதுரு 2:2; எபி 5:12-14)
3. ஆண்டவருடைய வேலையில் தினமும் பெருக வேண்டும் (1 கொரி 15:58)

**இ. ஏன் ஒரு நபர், தேவனை ஆராதியாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந்து மரிக்க வேண்டும்?**

1. ஒவ்வொரு சபை கூடுகைகளிலும் பங்கு பெற வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை (எபி 10:25)
2. விசுவாசமாய் இருக்கும்படி ஒருவர் ஆண்டவருடைய ஜனங்களை சந்தித்து ஆராதனையில் பங்குபெற வேண்டும் (அப் 20:7)
3. தேவனை ஆராதிக்க கொஞ்சம் பிரயாசம் எடுக்க வேண்டும் (யாக் 1:12)

**ஈ. ஏன் ஒரு தனிநபர் சும்மா உட்கார்ந்திருந்து, மற்றவர்கள் மரித்து நரகம் செல்ல வேண்டும்?**

1. ஆண்டவர், தன்னுடைய ஜனங்களிடம் சுவிஷேசத்தை உலகத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறார் (மாற்கு 16:16)
2. ஒவ்வொரு கிறிஸ்தவனும் வசனத்தை வாயாரவும், உதாரணமான வாழ்க்கையினாலும் பிரசங்கிக்க வேண்டும் (2 தீமோ 4:2)

**உ. ஏன் அம்மா உட்கார்ந்திருந்து நரகம் செல்ல வேண்டும்?**

1. எழுந்திருந்து ஆண்டவருக்கு கீழ்படியுங்கள் (எபி 5:8,9)
2. ஒவ்வொரு தனிநபரும் தன் இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டும்.

**ஊ. ஏன் சும்மா உட்கார்ந்திருந்து மரிக்க வேண்டும்?**

1. ஒருவர் மரிக்கலாம்; ஆனால் அதற்கு தன்னை ஆயத்தம் செய்ய முடியும் (ஆமோஸ் 4:12)
2. எல்லா ஆத்துமாவும் மரித்து ஒவ்வொன்றும் நியாயத்தீர்பிற்கு முன் வர வேண்டும் (எபி 9:27)

**எ. ஏன் சும்மா அமர்ந்திருக்கனும்?**

1. சோம்பேறித்தனம் யாரையுமே எங்குமே உயர்த்தியதில்லை (மத் 25; 31-46)
2. ஒவ்வொரு ஆத்துமாவும் சுறுசுறுப்புடன் இருக்கும்படி ஆண்டவர் விரும்புகிறார் (அப் 22:16)
3. இரட்சிக்கப்படும்படி கீழ்படிதலும், விசுவாசமும் அவசியம் (வெளி 2:10)

## இறுதியாக:

1. நீங்கள் அமர்ந்திருந்து மரிக்கவோ, அல்லது எழுந்திருந்து வாழ்ந்திருக்கவோ முடியும்.
2. ஒவ்வொரு ஆத்துமாவும் முயல வேண்டும்-முயற்சி செய்வதில் தவறில்லை.
3. முயற்சி செய்தவர்களில் வெகு சிலரே தோல்வியடைகின்றனர்; அநேகர் வெற்றி பெறுகின்றனர்.

# திருமுழுக்கினால் செய்ய முடியாத காரியங்கள்

## Things that Baptism won't do

## முகவுரை :

1. திருமுழுக்கு என்பது சுவிஷேசத்தின் ஒரு பகுதி என பைபிள் போதிக்கின்றது ( மாற்கு 16:15,16)
2. திருமுழுக்கு நம்மை இரட்சிக்கின்றது என்றும் பைபிள் போதிக்கின்றது (1 பேதுரு 3:21)
3. சபைக்குள் (அல்லது) கிறிஸ்துவுக்குள் நுழைய ஒருவர் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற வேண்டும் (ரோ 6:3; 1 கொரி 12:13)
4. ஞானஸ்நானம் (திருமுழுக்கு) அநேக காரியங்களை செய்யும்; ஆனாலும், அது செய்ய முடியாத சில காரியங்கள் உண்டு.

## விவாதம்

**அ. விசுவாசத்தின் இடத்தை ஞானஸ்தானம் எடுத்துக் கொள்ளாது.**

1. தேவனை பிரியப்படுத்த விசுவாசம் வேண்டும் (எபி 11:6)
2. ஞானஸ்நானத்திற்கு முந்தைய தேவை விசுவாசம் (மாற்கு 6:16)
3. விசுவாசமில்லாமல் ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது (யோ 6:36-40)

**ஆ. மனந்திரும்புதலின் இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளாது.**

1. ஒருவர் மனந்திரும்ப வேண்டும் அல்லது அழிந்து விடுவார் (லூக் 13:3)

2. எங்குமுள்ள எல்லா மனுஷரும் மனந்திரும்பும்படி எதில்பார்க்கப்படுகின்றனர் (அப் 17 :30)

3. ஞானஸ்நானத்திறுகு முந்தைய தேவை மனந்திரும்புதல் (அப் 2: 38)

**இ. அறிக்கையிடுதலின் இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளாது**

1. கிறிஸ்து நம்மைப் பற்றி அறிக்கை செய்ய வேண்டுமெனில், நாம் அவரை அறிக்கை செய்யனும் (மத் 10 : 32)

2. ஒருவர் இரட்சிக்கப்படும்படியாக வாயினாலே அறிக்கையிட வேண்டும் (அப் 8:35-39)

3. அறிக்கையிடுதல் ஞானஸ்நானத்திற்கு முந்தைய செயல் (அப் 8: 35-39)

**ஈ. சபையினுடைய இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளாது (1 கொரி 12:13)**

1. ஞானஸ்நானம் ஒருவரை சபைக்குள் உட்படுத்துகிறது.

2. சபையானது மிக முக்கியம்; மேலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (எபே 5:23)

3. ஒருவர் பரலோகம் செல்லும்படி சபையின் அங்கமாக இருக்க வேண்டும் (எபே 5:27)

**உ. கிறிஸ்தவ வாழ்வின் இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளாது:**

1. ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில் ஞானஸ்நானம் பெற வேண்டும். (கலா 3:26,27)

2. கிறிஸ்தவரான பின், ஒருவர் கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும் (1 பேதுரு 4:16)

3. ஒரு கிறிஸ்தவர் தன்னிடம் கிறிஸ்தவ பண்புகளை (இரக்கங்களை) சேர்த்துக் கொள்ள வேண்டும் (2 பேதுரு 1:5-11)

**ஊ. கிரியையின் இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளாது**

1. ஒவ்வொரு ஆத்துமாவும் தன் சொந்த இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்பட வேண்டும் (பிலி 2:12)

2. தினந்தோறும் ஆண்டவருடைய வேலையில் பெருக வேண்டும் (1 கொரி 15:58)

**எ. சோதனை வராமல் ஞானஸ்நானம் ஒருவரைக் காப்பாற்றாது**

1. ஆண்டவரும் கூட சோதிக்கப்பட்டார் (மத் 4)
2. கிறிஸ்தவர்கள் சோதிக்கப்பட்டாலும் தப்பிப்பதற்கான வழியை ஆண்டவர் உண்டுபண்ணுவார் ( 1 கொரி 10:12,13)

**ஏ. கிருபையிலிருந்து ஒருவர் விழாதபடி ஞானஸ்நானம் ஒருவரைக் காப்பாற்றாது**

1. ஒரு கிறிஸ்தவன் கிருபையிலிருந்து விழக்குடும் (கலா 5:4)
2. மனந்திருந்திய மைந்தனின் (கெட்ட குமாரன்) சம்பவத்தை யோசியுங்கள் (லூக் 15)

**ஐ. உண்மையாய் (உறுதியாய்) இருப்பது இல்லாமல் ஞானஸ்நானம் மட்டும் இரட்சிக்காது**

1. ஆண்டவர் தன் ஜனங்களை, உண்மையாய் இருக்கும்படி விரும்புகிறார் (வெளி 2:10)
2. ஒருவர் இறுதிவரை உறுதியாய் இருக்கனும் (மத் 10:22)
3. கீழ்படிதலின் இடத்தை எதுவும் ஈடுசெய்யாது. (வெளி 22:14)

**ஒ. ஞானஸ்நானம் மட்டுமே இரட்சிக்காது**

1. பைபிளின்படி ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கின்றது (1 பேதுரு 3:21)
2. ஆனால் ஞானஸ்நானம் மட்டுமே எப்பொழுதுமே யாரையும் இரட்சித்ததில்லை (அப் 19)

## *இறுதியாக:*

1. எல்லாருமே இரட்சிப்படையும்படி ஆண்டவர் விரும்புகிறார் (2 பேதுரு 3:9)
2. அதே நேரம், எல்லாருமே தனக்கு கீழ்படிய வேண்டும் என அவர் விரும்புகிறார் (எபி 5:8-9)
3. அவருக்கு கீழ்படியும்படி போதிய விசுவாசம் உடையவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (மத் 7:21)